உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அன்னியூர்த்தலபுராணம்

## தோத்திரப்பதிகங்கள்.

இவை

கோயமுத்தூருக்கடுத்த சிரவணபுரம்

கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்

மாணாக்கர்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளால்

இயற்றப்பட்டு

அவிநாசி தாலூகா குமாரபாளையம்

ஷை தேவஸ்தான தருமகர்த்தர் சைவத்திருவாளர்

சி. ந. கறுப்பகவுண்டரவர்களால்

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்று

மஹா கும்பாபிஷேக தினத்தில்


பிரசுரிக்கப்பட்டன.

ஈஸ்வர ௵ இடபரவி.

1937.

உ

சிவமயம்.



அன்னியூர்

ஸ்ரீ மன்னீஸ்வரர் சுயம்புலிங்கம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

பழகுந் தொண்டர்வம் அழகன் அன்னியூர்க்
குழகன் சேவடி தொழுது வாழ்மினே.

(திருஞானசம்பந்தர்).

எம்பி ரான்இமை யோர்கள் தமக்கெலாம்
இன்ப மாகி இருந்தஎம் ஈசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கன்ப ராகிநின் றார்அன்னி யூரரே.

(திருநாவுக்கரசு).

"அன்னியூர்த்தலபுராணம்" என்னும் இந்நூலுக்கு முகவுரை எழுதும்படி இந்நூலாசிரியரால் எனக்கு ஆணைகிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன்.

அன்னியூர் என்பது ஒரு சிவஸ்தலம். கோயமுத்தூருக்கு வடக்கே சத்தியமங்கலத்திற்குச் செல்லும் வழியில் 21-கல் தூரத்திலிருக்கின்றது. சனிக்கிழமைதோறும் சந்தை கூடும் இடம். (இப்பெயர் பெற்ற வேறொரு சிவதலம் சோழ நாட்டில் இருக்கிறது. மேலே காட்டியுள்ள தேவாரப் பாசுரங்கள் அத்தலத்திற்கு உரியவை). இத்தலப்பெயர் இப்போது அன்னூர் என மருவி வழங்குகிறது.

தலபுராணம் என்பது "ஒரு நாமம் ஓருரும் ஒன்றும் இல்லாத பரம்பொருள்." உயிர்க்கூட்டத்தை உய்விக்கும் பொருட்டுக் குறிப்பிட்ட ஒரு தலத்தில் உருவமும் பெயரும் உடையவனாக வெளிப்போந்து உண்மை அன்பர்களுக்குத் திருவருள்புரிந்த பழமையான வரலாறுகளைக் கூறும் நூலாகும். (புராணம்=பழமையான கதை).

தலத்தின் பெயர்க்காரணம் :—

அன்னி எனப் பெயரிய வேடன் நிலத்தைக் கல்லிய போது சிவபெருமான் வள்ளிக்கிழங்கு வடிவமாக வெளிப்பட்டுப் பின் இலிங்கவடிவங்காட்டி எழுந்தருளி அவனுக்கு அருள் புரிந்தமையால் அவ்வூருக்கு அன்னியூர் என ஏற்பட்டது என்றும், இக்கலியுகத்திற்கு முந்தியவையான கிரேதயுகத்தில் வன்னியூரென்றும், திரேதயுகத்தில் வானியூரென்றும், துவாபரயுகத்தில் வள்ளியூரென்றும் பெயர்பெற்றிருந்தது என்றும்,

ஸ்வாமியின் திருப்பெயர்கள் :—

கிருதயுகத்தில் வன்னிலிங்கம், திரேதயுகத்தில் வானிலிங்கம், துவாபரயுகத்தில் வள்ளிலிங்கம், கலியுகத்தில் மன்னிலிங்கம் என அமைந்ததாகவும் இந்நூல் கூறுகின்றது.

அம்மன் பெயர் :—

அருந்தவச்செல்வி தபோதகசௌந்தரி. இத்தலத்தில் சிவலிங்கம் இறகுகளோடு அமைந்திருப்பதாகவும், அம்மையின் திருவுருவம் உளியால் செய்யப்படாததாகி, அக்காலத்தே கோயிற்றிருப்பணி செய்த சேரவேந்தனுக்குச் சுயம்புவாய்க் கிடைத்தது என்றும் கூறுகின்றனர்.

இத்தலத்தில் திருவருள்பெற்றுய்ந்தவர்கள் :—

கிருதயுகத்தில் பிரமதேவனும், திரேதயுகத்தில் வியாசபகவானும், துவாபரயுகத்தில் மார்க்கண்டமுனிவரும், கலியுகத்தில் அன்னி என்னும் வேடன், அவன் மனைவி, சேரமன்னன் முதலியோருமாவர்.

கோயிற்றிருப்பணி செய்தோர் :—

செம்பியப்பதியிலிருந்து அரசாண்டுவந்த சேரமன்னன். அவனுக்குத் துணையாயிருந்தோர் கத்தூரி ரங்கப்பன், சடையப்பன், கச்சியூர்ச்சமயன் என்போர்.

இக்காலத்தில் குமாரபாளையம் கருப்பகவுண்டர் எனப் பெயரிய புண்ணியசீலர் சுமார் பதினெட்டாண்டுகளாகப் பல இடையூறுகளையும் வென்று இத்தலக் கோயிற்றிருப்பணியை நிறைவேற்றியுள்ளார். இவரது வேண்டுகோளாலேயே இந் நூல் ஆக்கப்பெற்றது.

நூலாசிரியர் :—

வண்ணச்சரபந் திருப்புசழ்ச்சு வாமிதண்ட பாணியேனும்
அண்ணல்முருக தாசன்அருள் அமுதவாரி தனைமுகந்து
மண்ணில்இடித்து மின்னுமல் வழங்கும்இராமா நந்தமுகிற்
றண்ணந்துளியால் விளைந்தமுத்தம் தனைநேர்கந்த சாமியே.

கோயமுத்தூரின் வடக்கு ஐந்துகல் தூரத்தில் அமைந்த சிரவணபுரம் (செவ்வணன்பட்டி) கௌமாரமடத்தின் அடியார் சபையின் தலைவராக இருந்து, செந்தமிழ்வளம் பழுநிய சந்தச் செய்யுட்களையும் பல பிரபந்தங்களையும், பத்தமான்மியம் என்னும் பாரகாப்பியத்தையும் இயற்றியவரும், அன்பர்குழாம் துன்பந் தீர்ந்து உய்தற்பொருட்டு வெள்ளிக்கிழமைதோறும் செஞ்சொல்மாரி சுரந்து பெய்பவரும், தம் நாட்கடமைகள் ஒழிந்தநேரங்களையெல்லாம் அறிவுநூல்களை ஆய்தலிலும் அன்புடையாருக்கு உபதேசித்தலிலுமே பயன்படுத்தி, வெற்றுரவாரத்தில் வீழாதவரும் துறவிக்குரிய பண்பனைத்தும் ஒருங்கு வாய்க்கப்பெற்றவரும் இந்நூலாசிரியருமான கந்தசாமி சுவாமிகளுக்கு எந்தச்சாமிகளும் இணையாகார் என்பது இவரோடு ஒருநாட் பழகியவரும் எளிதில் உணர்வர்.

இவரது ஏனையவரலாறுகள் எல்லாம், இவராற் பாடி இதற்கு முன் பதிப்பிக்கப்பெற்ற பல நூல்களிலும் உள்ள முகவுரைகளிலும் சாத்துகவிகளிலும் தெள்ளிதிற் கூறப்பெற்றிருத்தலின் அவற்றையே மீண்டும் இங்கு எடுத்துக்கூறுவது மிகையென எண்ணி எழுதாது விடுக்கின்றேன்.

இச்சுவாமிகளின் பன்னூலாராய்ச்சித்திறனும், பத்திச் சுவையும், மற்றைச்சுவையும் சொட்டச் சொட்டப் பாடும்

கவித்திறனும், பரசிவத்தின் திருவடித்தாமரையினூற்றெடுக்கும் சிவானந்தத் தேனைப்பருகிக் களித்துக்கிடக்கும் வண்டோரனைய திருவுளத்தின் திறனும், இந்நூலை மேற்போக்காக ஒருமுறை யோதுவார்க்கும் எளிதிற் புலனாகும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டினை இதன்கீழ்க் குறிக்கின்றேன்.

நூலாராய்ச்சி :—

பாயிரத்தில் க, உ, ச, ரு, அ, கூ, கஉ-ம் கவிகள் திரிபு என்னும் சொல்லணி பெற்றுத் திகழ்கின்றன. அவற்றுள் முதற்பாட்டில் " அறுகம்புல்லமை பூசனைபுரிவார்ப் புனிதவீடு செல்லவைக்குங் கருணையுளான் " என்ற பகுதி " குடங்கைநீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக் குஞ்சரமும் படங்கோள்பாயும் பூவணையுந்தருவாய் மதுரைப்பரமேட்டீ " என்ற பரஞ்சோதியாரின் வாக்கையும் வென்றுவிளங்குகிறது.

" என்னுளத்திற்கலந்துநின்று தித்திக்கும்பாச், சொல்லவைக்கும் பதமளிக்கும் பொருணிறைக்குமவன் " என்றது " எனதுரை தனதுரையாக........ஏறுகந்தேறிய நிமலன் என்ற தமிழ்மறைப் பகுதியையும் சந்ததமுமெனதுசெய லினது செயல் " என்ற தாயுமானவர் திருவாக்கையும் நினைவூட்டுகின்றது.

உ-ம் கவியில், தம்மில் ஒவ்வாதனவாய கடுக்கைத்தொடையலையும் என்பையும் அணிந்திருத்தற்கு ஏற்றியதற்குறிப்பும், என்பணிந்தென் பணியேற்கை யறிவித்தென்பதிலுள்ள மடக்கணியும் பெரிதும் இன்பம்பயப்பன.

ஏழாம்பாட்டில் " போய்யுடலின்மருவிநின்றே மெய்ப்பரவீட்டமைந்து " என்றது " சித்தாந்தத்தே........சீவன்முத்தராகவைத் தாண்டு....ஞானிவாரிமடுத்து........பதமலர்க்கீழ்வைப்பன் " (சிவஞானசித்தி) என்ற திருவாக்குக்கு உதாரணங்காட்டி நிற்கின்றது.

மாணிக்கவாசகர் துதியாகிய ௯-ம் பாட்டின் முதல் இரண்டு வரிகள்,

“நாடகத்தாலுன்னடியார் போனடித்துநானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்”

என்னும் திருவாசகத்திற்கு இணைவாசகமாய் அமைந்திருக்கின்றது.

௪௦-ம் செய்யுள் சுத்தாத்துவிதத்தின் பொருளை விளக்கி நிற்பதோடு, பொய்கண்டார் காணப்புனிதமிகு மத்துவித மெய் கண்டா”னது பெருமையையும் விளக்குகின்றது.

நாட்டுப்படலத்தில் ஏனைய புலவர்கள் பன்னிப்பன்னிப் பாடிய கொங்குநாட்டின் சிறப்பையெல்லாம் பன்னிருபாட்டிற் பொதிந்துவைத்த இவ்வாசிரியரின் திறமை பாராட்டற்பாலது. அப்பாடல்களின் வைப்பு முறையில் சிறந்த கருத்துண்மை யோர்ந்துணரற்பாற்று.

குறிஞ்சிநில வருணனைப்பகுதியில் மலைகளை, முருகன், சிவன், திருமால், பிரமன், வேடர் என்போருக்கு உவமையாக்கிக் கூறும் சிலேடைநயம் புலவர்களுக்குப் பேரின்பம் அளிக்கும்.

இப்படலத்தின் ௨௯-ம் செய்யுளில் “சண்முகப்பெருமானென்னத்தரையில்வாழ் மாந்தர்தம்மை, விண்முகங் காணஎன்பான் மேவுதிரென்றழைக்கும், தண்முகத்தருவி” என்ற தற்குறிப்பேற்றம் குன்றுதொறுஞ்சென்று குமரனை வழிபடுவோருள்ளத்தில் என்றும் குடியிருக்கத்தக்கது.

முல்லைநில வருணனையில் (௨௬-ம் பாட்டு) இடையர்களுக்கு அமுதர்கள் என்ற பெயருண்மைக்கும் (௨௮-ம் பாட்டில்) முல்லை நகைத்தற்கும் காட்டும் ஏதுக்கள் நமக்கு அதிசயத்தையும் நகைப்பையும் விளைப்பன.

மருதநில வருணனைப்பகுதியில் பானீர் பிரித்துண்ணும் அன்னங்களுக்கு, மலத்தைப்போக்கி இன்பநுகரும் அன்பர் களையும்; நதி பெருங்கால்களாகவும் சிறுகால்களாகவும் வயலி னளவுக்கு, ஏற்பச் செல்வதற்கு அருந்தவச் செல்வியாகிய அம்மையொருத்தியே அன்பர்களின் தவத்தினளவாகப் பல வேறு சத்திகளென நின்று பலன் தருதலையும் உவமையாக்கி யிருத்தல் பாராட்டத்தக்கது.

நெற்பயிர் நடுங்கால் பொன்மையாயும், வளருங்கால் பசு மையாயும் முதிர்ந்து வெண்மையாயும் மும்மூர்த்திகளையும் முறையே ஒப்பதாக (சo பாட்டு)க் கூறியுள்ளது சிறந்த நயமுடையதாகும்.

சிறக்குமிருமைப் பயன்களெல்லாம் என்னும் (சரு-ம்) செய்யுளில் கூறியுள்ள வேளாளரிலக்கணத்துக்கு இந்நூலாசிரி யர் ஒரு சான்ருய் அமைந்ததன்றித் தம்மை அடைந்தோரை யும் பயிற்றுகின்ருர்.

நகரப்படலம் ரு-முதல் எ-வரையுள்ள கவிகள் மெய்த் தொண்டரியல்பை நன்கு விளக்குகின்றன. சா-ம் செய்யுளில்,

"திருந்துமேய் யடியாரின்பச் சேவையாந் தரிசனத்தின்
விருந்துதம் விழிகட்கூட்டி விருந்தவர்க்கிடுவர் மாதோ"

என்பது நயம்படவமைந்துள்ளது.

மூர்த்திமகிமைப்படலத்தில், கொலைபுலைக்கஞ்சாத வேட் டுவ மரபிற்ருேன்றியும் அன்னியென்பாள் தூயஉணவும் ஒழுக் கமும் வாய்ந்திருந்தமையை ஆசிரியர் வியந்துகூறி நம்மையும் வியப்பிக்கின்ருர். "குலத்தளவே யாகும்குணம்" என்ற முதுமொழி பிழைபடுவதற்குத் தக்க ஏதுவும் கூறுகின்ருர். கிழங்கின் வடிவாயிருந்த பெருமானைக்கண்டதிசயத்துச் சேரன் அன்பாலும் வியப்பாலும் அறைந்தனவாகக் கூறும் பாடல்கள் (உக—ருக) உள்ளத்தை உருக்குவன. சேரன்பணிசெய்படலத் தில் "விப்பிரர் வேதவோசை, சுரருலகளவியார்ப்பத் தூயசெந்தமிழ்த் தேவாரம்"........என்பதால் தமிழ் மறைகளின்பால் ஆசிரியர்க்

குள்ளபற்று நன்கு புலனும். அத்தொடர் "நிலக்கலமும், பொற்கலமு மன்னமறையும் புகழ்வோர் சொற்கலையும்" என்ற திரு வாக்கை (வெங்கையுலா) நினைப்பிக்கின்றது.

திருப்பணிமுடிவில் சேரன் துதித்ததாக நமக்குக் கதை சொல்லி இவ்வாசிரியர்தாமே மன்னீசரை ஒரு பதிகத்தால் துதிக்கின்றார். அவற்றை ஓதும்போது, "அடையாளம்பட வொருவனடித்த் கொடுஞ்சிலைத்தழும்பும்" என்ற திருவிளையா டற்செய்யுள் முதலியவை தமிழ்ப்புலவோருக்கு நினைவில்வரும்.

தலோத்தாரணப்படலத்தில் சேரன் செய்த திருப்பணி யினும் கறுப்பண்ண கவுண்டர் செய்த திருப்பணியால் வரும் புண்ணியம் சிறந்ததென்பதற்கு ஆசிரியர் காட்டும் காரணம் மிகப்பொருத்தமாயும் நயமானதாகவுமிருக்கின்றது.

இன்னும் கும்பாபிடேகமுறை, அபிடேகமுறை, திருக் கோயிற்கட்டட உறுப்புக்கள், வேளாண்குலத்திற்றோன்றிய பெரியோர்கள் வரலாறு, கொல்லாமையின் சிறப்பு முதலிய பலவற்றை ஆசிரியர் நன்கு விளக்கியிருப்பதோடு அங்கங்கே எண்ணிறந்த பாவிகங்களையும் கூறியுள்ளார். எல்லாவற்றை யும் எடுத்தெழுதுவது இயலாதென இம்மட்டில் நிறுத்துகின் றேன்.

தமிழ்ச்சுவையும் பத்திச்சுவையும் ததும்பி வழியும் இந் நூலைத் தமிழன்பர்கள் அனைவரும் போற்றிப்படித்தால் பெரு நலம் பெறுவர் என்பது திண்ணம். இந்நூலைப் படித்துப் பயன்பெறுவதேயன்றி, யாம் இந்நூலாசிரியருக்குச் செய்யத் தக்க கைம்மாறு பிறிதில்லை. வான்செய்த உதவிக்கு வைய கம் என்செய்யும்.

இப்புராணத்தின்மூலம், தலவிசேடங்களையறிந்த அன்பர் களுள்ளத்திற் பெருகும் இன்பத்தின் அறிகுறியாய்த் துதிப்ப தற்கேற்ற, அன்னியூர்க் கணேசர்துதிப்பா, மன்னீச்சுரர்பதி

கம், சந்தம், அருந்தவச்செல்விபதிகம், சந்தம், சண்முகக்கடவுள் சந்தப்பாக்கள், வரதராஜப்பெருமாள் பதிகம், குமாரபாளையம் வட்டமலைத்தண்டபாணிக்கடவுள் பதிகம், சந்தம், முதலிய தோத்திரங்கள் இவ்வாசிரியரேயியற்றி, ஒன்றினை முடித்தலாக இணைத்துள்ளமை மிக்க விசேடமென்பதுண்மை.

இந்நூல்களின் அருமையை அறிந்து அச்சிற்பதிப்பித்த தருமகர்த்தர் குமாரபாளையம் திருவாளர் சி. ந. கறுப்பகவுண்டரவர்களுக்கு எல்லா நலங்களையும் காலக்கிரமத்தில் மன்னீசர் அருள்வார் என்பதில் ஐயமுளதோ?

இங்ஙனம்,
இந்நூலாசிரிய சுவாமிகளின் மாணவரில்
ஒருவராகிய,
கோவை. கு. நடேச கவுண்டர்,
வித்வான்,
தமிழாசிரியன், முனிசிபல்ஹைஸ்கூல்.

கோயமுத்தூர்,
23—5—1937.

**தெய்வமேதுணை.**

உ

குருவே துணை.



சிரவணபுரம் கௌமாரமடாலயம்

ஸ்ரீலஸ்ரீ

இராமானந்த சுவாமிகள்.

உ

குருவேதுணை.

# சாத்துகவிகள்.

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

ஆலயபூசை

## ஸ்ரீ சின்னசாமி சுவாமிகளியற்றிய

### எழுசீர்விருத்தங்கள்.

அருமறையவர்வா ழன்னியூர்மேவு மருந்தவச்செல்விமன் னீசன்
வருமயிற்குமரன் கணபதிவிண்டு வானவற்பழிச்சுபாப் பலவுந்
திருமலிதலபு ராணத்தொடியையச் செப்பினன்சிரவையில் வாழெங்
குருபரனிராமா னந்தனின்கருணை குலவுநற்கந்தசா மியனே. (க)

பற்பனூலினங்கள் பகர்திறலுடையான் பண்டிதர்பாவலர் பண்பார், வித்தகம்விழைவார் வீட்டவாமேலோர் வேட்கைமுற்றுறத் தவம் பயில்வார், சற்சனர்தொண்டிற் சீர்த்தமாதவர்க டாமுளங் களித்தவன் பினராய்ப், பொற்புடனிருமை யினுஞ்சுகித்திடுவான் புகன்றதென்பதுநிச மாமே. (உ)

---

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

சபைப்பூசை

## ஸ்ரீ-ரங்கழந்து ஐயா அவர்களியற்றிய

### எழுசீர்விருத்தங்கள்.

கொங்குநன்னாடு செய்தமாதவத்தாற் குளிர்சபைக்கொலுவமர்ந் தருளு
மெங்குருநாமா னந்தமாதவன்ற ளிரவுநற்பகலுமா றுதே
தங்குறுபிறவிப் பிணிக்கொருமருந்து தழைத்ததேயெனவுளிற் றழைத்தோன்
மங்குறுவின்பப் பாப்பொழிதூயோன் மாதவக்கந்தசாமிநலோன். (க)

தருப்பொலிவமைந்து முனிவர்கள்வாழத் தரணியிலுடலுயிர் தழைக்க, அருப்பொலியிலிங்க வுருப்பெறவமைந்தே யரியவேதாகமங் காணுத், திருப்பொலிவள்ளிச் சிணையின்கீழ்வேடன் செறித்தகைப் படைச்சுவ டிலங்க, உருப்பொலிவமைவோன் கதைபுராணமதா யுல கெலாமீடுற வுரைத்து. (உ)

அருந்தவச்செல்வி தனக்கும்வேற்குகற்கு மாணேமாமுகனுக்கு மாற்கும், பெருந்தவத்துதிகள் பெய்தனன்புகல்வோர்ப் பேரின்பப் பூரணஞ்சேர்க்கும், திருந்தவாவுடன்மன் னீச்சுரன்கோயிற் றிருப்பணி செய்தநற் சிறப்பின், இருந்தவக்கறுப்பக் கவுண்டனச்சிட்டே யீந்தன னடியவர்க் கினிதே. (௩)

---

சிரவணபுரம்

கௌமாரசபையடியவரிலொருவரான

## ஸ்ரீ எறிபத்தசுவாமிகளியற்றிய

இரட்டையாசிரியவிருத்தம்.

கயிலைமா மலைமேவு பரசிவன் பதிகளுட்
கதித்தோங்கு புகழ்பெற்றதுங்
காதலின்வி யாதன்மார்க் கண்டறு தியபெரியர்
கனிவுடன் பூசித்ததும்
அயில்போல விழியுடை யருந்தவச் செல்விபெரி
யம்மைசின் னம்மையுடனே
யகண்டகண் டானந்த மன்னீசர் மருவுமெழி
லன்னியூர்த் தலபுராணம்
வெயிலவன் போலவுல கெங்கணும்வி ளங்கிடவி
ளம்பினன்மெ யன்புமிகையால்
மிக்கசற் குருபரன் றிருவடியை மறவாத
வீரகவு மாரதீரன்
கயிலாம லகமெனச் சந்தவண் ணக்கவிகள்
கழறுநா வன்மையுடையோன்
காசினியி லெற்கினிய துணைவனற் சிரவைவளர்
கந்தசாமிப் பெரியனே.

---

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

புட்பப்பணி

## குமாரசாமி ஐயா இயற்றிய

எழுசீர்விருத்தங்கள்.

கும்பமாமுனிவன் கலையெனவந்து கொங்குறுசிரவையிற் குலவி
யும்பரும்புகழ வுயர்தவஞ்செய்தே யோங்கிரா மானந்தக்குரவன்
செம்பதமறவா தென்னுளமருவுஞ் சிறப்பமையுங்கந்த சாமி
கொப்பமைதேனிற் றன்மலர்வாயாற் கொட்டுறுபாமலி வோனே. (க)

அன்னியூரென்னு மருஞ்சிவதலத்தி னற்புதப்புராணநன் கறைந்து
மன்னியீசுரற்கு மவன்மகிழுமைக்கும் வாரணமுகன்குகன் மாற்கும்
உன்னியேதுதிசெய் தன்பினருப்ப வுரைத்தனன்பாடல்க ளுலகீர்
என்னினியிவற்கே யாஞ்செய்கைமாறிங் கிருகையாற்றொழுவதல் லாதே. ( )

---

சிரவணபுரம் கௌமாரசபை அடியவர்களிலொருவராகிய

விளாங்குறிச்சி பெரியதோட்டம்

## திருவாளர் சுப்பணகவுண்டரவர்களியற்றிய

கோச்சகக்கலிப்பாக்கள்.

மேன்மைபொலி கொங்குதனின் மேவுஞ் சிரவைநகர்த்
தேன்மலியுங் கௌமாரத் தெய்வசபை சேர்ந்தொளிரும்
கோன்கந்த சாமியன்பாய்க் குளிரன்னூர்ப் புராணத்தை
வான்புகழச் செய்தமைத்தான் மண்டலத்தோர் செய்தவமே. (க)

இத்தவத்தின் மிகமுயன்றோ னெழிலன்னி யூர்க்கடுத்த
தத்தைகுலாம் வட்டமலைத் தனிக்குமர புரிவாழ்வோன்
முத்தர்களும் வியப்படைய முகிலன்ன கறுப்பணனும்
எத்தகைநல் லறங்களினு மிணையில்புகழ் பெற்றானே. (உ)

---

## சிரவணபுரம்
## கௌமாரசபை அடியவர்களிலொருவராகிய
## பாப்பையா என்கிற மருதாசல ஐயா இயற்றிய
## அறுசீர்விருத்தங்கள்.

கொன்றைவன் பணிகூனிந்து குளிர்வனம் புனைவோன்வேதற்
கன்றருள் குமாரப்பெம்மா னருட்கலை கொடுவங்தென்போல்
மன்றலங் குழலார்மாலை மண்ணென வாடுவார்க்கு
நன்றருள் கந்தசாமி நாமங்தோய் சுரவணம்மா. (க)

திதித்திடும் விண்டுபாதஞ் சேர்ந்திடு மடியார்காதை
விதித்திடும் பெரிதென்றெண்ணி வீணுழல் மாந்தர்தாமு
மதித்திடும் பெற்றுவேதன் மதன்சம னணுகாவீட்டிற்
பதித்திடும் பெற்றுவாழப் பகர்ந்துபின் பலநூல்செய்தோன். (உ)

மன்னிய வளங்கொள்கொங்கின் மாட்சிதோ யன்னியூர்வாழ்
மன்னியீச் சுரன்மால்கௌரி வீரணு னனன்செவ் வேட்கும்
பன்னிசைத் துதிகள்கூறிப் பகர்ந்தனன் றலபுராணம்
தன்னிகர் கந்தசாமி தவத்தர்கோ னெந்தையம்மா. (ங)

இத்தகு நூலின்மேன்மை யெண்ணிநற் பொருளளித்துப்
புத்தக வடிவிற்செய்து புகழுடம் புற்றமேலோன்
பத்தர்கள் விழைகுமார பாளையப் பதியில்வாழும்
உத்தமன் கறுப்பணப்பே ரொளிர்தன்ம கர்த்தன்மாதோ. (ச)

---

## திருவாமாத்தூர்க் கௌமாரமடாலயம்
## திருவாளர் தி. செ. முருகதாசப்பிள்ளையியற்றிய
## எழுசீர்விருத்தங்கள்.

வெள்ளிவெற்பான்றன் னுருத்தருப்பணத்தில் விளங்கல்கண்ட மைக்கவம் மொழியுட், கொள்ளியற்சீரா லாலசுந்தரனிக் குவலயத்தவ னுரைப் படியே, தெள்ளிமைத்தமிழ்ச்சுந் தரனெனுநாமஞ் சேர்ந்தவன் றெண்டர்தந் திருவாய், விள்ளியற்பதிக மொன்றினுல் முதலைவிழுங் கியபனவமா மதலை. (க)

ஆண்டுமூன்றாய பின்னர்செல்வயதோ டறல்வறந்திட்டநாள்
குளத்தில், மீண்டுமப்புடனீள் முதலைவந்துதித்து விரிகரையினிலுமிழ்
வியன்செய், தாண்டுகண்ணருள்பெய் யணியவிநாசி யப்பன்புக்கொளி
நகர்க் குடபால், வேண்டுவார்க்கிரங்கும் பரன்மன்னீச்சுரனு விளங்
குமையருந்தவச் செல்வி. (௨)

என்றபேரமைய முன்யுகமூன்றி லெண்கணன்வியாசன்மார்க்
கண்டன், றன்றவாவினிற்பூ சித்திடவினிது துலங்கிடுமவ்விடங்
கலியிற், பின்றவாவருளாட் டியைவள்ளிவனமாப் பிறங்கிநல்லன்னி
யென் றிடும்பே, ரொன்றவாழ்வேடன் மனையுடன்வள்ளி யுறுகந்தம்
பெறுதல்வேட் டகழ. (௩)

முன்னொர்நாளாயன் வெட்டலின்வேயின் முளைத்துநெல்லையிலா
னுறல்போல், நன்னர்வெட்டுற்ற கிழங்கினின்றிரத்த நதிசெய்தோரி
லிங்கமவ் விடத்திற், றன்னலாற்சேரன் முன்னரோதிடவத் தூயவன்
வந்தருட் குறிப்போர்ந், தன்னதானத்தி லாலயம்வகுத்தே யணிமிகு
நகரமைத் தலினே. (௪)

அத்தலமந்த வனசரன்பெயரா லவிர்வதவ்வாலயத் தருமம்,
நித்தமும்புரிவோன் குமாரபாளையத்தி னிலவிடுங்கறுப்பநா மத்தோன்,
இத்தலம்புகழத் திருப்பணிபன்னெட் டியாண்டுகாறியற்றிமூர்த்
தியின்சீர், கைத்தலத்துறுநெல் லியிற்பலர்தேரக் கவித்தமிழ்ப்புரா
ணமாக் கழற. (௫)

கொங்குசெய்தவமாச் சிரவையம்பதியிற் குலவிராமானந்தக்
குருதாள், கங்குலும்பகலுங் கருதுளத்துரிமைக் கந்தசாமிப்பெயர்
கவின்றோன், சங்குநீடியகை நாரணனன்பர் சரிதையைத்தமிழ்செயுந்
தகவோன், நங்குதீர்சுகமா தவனிகர்தூய னற்கவுமாரமாண் பமைந்
தோன். (௬)

நாற்கவியியல்பு நண்ணிடுமவன்பா னவின்றனன்பலவள மமையப்
பாற்கடலமுதென் றிடும்படிநன்கு பாடியீந்திடவச்சிற் பதித்தே
சேற்கணாள்பாகச் சிவபிரானருளாற் செய்கும்பாபிடேகநாள் சேர
வேற்கரக்குமர னருளினுற்சபையில் விளம்பல்கேட்டுவந்தனன் மாதோ. ( )

சிரவணபுரம் கௌமாரசபை
அடியார்களிலொருவராகிய கணவாய்ப்பாளையம்
## திருவாளர் இராமசாமி ஐயா அவர்களியற்றிய

அறுசீர்விருத்தம்.

விண்ணவர் வியந்துபோற்ற விளங்குசீர்ச் சிரவைமன்றில்
மண்ணவர் போற்றிசெய்ரா மானந்தக் குருவாமெந்தை
பண்ணவன் கமலபாதம் பதிகந்த சாமிமேலோன்
புண்ணியத் தலபுராணம் புகன்றன னன்னியூர்க்கே. (க)

அன்னியூர்ப் புராணந்தன்னை யருந்தமிழ்ப் பாவாலாக்கி
மன்னியீச் சுரனுக்கும் வாழ்சவுந் தரப்பேர்வல்லி
யன்னைநங் கனோசன்செவ்வே ளரிக்குநல் லணியலங்கல்
மன்னகத் தன்பினலே மகிழ்வுறப் புனைந்தான்மாதோ. (உ)

கலிவிருத்தம்.

எங்குரு மாதவ னியற்று காவியம்
செங்கம லத்தவள் சிறந்த நாமகள்
பங்கயன் றுதைநற் பன்ன கத்திறை
யங்கவர் நேர்பவ ரறைய லாகுமே. (ஙு)

---

சிரவணபுரம் கௌமாரசபை
அடியார்களிலொருவராகிய கணவாய்ப்பாளையம்
## சின்னப்ப செட்டியாரியற்றிய

கோச்சகக்கலிப்பாக்கள்.

தண்டுடனே வேல்புனையுஞ் சற்குரவன் பாதமுளங்
கொண்டகந்த சாமிப்பேர்க் குருபரனு ரன்னிநகர்ப்
பண்டுலங்கும் புராணநூல் பகர்ந்திட்ட பெருமைதனை
விண்டுவளர் பாயரவு விளம்பிடுத லினிதாமே. (க)

அன்னிநகர் தன்னில்வள ரைங்காற்குஞ் சண்முகற்கும்
மன்னிலிங்கர் தமக்குமுயர் மாயவனே டம்பிகைக்கும்
நன்னயமாய்த் தோத்திரங்க ளற்நந்த சாமிகுரு
பன்னியசீ ரளவறிந்து படிறனேன் பகரிதே. (உ)

கோயமுத்தூர் சோதிடர்

## திரு. சுப்பிரமணிய செட்டியாரியற்றிய

எழுசீர்விருத்தங்கள்.

பொன்னவிர்சடையான் சந்திரமவுலிப் புண்ணியமன்னியீச் சுரற்குங்
கன்னியாமம்மை சவுந்தரவல்லி கணபதிகந்தவே ளரிக்கும்
பன்னுசீர்ப்பாக்கள் பதிகநற்சந்தம் படிமிசையாவரு மேத்தச்
சொன்னயந்தோன்றச் சொற்றனன்கந்த சுவாமியாஞ்சுத்தமா தவனே. ()

ஆதவனொளிபோ லவிர்தருஞ்சீர்த்தி யன்னியூர்ப்புராணத்தைப் புகன்ற
மாதவவுன்னை யாவரேயிந்த மகிதலந்தன்னிடை தேர்வார்
நாதனேயென்ன யாவரும்போற்ற நாயகமணியதா விளங்கிச்
சீதளமதிபோற் சிரவையின்சபைதோய் சீர்க்கந்தசாமிசற் குருவே. ()

கோயமுத்தூர் விளாங்குறிச்சி

## வி. நா. மருதாசலக் கவுண்டரவர்களியற்றிய

வெண்பா.

முத்தமிழ னற்கவிஞன் மொய்ம்பவிர்வண் ணச்சரபன்
பத்திசித்தி முத்திநூல் பாடநூ—நித்தவனம்
தண்டபா ணிக்குரவன் சந்ததிரா மானந்தன்
கொண்டகந்த சாமிகவிக் கோ. (க)

கட்டளைக்கலித்துறை.

அங்கி விழிச்சிவன் கோயிலு மம்பிகை யாலயமும்
பங்கின் மிளிரன்னி யூர்த்தல மான்மியம் பாடினனல்
கொங்கிற் சிரவண வூர்க்கந்த சாமி குருகுருவின்
வங்கிசத் தின்குணம் போகாமற் பெய்து வரகவியே. (உ)

## எழுசீர்விருத்தம்.

சென்னியூர்பிறையன் மன்னியீச்சுரற்குந் தேடருந்தவச்செல் வித் தாய்க்கும், மன்னியூர்மயூர சுப்பிரமணிக்கும் வரதராசப்பெரு மாட்கும், அன்னியூர்க்கடுத்த வட்டமாமலைவே லவற்குமேற்கிணற் றிப முகற்கும், பன்னியூர்தொறுமன் பினர்துதித்துய்யப் பதிகமாதிய கொழித்தனனே. (ரு)

## ஆசிரியப்பா.

தட்பமும் வெப்பமுஞ் சமநிலை யிலங்கிடும்
ஒட்பச் செறிவுட ஞெருநா ளிலஞ்சார்
கொங்கினிற் சிரவையிற் குளிர்பொழி னந்தனம்
மங்களம் பொலிகவு மார மடாலயம்
சுக்கிர வாரச் சுபமலி சபையிவை
தக்கமா தைக்குரு தண்டபா ணியனருள்
கொண்டு நிறுவிக் குலாவிவண் டிசைக்கும்
முண்டகப் பொய்கை முகப்பொடு திகழும்
கனக சபைதனிற் கனதவக் கொலுவமர்ந்
தனகமா சித்திக ளாடிரா மானந்தக்
குருவே துணையெனக் கொண்டவிர் பெற்றியாற்
கருவே புகாத்தவங் கைவரப் பெற்றும்
கொலைபுலை கடிந்துங் குறியறக் கருணை
மலையென வயங்கியும் வந்தடி யவர்சூழ்
அத்தகு கவுமா ரக்குரு பீட
மத்தியி லமர வருமிள வரசெனும்
பட்டமுந் துறவும் பழனியிற் பெற்றும்
தட்டறும் பாவலத் தன்மை தழைத்தும்
ஆரியத் தொடுமலை யாளமும் பயின்றும்
வீரியத் தெய்வ வியன்றமிழ்க் கலைகொடு
சண்மதக் கடவுளர் தம்மையு மூன்றெனும்
உண்மலங் களைந்தாண் டொளிர்குருவடி யையும்
தோத்திர முதலாச் சொலும்பல் பனுவலால்
ஏத்தியின் புற்று மியலுநாற் கவிகளும்

திண்ணத் தமிழிற் சிறந்தொளிர் தருமா
வண்ணம் பாடியும் வாகவிப் பெருமுகில்
சூல்கொண் டன்னியூர்த் தூய்த்தல புராணம்
கால்கொண்டு பெய்து கனதவர் புலவோர்
பொருவரு முளங்களி பூத்திடு மாறு
குருவடி யுன்னிக் கொண்டலங் கரித்த
அப்பெரும் புலமை யாளனூர் பேர்சொல்வல்
ஒப்பிலாச் சிரவை யூர், கந்தசாமிபேர்,
அன்னமா தவசிதே ஞர்சுவைப் பாடல்கள்
சொன்னவர் வினவினர் துரிசறு மிருமை
இன்பமு நுகர்ந்தாண் டிடுங்குரு
வின்பத நீழ லெய்திவா ழியவே. (ச)

---

கோயமுத்தூர் முனிசிபல் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்

## பண்டிதர் C. S. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றியன.

எழுசீர்விருத்தங்கள்.

நாட்டினிற் சிறந்த கொங்கெனும் பெயர்த்த நலவளம் பலமலி நாட்டில், வீட்டினை அடைவான் விழையுநன் மனமார் மெய்யறி வுடையவர்க் கருள்வான், கோட்டமில் சொல்லும் பொருளுமாய்க் குலவும் குளிர்புனற் கங்கையு நிலவும், சூட்டிய கபர்த்தம் பொலியுமன் னீசர் தூய்தவச் செல்வியோ டமர்ந்த. (க)

அன்னியூர்ப் பெருமை அனைத்தையுந் திரட்டி அகனிலத் தமை வுறு பத்தி, துன்னிய மக்கள் சொலிச்சொலி மகிழ்வான் தூக்குறு தூக்கினிற் றாக்கி, நன்னய முறுசீர் அன்னியூர்ப் புராணம் நவின்ற னன் நாவலர் நாளும், பன்னிடு புகழ்சால் பருணிதன், முருகன் பதமலர் பழிச்சிடு சீலன். (உ)

சிரவண புரஞ்சார் திகழ்கவு மாரத் திருமடா லயந்தனி லென் றும், வரமுறு துறவு வாழ்க்கைமேற் கொண்டு வதிபவன், கல்விகேள் விகளில், தாமுயர் பெரியோன், தமிழினுற் கவியும் தகைபெறச் சமைத்திடு சதுரன், காவிலுள் ளத்துக் கந்தசு வாமிக் கனமுறு சுவாமியென் பவனே. (ங)

சொல்லிய சீர்சால் அன்னியூர்ப் புராணம் சொல்லழ கொடு தொடை யழகும், நல்லவென் றறிஞர் சொலும்பல வழகும் நண்ணு மோர் புண்ணியக் கடலாம், துல்லிய மனத்தோடிருந்ததிற் படிவோர் தோன்றுபன் னூற்கடற் றினைத்த, நல்லியல் படைவர், நாற்பெரும் பயனும் நண்ணிடு வார்களீ துண்மை. (௪)

நேரிசை வெண்பா.

மன்னீச் சுரருக்கும் மால்வாத ராசருக்கும்
தென்னூர் அருந்தவச் செல்விக்கும் — இன்னமுதம்
என்ன வினிக்க இசைத்தான் பதிகங்கள்
மின்னுறுசீர்க் கந்தசுவா மி. (௫)

சுப்பிர மண்ணியர்தம் தூய திருவடிக்குத்
திப்பியம்சேர் சந்தமுறு செய்யுள்சில — செப்பினனால்
பாமரந்தீர் பண்பனுயர் பாரங் கதன்கந்த
சாமியெனு மான்றதவத் தன். (௬)

இட்டமுடன் மேல்கிணறு மேவும் இபமுகற்கும்
வட்ட மலைத்தண்ட பாணிக்கும் — திட்டமுடன்
செந்தமிழில் நற்பதிகஞ் செப்பினான் கௌமாரக்
கந்த சுவாமிக் கவி. (௭)

---

அவிநாசி, தாலூகா ஆபீஸ் கிளார்க்

## சீநிவாச நாயுடு அவர்களியற்றிய

வெண்பாக்கள்.

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத் தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றுடல், உள்ளபடி — பெற்றிடயாம்
செந்தமிழ்க்கந் தானந்தன் தந்தான் திருஅன்னூர்
விந்தைமன்னீ சன்மான் மியம். (௧)

நண்ணியநூ லான்ஞான நல்குகந்த சாமிநூல்
பண்ணியல்பாற் பத்தியினாற் பாடுவோர் — கண்ணுதலான்
அண்ணல் திருவடியில் ஆன்மா அணைந்தின்பக்
கண்ணில் அழுந்திடுவார் காண். (௨)

---

கோயமுத்தூர் ஜில்லா கல்விச் சங்கத்தின் தலைவர்
ராவ்சாகிப்

## C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள், B. A., B. L., F. R. G. S.,

இயற்றியன.

### கொச்சகக்கலிப்பாக்கள்.

ஒருநாட்டின் உயர்வுணர்ந்தார் உலகுணர உயர்வினுக்கோர்
உருநாட்டி உரையிடுதல் உயிர்ஊட்டற் கொப்பன்றோ?
ஒருநாட்டார் உணர்வின்றி உயிரின்றி உயர்விலரேல்
உருநாட்டி உயர்வளித்தல் உத்தமரின் உணர்வன்றோ? (க)

யாமியலும் கொங்கினிலே எவ்வுயர்வு குறைந்துளது?
காமியரும் கடுந்தவரும் கண்களிக்கும் பொருளிலையோ?
பூமியிடை இதன்வளங்கள் பொலியாது நின்றிடுமேல்
தாமியற்றி வெளியிடுமோர் தகுமுறைநூல் இலையதனால்? (உ)

நற்றலங்கள் தீர்த்தமொடு நன்மூர்த்தம் பலவுளதால்
கற்றவற்றின் உயர்வுதனைக் கவின்மொழியால் விடுத்தனரேல்
மற்றதமிழ் நாடுகள்போல் மகிமைதனைக் கொங்குற்றுப்
பொற்றவிசில் வீற்றிருக்கும் புனிதமதைப் பெற்றிருக்கும். (ங)

அத்தகைய ஆசனத்தை அணிகொங்குக் களித்திடவே
முத்தமிழில் அதன்பெருமை மொழிந்தருள வந்துள்ளார்
உத்தமியின் திருமகனார் உயர்மடத்துத் தவங்கவியாம்
சுத்தசைவக் கந்தசாமிச் சுவாமியெனும் பெரியோரே. (ச)

கொங்கினிலே பலதலங்கள் கொண்டுள்ள வைபவங்கள்
மங்கிலது விளக்கமுற மகிமையெலாம் பொறித்துள்ளார்
இங்கிதமார் அன்னியூர் இசையனைத்தும் செம்பாவாய்
சங்கமுறும் தமிழினிலே சமைத்திட்டார் உலகுவப்ப. (ரு)

அன்னாரின் அரியசெயல் அளவிடவும் ஆகாதால்
பொன்னாரும் நன்னாடாம் புகழ்க்கொங்கு புரிந்ததவம்
முன்னாளில் எத்தன்மை மொய்ம்பினதோ யாமறியோம்
பின்னாளில் அதன்புதல்வன் செயுநன்றி அளவிலதே. (சு)

கோவைக்கிழார்.

கோயமுத்தூர் வழக்கறிஞர்
உயர் சைவத்திருவாளர்
C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்
இயற்றியன.

---

## கலித்தாழிசைகள்.

உலகிற் றிகழு முயர்கொங்கு நாட்டிற்
றிலகம் எனவே திகழன்னி யூர்மேற்
பலகற் றுயர்ந்தோர் பகர்கின்ற நன்மைத்
தலநற் புராணந் தனையிங்கு தந்தான். (க)

நாட்டுப் படல முதலாக நல்ல
வூட்டுந் தலத்தினுத் தாரண மீறாப்
பாட்டிற் சிறந்த பதிகங்க ளோடு
காட்டுங் கவிகள் கவின்சேர ஈந்தான். (உ)

தொல்சீர்ச் சிரவண மெனவேசொல் சீர்த்தி
வெல்சீர்க் கௌமார மிகுநல்ல மாடத்
தில்வாழ் குரவ னிணையில்ல தாகுங்
கல்விப் பெரியோன் கழன்மேவு தேசன். (ங)

மன்னீசர் பாத மறவாத சாமி
நன்மைப் புலமை நயக்கந்த சாமி
வன்மைப் புலவோர் மகிழ்வாணன் மக்கள்
சென்மந் தவிர்க்குந் திறலாக மாதோ. (ச)

அரங்க முகக்கு மதுநாளிங் கீசர்
பாங்கொள் வருடம் பகரானி மாதத்
திரங்கொள் சிறப்பி னபிடேக நாளாந்
தாங்கொள் திருநாட் டகைபேசொ ணாதே. (ரு)

---

## சிரவணபுரம் கௌமார மடாலயம் அடியவர்களிலொருவராகிய
## பேரூர் தெற்குநந்தவனம்
# ஸ்ரீ சுந்தரசுவாமிகள் இயற்றியன.

---

### அறுசீர் விருத்தங்கள்.

மன்னுசீர்க் கொங்கின்மேய மகிமைசேர் தலம்பல்வாறுத்
துன்னுறு புலவரானோர் சொல்லுவர் சொலன்மெய்யேனும்
அன்னியென் வேடன்வள்ளி யதன்கிழங் கடியிற்காண
மன்னுறு சிவலிங்கத்தின் மாட்சிசேர் புராணந்தன்னில். (க)

அருந்தவச் செல்விதன்னோ டாயதம்பரிவாரச்சீர்
தருந்தமிழ்க் கவிகளாலே சாற்றின னதுகண்டுற்றோர்
மருந்தெனக் கண்ணிலொற்றி மாண்சிரந் தன்னிலேற்றி
விருந்தினில் விழிநீராட்டி மெய்யெலாம் புளகம்போர்ப்பர். (உ)

ஆதலா லிந்தக்காதை யதிகமென் றடியனோர்காற்
போதவுஞ் சொல்லவோதான் புலமைமிக் கிளமையோரே
மோதவேல் வைத்தானெங்கள் முழுதறி புலவனன்றோ
வாதரத் தவன்றன்கண்ணோங் கடைந்தவன் காண்மின்னீரே. (ங)

இத்தகு பனுவல்சொற்றோ னினியசீ ரதனிற்சற்றே
வித்தகர் வியக்குமாறு விளம்பிடத் துணிந்தேனென்னுள்
வைத்தகா தலினாலென்றன் மனவெளி யதனிலெந்தை
சத்திவே லேந்திநிற்குந் தகையினில் வணங்கியன்பால். (ச)

என்றன திளவல்மீது னின்னருள் சிறிதீகென்ன
மன்றயான் வேண்டநீற்றை வல்லையி லளிக்கவாங்கிக்
குன்றிடா வாக்குண்டாகக் கொடுத்தனன் குனிந்தேயேற்றுத்
தின்றுநெற் றியிலும்பூசத் திகழ்ந்தசாக் கிரந்தானம்மா. (ரு)

அதுமுதற் கார்மேகந்தா னவனியிற் பொழிதல்போலக்
குதுகுலத் தோடேபேசிக் கொழித்திடும் வண்ணமியாவுஞ்
சதுமுகன் றலையில்மோதுஞ் சாமிதன் கிருபையுற்றோர்க்
கெதுபெரி தண்டோவில்லை யென்பாரற் பெரியர்மன்னோ. (சா)

வயதினி லிளையோனாகி மாட்சியிற் பெரியோனாகி
நயமலி சந்நியாச நயந்துநா னென்னலின்றிக்
கயமெனப் பின்வாங்காமை காண்டொறு முருகனன்பார்
தயவென வெண்ணியென்றன் சங்கடந் தவிர்வேன்மாதோ. (எ)

கவிசொலக் கந்தசாமி காணுமி னென்னப்பல்லோர்
புவியினிற் புகழ்ந்துபேசல் புலமுளார் மறுப்பதின்றாற்
செவியுண வருத்துஞ் செல்வர் சேகர னென்றால்யாரு
மெவிதமு மிசைவாரன்றி யின்றெனை லின்றுமம்மா. (அ)

இன்னமு நெடுநாளுற்றீண் டிகபரம் பலர்க்குமோதி
மன்னுக வளங்கள்யாவு வளருக வேலோனன்பு
துன்னுக வடியார்சங்கந் துலங்குக வீற்றிருதன்
பொன்னடி நீழறன்னிற் பொருந்துக வாழி வாழி. (கூ)

துதி–ஷை வேறு.

வன்னிவனத்தினில்வதிந்த மாமணியேயென்னிருகண் மணியே நின்சீர், பன்னுறுமுற்றுணர்வில்லேன் விதிநூல்கடுதிநூல்கள் பார்த்து மில்லேன், கொன்னுறுநின்னனந்தகவி யாணகுணங்களிலெவைகயே கூறுவேனியான், மின்னிலங்குசடைக்கனியே வேட்கையற்றோர்தம் முளத்தில் விளங்குந்தேவே. (கO)

முத்தொழிலில்முதற்றொழில்செய் யயன்முதலோர்நின்பூசை முயன்றுமுன்னாள், நித்தியமெய்ப்பயனடைந்தா ரெனக்கேட்டுநின்ம லர்த்தா ணினைப்புறுமன், மித்தையெனும்பொய்யுலகர் விளம்புமொழி களைப்பெரிதாய் விரும்பிநாளு, முத்தமப்பண்பினைமறந்தே னானு முன்சமுக முற்றேன்மாதோ. (கக)

வேதமொருநான்கினையுஞ் சிக்கறுத்தோன்முதலாய மேலோர்தாமும்
போதவுனைப்பூசித்துக் கதியடைந்தசரிதமெலாம் புகலக்கேட்டும்
போதமெனல்சிறிதுமிலா துண்டுடுத்துத்திரிகின்ற புன்மையேன்பா
னீதயைவைத்தெப்படியு மருள்புரிதலேகடனாம் நிகழ்த்தினேனே (கஉ)

பதினாறென்றிடும்வயதை யெப்போதும்பதினாறப் பகருமாறு
விதியோடென்றனைப்பூசை விளைத்திடுமார்க்கண்டேயர் மெய்மைகேட்டுஞ்
சதியாயபொய்யினைமெய் யெனநினைந்துத்தருக்குறுவோர் தம்மையேபோல்
மதிமோசம்போனேனுக் கெப்படியுநின்னருட்சீர் வழங்குவாயே. ( )

நின்மகிமைதனையுணர்வான் வேதமெலாமளந்தளந்து நேடிக்கா
ணாத், தன்மகிமைதானுணராத் தம்பிரானெனப்பலவாச் சாற்றக்கேட்
டுங், கொன்மயல்சற்றுங்குறையாக் கொடியரினுங்கொடியனென்னே
கூறுவேனுன் றன்மகிமைத்திருவருளாற் றடுத்தாண்டுபாதகற்காந்
தயைசெய்வாயே. (௧௪)

நெற்றிவிழிதனைப்புரைந்த சோலர்கோன்பணிபுரிந்து னிமலத்
தாளை, யுற்றடைந்தசரிதமெலா முணர்வுடையார்விதந்துவிதந் துரைக்
கக்கேட்டுஞ், சற்றுமெனுண்மெய்யறிவு சாராதகொடுமையெண்ணித்
தவித்தேனென்பா, லுற்றருளின்மிகச்சிறிது தெறித்தாலுமெப்படியு
முய்குவேனே. (௧௫)

விதிமுறைசற்றுந்தெரியா வேடன்றன்பசிக்கொடுமை மிகுத
லாலத், ததியதனிற்கிழங்குகெல்லித் தானருந்தப்புண்ணியமாய்த்
தழைத்துப்பின்னர், மதிவளருமறிவினர்போ னின்வடிவுகண்டுகண்டு
மகிழ்வுற்றீற்றிற், கதியடைந்தகதைகேட்டும் பத்தியுருக்கடையனீ
காத்தாள்வாயே. (௧௬)

பத்தியலிந்திக்கலியி னின்கோயிற்பணிபுரியும் பதவிவாய்த்து
நித்தியனும்பேறுபெற்ற வுத்தாநம்பித்திருப்பேர் நிலவலுற்றுச்
சத்தியனுந்தகைவாய்ந்த சிவதருமகர்த்தாவின் தன்மைதேர்ந்தும்
புத்திதெளிவடையாதேற் கிரங்கினதருள்சிறிது புரிந்தாள்வாயே. ()

மன்னுபுகழ்படைத்துறலான் மன்னீசரெனும்பெயரும் வழங்கப்
பெற்று, மின்னுறழுந்தபோதகசுந் தரியொடிவண் வசித்தலினுன் மே
லாம்வாய்மை, துன்னுபுகழ்க்கௌமாரர் பலர்சூழ்ந்துபோற்றிசைக்
குந் தூய்மைகண்டு, மென்னையென்றன்மனஞ்சிறிது முருகாததன்மை
யெண்ணி யேங்குற்றேனே. (௧௮)

எல்லாமும்வல்லாய்நீ யெல்லாமுமானாய்நீ யென்றுவேதம்
சொல்லாநின்றதுகேட்டே னென்மனத்தின் றுடுக்கடங்கச் சும்மாநிற்க
வெல்லாநின்றிடுவாயே லெல்லாம்வல்லானெனயான் விளம்புவேனீ
தல்லால்வேறுன்னிடத்தி லொல்லாததொன்றினையா னுசியேனே. ()

### கலித்தாழிசை.

விதிமுறையறியேன் றுதிசொலவறியேன் மிகவில்லேன்
கதிவழியறியேன் கதியிலையெனவே கழறுற்றேன்
பதிநிலையறியேன் படிறருண்மிகவே பழகுற்றேன்
சதிபுரிமனமா சறநினதருளாற் றயைசெய்யே. (உ0)

---

### கோயமுத்தூர் தாலூகா செட்டிபாளையம்
### தமிழ்வித்வான்
## திருவாளர் ரா. ந. கலியாணசுந்தரக் கவுண்டரவர்கள்
### இயற்றிய
### வெண்டளைக்கலிப்பாக்கள்.

அன்னியெனும் வேடன் அகழ்ந்தகிழங் கிற்சிவனை
மன்னிவிளங் கன்னியூர் மாண்கதையைக் காவியமாப்
பன்னியான் அம்மை பதிகமுரு கன்றுதிப்பா
நன்னிலையோர் தேர நவின்றுதிரு மால்பதிகம். (க)

வட்டமலை மேவுதண்ட பாணி வளர்பெருமை
தொட்டறையும் பாப்பதிகம் தூயசந்தப் பாநவின்று
கட்டமையு மன்பர் களிபெருகத் தந்ததவன்
சிட்டர் புகழ்சிரவை சேர்கவுமா ரத்தலைவன். (உ)

எந்தம்வாழ் வாகு மிராமானந் தக்குரிசில்
சொந்தமாங் கண்ணருளிற் றோய்ந்தவிளங் கன்றனையான்
கந்தசாமித்திருப்பேர் காசினியோர் சொல்லநிற்போன்
இந்நாள் செந்தமிழோர்க் கின்னமுத மாமிவையே. (ங)

உ

குருவே துணை.

திருவாமாத்தூர் கௌமாரமடாலயம்

வ ண் ண ச் ச ர ப ம் ,

ஸ்ரீ-தண்டபாணி சுவாமிகள் குமாரர்

திருவாளர் தி. மு. செந்தினாயகம் பிள்ளையவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

எழுசீர் விருத்தங்கள்.

*அகண்டநிட்கள நித்தியசொருபமா யமைந்தமெய்ச்சிவமன்பர்*
*சகங்கொண்மாமயக் ககன்றுமுத்தியி லுறத் தனியருட்டிருமேனி*
*யுகந்துநின்றுபூ சனைகளேற்றவாவ ருன்னுபேறுறநல்கித்*
*திகழ்ந்தவான்றல மனந்தமிவ்வுலகிடை சிறந்திலங்குவவாமால்.* (க)

*அவற்றுட்கொங்குநாட். டணிமுகம்பொருமவி நாசியின்வடமேற்கிற்*
*சிவப்பிரான்புன வேடன்கெல்கிழங்கினிற் றிகழிலிங்கமதாகி*
*நிவப்புநீடிய சோர்கோன் செயும்பணி நிகழ்திருத்தளியூடே*
*யுவப்பினலம ரன்னியூரெனும்பதி யுயர்வென்பருணுணர்ந்தோரே.* (உ)

*அந்தவன்னிநற் பதிநடுச்சுயம்புவா யவிர்மன்னீச்சுரர்மாட்சி*
*யிந்தமாநிலத் தினரறிந்தேத்திட வெழிற்புராணமதாகச்*
*செந்தமிழ்க்கவி கொடுசெய்துதருகெனச் சிரவணபுரத்தன்பர்*
*சொந்தமார்கவு மாரமெய்ச்சபையினிற் றுலங்குநற்றவர்தம்பால்.* (ங)

*வந்துவேண்டினன் குமாரபாளையப்பதி வளரும்வேளாண்சீலன்*
*முந்துபற்பலாண் டாயன்னியூர்ச்சிவன் முதுதருமப்பார்வை*
*நந்துறுதியற் றுவதன்றியவன்றளி நற்றிருப்பணிதன்கை*
*யுந்துபுண்ணியப் பொருள்கொடும்பலநலோ ருதவுபொன்கொடுஞ்செய்வோன்.*

கல்விகேள்வியிற் சிறந்துநல்லொழுக்கமுங் கைக்கொடுதிகழ்தூயன்
செல்விதன்கடைக் கண்ணருட்பார்வையாற் செழித்தவாழ்வுறுந்தீரன்
மல்விளைந்ததோண் மன்னரும்வியந்திட வளருதாரச்சிந்தை
யொல்விசேடவான் கறுப்பனென்றிகஞ்சொல வுயரிசைவெளுத்தோனே. ()

அவன்றன்வேட்கையோர்ந் தருளிராமானந்த வற்புதக்குரவோன்கண்
ணுவந்தமெய்யருட் பெறுகந்தசாமிப்பே ருற்றநற்றவசீலன்
நவங்கொள்கொங்குநாட் டுச்சிறப்புடனன்னி நகர்ச்சிறப்பதும்வேதா
நிவந்தமன்னிநா தனைப்பணிந்துரியசீர் நிறைந்தமுற்கதைதானும். (சா)

வேதமாமுனி யுலகினர்க்கன்பினை விளக்கிடவுயர்பூசை
நாதனுக்கிழைத் தருள்வளம்பெற்றிடு நற்கதையதுங்காலன்
வாதறக்கட வூரின்முன்னருள்பெறு மார்க்கண்டன்வழிபட்டே
மாதமைந்தபா கத்தனைக்கண்டருள் வாய்ந்தமெய்ப்புகழ்ச்சீரும். (எ)

இனிதுகூறியத் தலங்கலியுகத்தினி லிசைவள்ளிவனமாகி
நனியிருந்தது மன்னியாமெயினன்போய் நவில்கிழங்கது கெல்லப்
பனிவரைக்கொடி பங்கனங்கிலிங்கமாய்ப் பலித்துநின்றதுஞ்சேரன்
கனியுமன்பினாற் றிருப்பணிநிபந்தங்கள் கனமுறப்புரிபண்பும். (அ)

வாமமார்க்கியாஞ் சமயனென்பான்பினுள் வைதிகநெறிமேவி
நேமமார்சுத்த பூசையுங்கோயிலு நிகழ்தூர்க்கைகளுக்காக்குஞ்
சேமகாதையும் வேடன்றன்மனையொடு சிவகதிபெறுஞ்சீரும்
தூமலர்க்கலை வாணியுள்ளுவப்புறச் சொல்லிவந்திடுநாளில். (கூ)

சாதமாரிரா மானந்தக்குரவன்றன் றயைமலியுளத்தாருங்
காவில்மெய்யநு பவத்திடைசிலவிதங் காணலாற்சொலும்வாய்மை
விரவுபுண்ணியப் பெருக்கினாற்பிறந்தவிவ் விவேகியாங்கறுப்பப்பே
ருரவன்மன்னியீச் சுரன்றிருப்பணிமன வூக்கங்குன்றலிலாதே. (கo)

ஒருபதோமெட்டாண் டளவுநன்கியற்றியவ் வூர்த்தலப்பிரதாபம்
பெருகமாநிலத் தினருணர்காவியப் பெற்றியிற்சொலவேண்டி
யுருகினனதா லிவன்புகழ்புராணத்தி லொருபடலமதாகத்
தருதியென்றுரித் துளகந்தசாமிபாற் சாற்றுபுபினுஞ்சொல்லும். (கக)

இவன்பிள்ளைத்திரு நாமநற்கறுப்பனென் றிருப்பினுந்திருத்தொண்டர்
நவந்தகுஞ்செயல் போற்சிலகுறிகுண நணுகலாலவர்க்குப்பின்
னுவந்தவுத்தர நம்பியென்றொருபெய ருயர்பட்டப்பெயராக
நிவந்துமன்னுக வென்றருள்புரிந்ததா னிகழ்ந்துசொல்சிரந்தாங்கி. ()

அதன்பினூர்தலோத் தாரணப்படலமென் றமையவொன் றுடன்கூட்டி
விதந்தபாமுன்னூற் றுத்தொணூற்றொன்பதாம் விருத்தமாய்நிறைவேற்றி
மிதந்தராக்களிப் புடனுயர்வாழியும் விளம்பிமுற்றுறச்செய்து
மதங்கொள்செந்நிறக் களிற்றுமாமுகப்பிரான் மலரடித்துதியொன்றும்.

மன்னிநாயகன் பதிகமுஞ்சந்தமும் வளாருந்தவச்செல்வி
தன்னிசைத்துதிப் பதிகமுஞ்சந்தமுஞ் சண்முகக்குமரேசன்
பொன்னிணைப்பதத் திருசந்தப்பாக்களும் புகழ்வாதராசன்சீர்
துன்னிருந்துதிப் பதிகமுங்குமாரபா ளையத்தணிவரைமீதே. (கச)

தண்டுகோவணந் தனித்திருப்பாதுகை சார்வெணீற்றணிகாட்டித்
தொண்டுளார்வினைத் தொகைதவிர்த்துண்மைநீர் துலக்குமெய்க்குமரேசன்
மண்டுதோத்திரப் பதிகமுஞ்சந்தமும் வாழியுஞ்சொலித்தீர்த்த
வண்டுலங்குநற் றவக்கந்தசாமிசீர் வழுத்திடின்முடியாவே. (கரு)

அந்தப்பாவகை யனைத்தையுமுவப்பினு லச்சிற்புத்தகமாகச்
சொந்தப்பொன்கொடு முடித்துமன்னீச்சுரர் சொரிகும்பப்புனலாடுஞ்
சந்தமார்தினத் தாக்கியோன்வாக்கினாற் சபையிடையாங்கேற்றுஞ்
செந்தனைத்திரு விழாநடத்தியபுகழ் சேர்தருமக்கர்த்தன். (கசு)

ஆனவுத்தர நம்பியாங்கறுப்பப்பே ரறிஞன்வேண்டுவயாவும்
ஞானநாயக னருந்தவச்செல்விதன் னல்லருளாலெய்தி
யீனமில்பணி யின்னமும்பலபுரிந் திறப்பொடுபிறப்பில்லா
மோனமுத்தியும் பெறுகவென்றடியவர் மொழிந்துவாழ்த்தினர்வாழி.

முற்றிற்று.

**தெய்வமேதுணை.**

# அட்டவணை.


| வரிசை. | விவரம். | பக்கம். | கவி. |
|---|---|---|---|
| க | பாயிரம் | க | கரு |
| உ | நாட்டுப்படலம் | ச | சஎ |
| ௩ | நகரப்படலம் | கக | சஅ |
| ச | பிரமதேவன்பூசித்தபடலம் | உச | ௩0 |
| ரு | வியாகரமுனிவர்பூசித்தபடலம் | உகூ | உரு |
| சு | மார்க்கண்டேயர்பூசித்தபடலம் | ௩௩ | ககூ |
| எ | மூர்த்திமகிமைப்படலம் | ௩சு | சரு |
| அ | சோன்பணிசெய்படலம் | ச௩ | ருசு |
| கூ | வேடன்கதிபெறுபடலம் | ரு௩ | ௩உ |
| க0 | தலோத்தாரணப்படலம் | ருஎ | சுச |
| கக | வாழிவிருத்தம் | சுஎ | க |
| கஉ | அன்னியூர்த்தலபுராணவசனம் | சுஅ | |
| க௩ | விநாயகர்தோத்திரப்பா | எசு | க |
| கச | மன்னீஸ்வரர் பதிகம் சந்தம் | ,, | கச |
| கரு | தபோதககசவுந்தரி பதிகம் சந்தம் | எகூ | க௩ |
| கசு | சண்முகக்கடவுள் சந்தப்பா | அஉ | உ |
| கஎ | வரதராசப்பெருமாள் பதிகம் | அச | கஉ |
| கஅ | வட்டமலை தண்டபாணி பதிகம் சந்தம் | அசு | கரு |
| ககூ | வாழிவிருத்தம் | அகூ | க |
| உ0 | மேல்கிணற்றுவிநாயகர் பதிகம் | கூ0 | கஉ |
| உக | வாழிவெண்பா | கூஉ | க |

குருவேதுணை.

# இந்நூலாசிரியராலியற்றியுள்ள நூல்கள்.

## அச்சிட்டுள்ள பகுதிகள்.


| | | |
|---|---|---|
| பக்தமான்மியம் .... | விலை ரூ. | 5—0—0 |
| சங்கராசாரியர் வைபவம் .... .... | ,, | 1—0—0 |
| வண்ணத்திரட்டு .... .... | ,, | 0—8—0 |
| மருதாசலப்பிரபந்தம் .... .... | ,, | 0—6—0 |
| பக்தமான்மியசாரம் ... .... | ,, | 0—6—0 |
| கௌசைப்புராணம் பிரபந்தம் .... | ,, | 0—8—0 |
| அவிநாசிப்பிரபந்தம் .... .... | ,, | 0—6—0 |
| வேற்கடவுள்மாலை சந்தம் வகுப்பு முதலியன | | 0—4—0 |
| இரத்தினசலப்பிரபந்தம் .... | ,, | 0—6—0 |
| ஸ்ரீ இராமானந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | | 0—6—0 |

## அச்சிடாதவைகள்.

பேரூர்க்கோவை
ஷை கலம்பகம்
ஷை புராணசாரமாகிய பட்டிநாயகர்மாலை
ஷை சிலேடைவெண்பா
ஷை பச்சைநாயகி பிள்ளைத்தமிழ்
ஷை பச்சைநாயகிமாலை
ஷை சந்தப்பதிகம்
பலதெய்வ தோத்திரப்பதிகங்கள்
குருந்தாசலப்பிரபந்தம்
வெள்ளியங்கிரி சத்திநாயகர்மாலை பதிகம்
ஷை விநாயகர் பதிகம்.

உ

குருவேதுணை.



ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,
கௌமார மடாலயம்,
சிரவணபுரம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அன்னியூர்த்தலபுராணம்.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

வல்லவைக்குஞ் சித்திபுத்தி மங்கையர்க்கு மின்பமிக மணிப்
பொற்றோளிற், புல்லவைக்கும் பதியறுகம் புல்லமைபூ சனைபுரிவார்ப்
புனிதவீடு, செல்லவைக்குங் கருணையுளா னென்னுளத்திற் கலந்து
நின்று தித்திக்கும்பாச், சொல்லவைக்கும் பதமளிக்கும் பொரு
ணிறைக்கு மவன்றிருத்தா டொழுதுவாழ்வாம். (க)

### மன்னீச்சுரர்.

தேங்கடுக்கைத் தொடையலின்மே லோரியற்றும் பணிகொண
லந் தெரித்துத்தீமை, யாங்கடுக்கைக் காதருந்தி யென்பணிந்தென்
பணியேற்கை யறிவித்தன்னிப், பாங்கடுக்கை பெறும்பலர்க்கு மிகப்
பயன்முற் றளித்திறப்புப் பவங்களென்ன, வாங்கடுக்கை யொழியவரு
ளிறகுமன்னீச் சுரர்திருத்தாள் வணங்கல்செய்வாம். (உ)

### அருந்தவச் செல்வி.

வருந்தவத்திற் பொருந்துயிர்கை வருந்தவத்தி லிருந்துதன்றுண்
மருவவன்னை, குருந்தவலப் பெரும்பிணிக்கு மருந்தயின்று தன்முலைப்
பாற் கூடும்பாலை, விருந்தனைய பெருந்தயைகொண் டருந்தநல்கு முல
கியற்கை விளக்கிக்காட்டற், கருந்தவஞ்செய் திருப்பெயர்தோ யருந்
தவச்செல் வியின்றுணைப்பொன் னடிகள்போற்றி. (௩)

## முருகக்கடவுள்.

விடப்பணிநே ரைம்புலன்கள் விடப்பணித்துத் தன்றிருத்தாண் மீதிலன்பு, தொடப்பணிக்தென், றெல்லைவினை யில்லையெனப் புரிந் தருட்சிற் சுகத்துட்கூட்டுங், குடப்பணிக்கும் குமகளபத் தனவள்ளி நாயகிகுஞ் சரிதோய்வாசக், கடப்பணிந்திண் புயவடிவேற் குமரகுரு பரனையன்பிற் கருதிவாழ்வாம். (ச)

## நாயன்மார்.

தடையாக வந்துசிவ பூசனைக்காம் பால்கவிழ்த்த தந்தையா னேன், நடையாக வந்திலுற்ற தாடுணித்துத் தானணிகை நம்பன் சூடுந், தொடையாக வந்தனைசெய் தேற்றசண்டே சுரன்முதலாந் தொண்டர்தாள்கள், கடையாக வுறும்பிறப்புக் கடையாக வருள்புரி யக் கருத்துள்வைப்பாம். (ரு)

## திருஞானசம்பந்தர்.

அம்பந்த விழிமடவார் தம்மகட்டிற் குழவியுரு வமைந்துதோன் றித், தம்பந்தனையமுலைப்பா லருந்துபசித் தோடமினிச் சாராதோட, வெம்பந்த வினையில்கதி மணங்கண்டோர்க் குதவவருள் விருது கொண்ட, சம்பந்த னிணைத்தாள்க ளிணைத்தாளச் சரணமுற்றுத் தழைத்துவாழ்வாம். (சா)

## திருநாவுக்கரசர்.

மைப்படுவல் வினைமாயை வடிவாகும் பொய்யுடலின் மருவி நின்றே, மெய்ப்பரவீட் டமைந்துவக்கும் பேரின்பஞானவருள் விளக்க மேவ, வெப்பமையுஞ் சமணர்கட்டி விட்டிடுகல் விரிதிரைமேன் மிதந்து செல்லுந், தெப்பமென வேறியுய்ந்த வப்பரடி யெப்பொழுதுஞ் சிந்தை செய்வாம். (எ)

## சுந்தரர்.

கொங்கிலியை புக்கொளியூ ரமைகருணும் பிகைத்திருப்பேர் கொண்டதேவி, பங்கிலியை யப்பர்புகழ் பாடியிடங் கரின்வாயார் பாலற்பெற்றோர், தங்கிலியை மாற்றநல்கிப் பரவைபிணக் குறவொற் றித் தலத்தின்மேவிச், சங்கிலியை மணங்கொண்ட வாளுடைய நம்பி பதந் தலைக்கொண்டுய்வாம். (அ)

## மாணிக்கவாசகர்.

நாணிக்க வாசகத்திற் கொண்டுலக மயக்கமைந்தே னல்லோர் போன்மேற், பாணிக்க வாசகத்தி னூனைத்துதித்தேன் புத்தமங்கை படைத்தமெய்ச்சீர், காணிக்க வாசகத்தி னீயலநெற் குற்றருள்செய் கனைகண்காணேன், மாணிக்க வாசகனே யான்வலைபா வுரைத்தமணி வாயுள்ளானே. (௯)

## சந்தானகுரவர்.

வேறு.

பேதாய்ப் பேதா பேதாயிசைய பேதாயொன்றென்றேபற் றும், வாதாய்ப் பிடித்த பிடிவழிச்சுழல்வெண் மதியுளார் வாய்மை யுய்த்துணரும், போதாய்விளங்கும் படிசிவஞான போதநூலாதிவாய் மலர்ந்த, நாதாய்த்திகழ்சந் தானமெய்க்குரவர் நால்வர்தாள்வனசங்க ணயப்பாம். (௧0)

## பொதுக்குரு.

வேறு.

பொருப்புலவு குகன்வலிந்தா டலின்முருக தாசனெனப் பொலி வுற்றன்றேன், விருப்புலவாப் புகழ்வாக்குற் றிசைந்துதிருப் புக ழோனு விளங்குற்றுண்மைக், குருப்புனித வேடமெய்ப்பாற் கொண்டு தண்ட பாணியெனக் குலவுற்றேனே, யிருப்புருவா நெஞ்சமகக் திருப்புருவாம் படிதிருப்ப வேத்திவாழ்வாம். (௧௧)

## சிறப்புக்குரு.

ஆவாணவிட்சேப மலமாயை யூடகப்பட்டவையு மென்புன், பாவரணக்களிம்பமையு மனங்கதிர்சால்பொன்றகைமை படைத்துவின் றோர், தேவரணங்கினர்சுகம்பொய் யற்பமெனவோதுக்கருட்சிற் சுகச் சீர்காட்டிக், காவரணமெய்கொளிரா மானந்தநாதனடி கருதிவாழ்வாம். (௧௨)

## அவையடக்கம்.

வேறு.

எவ்வுடலேனு மெடுத்தவையனைத்து மேற்றமேயிறைவனைக் கரு துந், செவ்வுணர்வமையப் பெறினெனுமேலோர் செப்புளத்தோர்குவ ரென்பாட், டெவ்வுவர்தெய்வத் திருவிளையாட லுரைத்துளதன்மை யாய்ந்துணரா, ரிவ்வுலகத்துள் ளதுந்தெரிந்தஞ்சேன் யான்பொருளாக் கொளாமையினே. (௧௩)

### தேற்றம்.

அண்டமுற்றவுமோ ரணுவெனக்கொண்டுள் ளமையணுத்திரளை யண்டமெனக், கண்டமைந்தருண்மன் னீச்சுரப்பெருமான் கடுப்பமற் றவன்றனிப் புகழும், பண்டமைமறையெண் ணறுமுகங்கொண்டு பகரவுமுற்றுரு தடிமைத், தொண்டனேன்வாக்குள் ளுங் கலந்தவிர்தன் சொருபமெய்துலக்கிடு மம்மா! (௧௪)

### நூற்காரணம்.

தேக்கியற்கருணை யருந்தவச்செல்வி சேருநாயகனடி யவரைத், தூக்கியற்புகவா னந்தவீட்டமைக்குந் தூயமன்னீச்சுரன் கோயிற், பாக்கியத்தரும பாலனன்குமார பாளையக்கறுப்பணன் வேண்ட, மீக்கி ளருவப்பா லருட்டுணைகொண்டு விளம்புவனன்னியூர்ப் புராணம். (௧௫)

### பாயிரமுற்றிற்று.

---

## முதலாவது
# நாட்டுப்படலம்.

திருமால்பிரமன் கோமுனிவன் சிறந்தபட்டி முனியாகி
யருமாதவம்பன் னுளியற்றி யாசம்பலத்தி லருண்மகிமைப்
பெருமானியற்று நடங்கண்டு பேணிப்போ னந்தமுறுங்
குருமாமணிமெய்த் திருப்பேரூர் குலவுங்கொங்குத் திருநாடு. (௧)

மாசில்காசித் தலத்தின்மிக வாசியென்ன வோங்குமவி
நாசியப்பர் கங்கையுட னண்ணைநாவ லூரர்துதி
பேசியதுகேட் டிடங்கருண்ட பிள்ளைமூவாண் டொழிந்திசையுந்
தேசினுடன்கொள் புக்கொளியூர் சிறங்குங்கொங்குத் திருநாடு. (௨)

கூர்த்தவடிவேற் றடமார்பக் குமரப்பெருமான் சிவலிங்க
மூர்த்திபதிட்டித் தேத்தியின்பின் மூழ்குவார்த்தோய் பிரமகத்தி
தீர்த்தின்பளிக்குந் தீர்த்தமன்பிற் சிட்டித்திறைவன் றனக்காட்டிப்
பூர்த்தியருள்வைத் தமைமுருகன் பூண்டிக்கொங்குத் திருநாடு. (௩)

முடியார்கங்கை யப்பரம்மை மூர்த்தமொன்றாய் முயங்கிடக்கொண்
டடியார்சுரமாற் றெழுதரப்பா லருவாயமையும் பாடல்கொண்டு
படியார்புயங்க வரையென்னப் பலரும்போற்ற விளங்குதிருக்
கொடிமாடச்செங் குன்றூரைக் கொண்டகொங்குத் திருநாடு. (௪)

சோதிச்சிறப்புப் பெறுமேனித் தூயமுருகன் றிருப்புகழ்ப்பா
வோதிச்சிறப்புப் பொலியருணை யூர்வாழ்நாத னொப்பிலரு
பூதிச்சிறப்புற் றபிமானம் பொருந்தியருட்செங் கோடனென
நீதிச்சிறப்பி னேத்துமிசை நிறைவார்கொங்குத் திருநாடு. (௫)

மேருமிசையைங் கரன்வரைய வியாசன்புகலைந் தாமறையைச்
சாருட்புலமை வில்லிபுத்தூர்ச் சார்வபூம னிசைக்கவின்பங்
கூருமிசையார் வரபதியாட் கொண்டானென்னு மிறந்திறவாப்
பேருந்தியசீர்க் கொங்கர்பிரான் பிறங்குங்கொங்குத் திருநாடு. (௬)

புவிமெச்சிசையார் படிக்காசுப் புலவனியல்வண் ணக்கவிகள்
நவிலுந்திறமற் றிடப்புரிந்து நாணியோட வவன்விருது
சிவிகைதனையுங் கைக்கொண்டு சிங்கவேற்றி லமைபுலமைப்
பவிசுந்தியல்வண் ணப்புலவர் பலர்வாழ் கொங்குத் திருநாடு. (௭)

வஞ்சமாக்கூ டற்புரியு மாதர்நகைதீர் மாதவர்தோய்
வெஞ்சமாக்கூ டல்வளத்தால் விரிநீர்ப்பொன்னிக் கொடுமுடியான்
றஞ்சமாக்கூ டானிலையாத் தழைத்தகருவூர் முதன்மூவர்
புஞ்சமாக்கூ டுந்தலங்கள் பொலிந்தகொங்குத் திருநாடு. (௮)

கதித்தமலைதென் சேரிமலை கஞ்சமலைநங் கந்தனென
வுதித்தமருத மலையவிர்பொன் னூதிமலைசேர் வராயன்மலை
மதித்தகொல்லி மலைநயினா மலைசென்னிமலை சிவன்மலைசீர்
திதித்தகுருடி மலைதிருமூர்த் திமலைக்கொங்குத் திருநாடு. (௯)

சிவன்மெய்வடிவாம் வெள்ளிமலை செம்பொற்கஞ்சத் தவளணைமா
தவன்மெய்ப்பெருமாள் முடியாம்பேர் தாங்குமலையு மன்னமிவர்
பவன்மெய்ப்பெயர்தோ யயன்மலையும் பணிப்பார்வதித்தாய் படிவமென
றவன்மெய்ம்மலையுந் தாங்கியரு ளுறைவாங்கொங்குத் திருநாடு. (௧௦)

நள்ளாறுஞ்சீர் பெறுங்காஞ்சி நதியும்படியு நார்பலர்க்கும்
உள்ளாறுதல்செய் காவிரியு மொப்பின்முத்தா நதியுமின்பங்
கொள்ளாறுய்க்கும் பவானியும்பொன் கொழிக்குமாப்பி ராவதியும்
விள்ளாறுகளெண் ணிலபிறவும் விளங்குங்கொங்குத் திருநாடு. (௧௧)

செங்குன்றூர்க்கி ழார்பவணந் திப்பேர்முனிவர் காங்கேயர்
மங்குல்புரையு மசக்காளி மன்றாடியடி யார்க்குநல்லார்
பொங்குபூங்கோ தையர்காழிப் புலவர்கார்மே கக்கவிஞர்
தங்குமிடைஞா னியர்வேதாந் ததேசிகர்நா டியல்கொங்கே. (௧௨)

அலம்புமணிமே கலைநுண்மருங் கமைதன்செல்வி பிரிதலிற்றாய்
புலம்புந்துறைசேர் நிலனுமலை போலுந்துயரம் புகுந்தலைவி
யுலம்புங்கழிநெய் தற்றிணையு மொழித்தொன்றின்ப முற்றவிருஞ்
சிலம்புந்தியநல் வளமுதலிற் சிறிதுபுலவர் கொளப்புகல்வாம். (௧௩)

## குறிஞ்சி.

### வேறு.

படிபொருந் தினைரையுள்ளம் படிபொருந் தெனும்பார்மேல்விண்
முடிபொருந் திடக்கொண்டிச்சை முடிபொருந் தென்கணென்ன
வடிபொருந் தருண்மிக்குந்தி யாலறை கூவுஞ்செவ்வேள்
குடிபொருந் தணிக்குறிஞ்சிக் கொற்றமார் கூறவல்லார். (௧௪)

தீர்த்திகைச் சடிலத்தோன்றேய் தேவியே யன்றிமற்றைக்
கார்த்திகைப் பெண்களுந்தாங் கந்தனுக் கமுதீந்தாரச்
சீர்த்திகை வரவேயானுஞ் சேர்வலென் றெழும்பாரோகைப்
பூர்த்திகை யகன்றுகொங்கை பூரித்த வனகுன்றங்கள். (௧௫)

ஆறுமா முகங்கொண்டும்ப ரசுவாப் பிடியின்போங்க
வீறுரத்தணைத்துவள்ளி மென்கொடி கிழங்கைமேவிக்
கூறுபைஞ் சிகிமேற்கொண்டு குக்குடம் வேலுந்தாங்கிப்
பேறுயர் குகன்சாரூபம் பெற்றுறும் பிறங்கன்மாதோ. (௧௬)

அம்மையை யிடத்தில் வைத்திட் டணிக்கங்கை முடியிற் புல்லிச்
சும்மைமிக் கமையப்புற்றோல் சுடர்விடு மெய்ப்பாற்கொண்டு
வெம்மைத்தீக் கண்ணமைந்து விருடப மான்மேல்வாய்ந்திட்
டெம்மையாண் டிசைவித்தின்பா ரீச்சுர ஞெக்குமோங்கல். (௧௭)

மேகமெய் யிசையவோங்கி விண்டுவா நாமமேவி
நாகமாட் டணைந்துபூமி னல்லடி வருடவூற்ருய்ப்
பாகமார் நதிதந்தார்க்கும் பந்திவா னரங்கள்கொண்டு
சேகரத் திருமிக்கோங்கிச் சீதரற் கிசையுங்குன்றம். (கஅ)

தாமரை மீதிற்கொண்டு சதுர்முகந் தெரியவாய்ந்து
சேமமாதவர்களின்ருேத் திரங்கொடு செம்மை மேவித்
தாமமா ருந்திதோற்றிச் சண்முகன் புடைக்கைகொண்டு
ளோமறி வடைந்து வேத ஞெத்திடுங் கிரிகளம்மா! (கசு)

கனிகந்த மூலந்துய்த்துக் கடிமலர்ச் சுனைநீராடிப்
பனிவெயில் சமமாக்கொண்டு பகலிர வினும்வரைக்கண்
ணினிதருண் முருகற்போற்று மியல்பினல் வேடர்யாரு
நனிதவ வேடமென்ன நவின்றிடத் திகழ்வரம்மா. (உ0)

விதுவணித் தாருஞ்சோலை மேவிருல் கனிகள்வேடர்
கதுமைசா லம்பேறுண்டு கருமுகில் வயிற்றுட்கூட
மதுமழை பொழிபவின்பின் மாந்தினர் களிமிக்கேய்வார்
புதுமையார் குறிஞ்சியேனல் புசிக்கத்தேன் வேண்டாரன்றே. (உக)

கானிதண் மீதாம்வேடக் கன்னியர் கவண்மணிக்கல்
நீனிற மைதோய்சோலை நிமிரிருட் போழ்ந்துவீழ்தல்
பானில வறுமுவாநாட் பரவிரு ளிடையே தோய்விண்
மீனின மறிந்துவீழும் விம்மிதங் காட்டுமன்றே. (உஉ)

கண்முகந் தழைத்தபேறு கலந்தமா தவர்க்கின்பூற்றுஞ்
சண்முகப் பெருமானென்னத் தரையில்வாழ் மாந்தர்தம்மை
விண்முகங் காணவென்பான் மேவுதி யென்றழைக்குந்
தண்முகத் தருவிவெற்பின் றகுதியார் சாற்றவல்லார். (உரு)

கலைவலார் போற்றுமாட்சிக் கந்தவே ளாடல்சான்ற
நிலையணிக் குறிஞ்சியின்சீர் நிறுத்தியிம் மட்டின்மேற்ருே
யலைகடற் றுயில்கூர்மாய னளித்தருண் மகிமைமுல்லைத்
தலைவரும் வளமைசற்றே சாற்றுது முறையின்யாதோ. (உச)

## முல்லை.

### வேறு.

உந்தியம்புயத் துதித்திடுநான்முகத் தொருவன்
றந்திடும்பல வண்டத்துமிசைசரா சரமாம்
பந்தியாவையும் பொதுவுறப்புரந்தருள் பகவன்
வந்தியைந்தமுல் லைச்சிறப்பெவர்களே வகுப்பார். (உரு)

வரங்குலாவிய விண்டுமுன்னிராமனு வருங்காற்
குரங்குருப்பெறுந் தேவருள்ளுருக்குவேய்ங் குழல்சேர்
கரங்குலாவிப்பின் னுதித்தநாட்டம்பெயர் காட்டுந்
தாங்குலா*வமு தர்களென்றிங் குறலதி சயமோ. (உசு)

ஆற்றல்சான்றமெய் யன்பமைசிவனடி யவருள்
ளேற்றமெய்தல்சண் டேசுரனியல்பசு வினத்தைப்
போற்றலாலெனக் கண்டவா†மண்டரிப் புவிப்பாற்
றேற்றலானமெய் மறைக்கினு மிடைப்பெயர் துலக்கும். (உஎ)

மட்டிலாப்புனி தத்தலத்துண்மகி மையதான்
கொட்டிலென்றுணர்ந் தேகொலண்டங்களுட் கொண்ட
கிட்டிணப்பிரா னிடைச்சிறுவவர் கேண்மை
யொட்டிவெண்ணெய்பால் தயிருண்டான்காவல்செய் துற்றுன். (உஅ)

பாணியத்துணை கொடுவளர்த்தொப்பிறன் பாலாந்
தானியத் தொடான் பாற்றுணை கொண்டுமாந் தருக்கும்
வானியற்சுரர்க் குந்தி வேதனந்தரும் வயற்கென்
போனிகழ்த்துமான் பேதெனநகைமுல்லை புரியும். (உகூ)

குங்குமந்தரப் பொலிநுதல்வியர்வையங் குரிப்பத்
தங்குமந்தர கிரித்தனச்சுமைமிகத் தளர்ந்து
சிங்குமந்தா விடைச்சியர்தயிர்கடை டெழிப்புப்
பொங்குமந்தா ருவப்புறச் செவிப்புலம்புகுதும். (ருO)

---

* அமுதர்—தேவர் இடையர். † அண்டர்—தேவர் இடையர்.

விடைமணித்தொனி செவிபுகிற்கேள்வர்கள் விரைவிற்
கடைமணித்தலை யடைவரென்றுவந்திடுங் கற்பி
னடைமணித்தகை மங்கையர்முல்லைநீர் நவின்றேன்
றொடைமணிச்சூரர் கோன்மருதத்திணை சொல்வாம். (௩௧)

## மருதம்.

### வேறு.

விண்பெற்றமையும் வளங்காண வேந்தற்கமையா யிரமாமெய்க்
கண்பெற்றமைகண் போதுமின்பக் கதிபெற்றமையும் பதியான
மண்பெற்றமைநீர் மலிமருத வளத்தைக்காண மாதவஞ்செய்
தெண்பெற்றமைகண் பெறவேண்டு மின்னமெனத்தா மரையிலங்கும்.

உகட்டுந்தான வருவிவழி யும்பற்பெயரு முதகியலை
புகட்டு முகில்வா கனநிறமும் பொருந்திஞேம்யா மென்றுமிகப்
பகட்டும் பகட்டி னமலர்தோய் பணையார்குளத்தி லுறநீந்தித்
தகட்டுவால்கண் மடிமுட்டத் தம்பால்பொழிந்து குறைதீர்க்கும். ( )

வழிந்தசெந்தேன் வாரிசப்பூ மருவுமன்னம் பகட்டினங்கள்
பொழிந்தபானீர் பிரித்துமிகப் புசித்துமன்னீச் சுரன்மனுவை
மொழிந்து தவஞ்செய் தேயுளத்தின் மூடுமலத்தைப் போக்கியின்பம்
பிழிந்துண்டருணீ றணிந்தறிவாய்ப் பிறங்கன்படியார் போன்றமையும்

காலந்தோறு மொழியாமே கருவிமுகில்பெய் திடச்செயத்தம்
மூலந்தோயுஞ் சுடிவளங்கண் முதிரப்புரிய விந்திரனைச்
சீலந்தோயும் வழிபாடு செய்யுங்களமர் சினைகொண்முகிற்
கோலந்தோய்ந்தார்த் திடிக்குரவை குளிர்வார்வெள்ளத் தெதிருவந்தே

வெள்ளத்தகையாம் போருணீர் விரியுமருந்த வச்செல்வி
கொள்ளத்தகுமா ருயிர்களின்பங் கூடத்தவத்தி னளவாக
விள்ளப்பலசத் திகளாகி விளங்குஞ்செயலில் வயலளவி
னுள்ளக்கால்வாய் வாய்க் காற்பே ருறவேபிரியு நதிமாதோ. (௩௬)

தோற்றுங்கன்ம மின்பதுன்பந் துய்ப்பித்தகலுங் காற்சமமிக்
காற்றுமன்னீச் சுரன்றிருத்தா ள்மையக்கூட்டுந் திறம்போலக்
கூற்றுந்தெருமை கொண்டுழவு குயிற்றியொப்பப் பரம்படித்து
நாற்று நடுவான் கடைசியரை நனியுட்புகுத்து வார்களமர். (௩எ)

வித்தும்பயிர்கள் செழிக்கவயல் மேவுமகளிர் முகவியர்வாம்
முத்தும்பதித்துத் தங்கணவர் முத்தம்பெறத்தம் மெய்பசப்ப
தொத்துந்திடுவைங் கூழ்வளர்ப்ப வுதகமளவிற் பாய்ச்சிவடித்
தெத்துங் காவன் மள்ளர்செய வெழுந்துபசந்து கிளர்ந்தனவால் (௩அ)

மலத்திற்றளரா ருயிரினத்தை மன்னீச்சுரன்றேய் தாய்கடைக்கட்
புலத்திற்சிறப்ப நோக்கியின்பம் பொருந்தப்புரியுஞ் செயல்போல
நிலத்திற்சிறந்த பயிரினத்தை நெருக்குங்களைக ளறப்பறிக்க
நலத்திற்றாயின் கரப்பரிச நண்ணுஞ்சேயிற் கிளர்ந்தனவே. (௩௯)

பதிக்குங்காற்பங் கயஞுகிப் பார்தாட்கொளவப் பாம்பணையின்
மதிக்குங்கஞ்சப் பூவையுர மருவப்பச்சை வடிவமைந்து
திதிக்குங்கடவுளெனவிளங்கித் திகழ்வெண்ணிறமாய்க் கன்மவொழி
வுதிக்குங் காலத்துருத்திரனை யொப்பவாம்நெல் லினமம்மா. (௪o)

கற்பின்முதலா மருந்ததியுங் கவினுர்சாலி யெனும்பெயரைத்
தற்பின்முகஞ்சாய் தன்மையினுற் சார்ந்தாளென்னுந் தகைகாட்டிப்
பொற்பின்மலிந்து குயமேந்திப் புருடர்குனிந்து பயன்பெறுவான்
நெற்பின்பரிய வரியாகி நிலத்தோர்க்காக்கும் படிகிடக்கும். (௪௧)

நெற்போர்புரிவா ரன்றுமள்ளர் நீதியுலகி னிலவும்வண்ணம்,
விற்போர்புரியும் வேந்தர்கள்பால் வேதாகமத்தின் பொருள்விளக்குஞ்
சொற்போர்புரியு மறிஞர்கள்பாற் றேயும்பசியாம் பிணியடங்க
மற்போர்புரிந்தா ரத்திறத்தால் வானத்தணைசேர்க் கியராஞர். (௪௨)

தங்கப்பணியின் மிசைநீலந் தங்கப்பதிக்குந் தகைபோலத்
துங்கப்போரைக் களத்துதறித் தோயும்பகட்டை மிசையேற்றிப்
பொங்கப்பலால நெற்பிரித்துப் போகப்பதடி களைத்தூற்றிப்
புங்கக்கொடைசெய் குவர்பலர்க்கும் போதும்போது மெனச்சதுரர். ()

இறைவன்றனக்கா றினிலொன்றீந் தெஞ்சுமவற்றை மனைக்கூண்டுள்
நிறையப்பெய்து திரோபவச்சீர் நிகர்ப்பப்பருவ மடமங்கை
முறையிற்காத்தங் கவள்பதியை முயங்குந்தருண மணஞ்செயல்போன்
றறையும்பதிபுண் ணியத்துடன்பல் கறம்பற்பலவும் புரிவாரால். (சச)

சிறக்குமிருமைப் பயன்களெலாஞ் செய்யுமறத்தின் பெருக்காலுந்
துறக்கும் பெரியோ ருளமுவப்பத் தொண்டுபுரியுந் தவத்தாலும்
விறக்கும்பரமா னந்தமுறும் வேளாண்டொன்மைக் குலத்தினிடை
பிறக்கும்பேறு பெற்றார்பின் பிறவாப்பேறு பெறுதகையார். (சரு)

வாட்டமறுமொப் புரவினால் வருங்கேடெனினஃ தொருவன்விற்றுக்
கோட்டக்கதெனு மறைக்கிலக்குக் கொண்டார்பரிகள் கொல்வேள்வி
நீட்டப்பழிதோய் வான்பழிச்சு நிருபன்வாழ்வோர் பொருளாக
வேட்டத்தீமை நினைப்பர்கொலோ வீடும்பரிசா விழையாதார். (சசா)

அன்பாற்றவத்தா லரியானென் றமைதேவினமொன் றெனத்தேர்பே
ரின்பாற்றமைத்தா மல்லால்வே றிணையில்பெருஞ்சீர்க் குடிகளெலாந்
தன்பாற்றழையத் தூலமெனத் தாங்குகொங்கின் சிறப்புரைக்கை
யென்பாற்றன்று சேடனுஞ்சாற் றிடற்பாற்றன்றன் றிது துணிபே. ()

நாட்டுப் படலம் முற்றிற்று.

ஆக கவி—சுஉ.

---

## இரண்டாவது

# நகரப்படலம்.

---

விண்பொலி சீர்த்திசால விரிகொங்கு நாடாம்பாவை
கண்பொலி நுதலையொத்துக் கவின்வட பரிசாரப்பேர்ப்
பண்பொலி நாட்டின்சிலம் பகாரி தெனினுமுள்ளத்
தெண்பொலி யிச்சையாற்சற் றிசைத்திடத் துணிந்தேன் மன்னோ. (க)

பண்டழை பனுவற்கூட்டம் பலவினுஞ் சமயபேதக்
கண்டமாய்ச் சிவன்மாலிங்கைக் கணபதி சத்திவிண்டு
கொண்டவொவ் வோரூர்ச்சீர்த்தி கூறிடு மிந்நாட்டின்கண்
விண்டவெச் சமயத்தோரு மேவலி னகண்டச்சீர்த்தால். (௨)

சுழிபடு பிறவித்துன்பிற் றேய்க்குமும் மலமாங்கந்தல்
கழிபடும் வண்ணந்தத்தங் கடவுளர்ப் பரமென்றுன்னி
வழிபடு மன்பாலிங்ஙன் வரம்பிலா னந்தந்தோய்ந்தார்
பழிபடு மகங்கணல்கும் பதமரு வருப்பர்மாதோ. (௩)

நீறிடு மன்பர்கண்முன் னேரிலுள் ளுருகியன்பா
லேறிடுங் கையர்தானே யிறங்கிடும் வினையாற்றி
லூறிடும் விழியராகு முண்மையா னந்தங்கண்டோர்
கூறிடு பயன்கொள்கூலிக் குரிபிடும் புரிவார்கொல்லோ. (௪)

ஒன்றதே பரமெய்யன்ப ருன்னிய வடிவங்கொண்டு
நின்றதே யதனைசைப்பாய் நிறைதிரு வருண்மற்றஃது
சென்றதே வந்ததேயென் செயலின்ப விளையாட்டாகு
நன்றதே யாவுமென்னு ஞானமெய்ப் பத்திதோய்வார். (௫)

வருந்துறப் புரியுமாயா மலக்கொடும் பிறவிநோய்க்கு
மருந்தத விடத்தம்பொற்றுண் மண்மிசை பதிக்குமன்பு
திருந்துமெய் யடியாரின்பச் சேவையாந் தரிசனத்தின்
விருந்துதம் விழிகட்கூட்டி விருந்தவர்க் கிடுவார்மாதோ. (௬)

குடியினி விரத்தற்காகக் கோவண வுடைதரித்த
வடியனை யெதிர்கொடிற்க ணுதனத் தமைத்துப்போற்றி
யொடிவிலிச் செல்வம்யாவு மும்மதே யெம்மதேவல்
கடிதரா தேற்பீயென்னக் கருத்துவந் தேத்துவாரால். (௭)

குணங்குறி யாந்தூலஞ்சூக் குமம்பெறு விகாரமிச்சைக்
கிணங்குறும் பருவத்துக்கா யில்லற மேற்கொள்கில்லார்
நுணங்குணர் வுடைச்சேயாற்று நோன்பினூற் பெற்றமுன்னோர்
கணங்குளிர் கதியிலேற்றுங் கற்பியன் மணங்கொள்கிற்பார். (௮)

தருப்பொலி கொடைக்கைமேவுந் திகையவான் குடிகண்மல்குந்
திருப்பொலி வளமைசாலத் திகழ்வட பரிசாரப்பே
ருருப்பொலி தலைமைநாட்டிற் கொண்மணித் திலகமேய்க்கு
மருப்பொலி யன்னியூரின் வளப்புடை நகர்ச்சீர்சொல்வாம். (கூ)

## புடைநகர்.

வேறு.

அத்திசண்பகங் கடம்புபுன்முருக்கர சாத்தி
யித்திநாவல்குங் குமங்கொன்றைகோங்குமா விலுப்பை
பத்தியாலர்ப் புன்னைபாதிரிமலைப் பச்சை
பித்திகைபலா கூவிளம் வன்னியும் பிறங்கும். (க0)

தினகரன்கரம் படர்தரா திருண்மிகச் செறியும்
வனமிசைப்பவ ளம்புகநுழைகதிர் வயக்க
மனகவேனிலான் யானைவான்முகத்தினி லமைத்த
வினவணிப்புகர்ப் புள்ளிகளென்றிட விசையும். (கக)

கனிரசந்தழை யலரிருல் கலந்ததேன் களைப்பின்
பனியின்பின்புகும் பருவத்திற்றருவினம் பருகி
யினிமையார்தளிர் கொடுதழைத்தலினும்மை யினிற்செய்
புனிதநல்லறப் பயன்பிற்றேயுயிரினம் புரைபும். (கஉ)

வனநடுப்பொலி தெண்டிரைக்கடிமலர் வாவி
கனமிசைந்தலர் நிறைந்துபல்புட்குரல் காட்டி
யனகநாயக னுறப்பசப்பமைந்தவி ரரிவை
தனது பேரெழி லேக்குகண்ணுடியிற் றழைக்கும். (கங)

அரவவான்றிரை வாவிவாரிசமுக மலர்வித்
தூவுகொங்கையா முகையுடனிலைபொலிந் துறுதல்
மாகதத்தட்டின் மணியெடுத்தினனெனு மருகன்
வரவுவந்துசெல் விமைத்தருமாமியை மானும். (கச)

தருவெலாந்தடஞ் சுவைபெறத்தேன்மிகத் தந்த
திருவெலாம்பொலி யோதிகண்குயமெனத் திகழ்நம்
முருவெலாங்கொடு நங்களையாற்றுநீ ருறலான்
மருவெலாந்தரு குதும்மென்றுட்டயர்வர்கண் மாதர். (கரு)

ஆடியேபுன்னை வைதுபாதிரியுதைத் தசோகு
பாடிமாதவி நட்பமைந்தேழிலம் பாலை
நாடியேமரா குராவணைத்தணிமுல்லை நகைத்துத்
தேடியேமகிழ் சுவைத்துச்சண்பகநிழல் சேர்த்தே. (கசா)

மருவிளங்கிய தளிரலர்பொலிந்திட வைக்குந்
திருவிளங்கியல் மங்கையரைம்புலச் செறிவா
ருருவிளங்கிய விடலையர்தம்முளத் தொழியா
வெருவிளங்கிய மால்செய்தின்புறுத்தல்விம் மிதமோ. (கள)

கற்பயின்றிடு கோளினருவளையுட் கதித்து
மற்பயின்றிடு வார்களுமழைச்சர மாற்றும்
விற்பயின்றிடு வார்களுந்தெழிப்பிசை வீரச்
சொற்பயின்றிருஞ் சிலம்பத்தினிறைந்தனர் சூழ்வார். (கஅ)

பாரிருக்கைபெற் றிசைவரையினங்கள்பற் பலவு
மூரிருக்கைநன் றென்னத்தம்முளத்திடை யுன்னி
யோரிருக்கைபெற் றீண்டமைவுற்றசீ ரொக்குங்
காரிருக்கையாந் தேரிருக்கையின்பெருங் காட்சி. (ககூ)

பொறியமைந்தணி முகபடாக்கிம்புரிப் பூணர்
வெறியமைந்திகன் மும்மதக்கைம்மலை விரையுங்
குறியமைந்திடா தாற்றலிற்றம்முளங் கொண்ட
நெறியமைந்திடச் செலுத்துநரிந்திர னிகர்ப்பார். (உ0)

மெல்லெனச்செலல் விரைவுறச்சென்றிடல் விறற்போர்
வில்லெனச்செல லப்பிலேதுதலிரு தாண்மே
லொல்லெனச்செல லாதிகொள்பரிமிசை யூர்ந்து
சொல்லெனக்குறி யிடத்தமைவாரெண்ணில் சூரர். (உக)

படைநகர்த்துகை வீரர்கண்வாவிகள் பாந்த
புடைநகர்ச்செய லமைத்துக்காதார்குழை பொருகட்
கடைநகர்த்திடு மணங்கணாடவர் களிதோ
யிடைநகர்த்திற நான்முறைக்கேற்றிட விசைப்பாம். (உஉ)

## இடைநகர்.

### வேறு.

கலன்விருந் தெனக்கொளின்பக் காரிகை மடநல்லார்மெய்ந்
நலன்விருந் தெனக்கொள்பொற்பி னையக ராணர்தங்கட்
புலன்விருந் தெனக்கொண்மாட்சி பொலிநலம் பலவுந்தாங்கி
நிலன்விருந் தென்செய்குன்ற நேர்புளி னங்குலாவும். (உ௩)

வெயில்விரி வேனிலிற்பூண் விரவுமெல் லியலார்தீஞ்சொல்
குயிலினம் வினவிப்பாடங் கூறல்போன் றினிதுகூவும்
அயில்புரை கண்ணார்கூந்த லவிழ்ந்தூற மேகமென்று
மயிலினஞ் சாயல்கற்று மகிழ்தல்போன் றாடியார்க்கும். (உ௪)

பச்சையஞ் சுகங்கள்கொள்வாய் பார்த்தமங் கையர்கள் கொண்க
ரிச்சைமெய்ப் பசப்பாலெம்மி லேற்றமா னீஃதீந்துங்
கொச்சையார் சொற்களெம்வாய் கூறிடத் திருந்துமென்னச்
செச்சையந் துணர்வாய்விண்டு செங்கையேற் றுவகைவாய்ப்பார். (உ௫)

ஓவியர்க் கெழுதொணாத்தம் முருவினை யுளத்திற்கொண்ட
வாவிநா யகர்கைதீட்ட வமைதரா தயல்சார்மின்னார்
மேவிய வடிவம்போன்று விளங்கலாற் பிணங்கிவாடிக்
காவியங் கண்ணீர்வார்த்துக் களபமேற் கரைப்பரம்மா. (உ௬)

வனக்கண்ணீ ராடாரூடு மகளிரை மைந்தர்பார்த்தெம்
மனக்கண்ணீ ருற்றமைந்த வாய்மையைக்காட்டலாஞ்சொப்
பனக்கண்ணீர் வந்துங்காணப் பான்மைசான் மதிச்சோர்வாலுந்
தனக்கண்ணீ ராட்டினீரென் சாதஃவிண் டூடல்தீர்ப்பார். (உ௭)

விணங்குலா மாடத்தும்பர் விசிறிடுஞ் சிவிறிகொண்டு
கணங்குலா மின்பாட்டாற்றுங் காதலர் மங்கைமார்மேன்
மணங்கமழ்ந் தவிர்பொற்சுண்ண வார்புனன் மார்பிலோச்சிச்
சுணங்குபூத் திட்டவுந்தந் தூசும்யாம் பிரியேமென்பார். (உ௮)

ஆடலாற் பாடலாற்பொன் னனையவ ரூடன்மாற்றிக்
கூடலா லுடைபூண்கொண்ட கோலநெஞ் சமைத்தின்பென்று
நீடலா லுவகைகூர்வார் நிறையிடை நகர்க்குவான
நாடலா துவமையென்ன நாமெதை நவில்வதம்மா. (உ௯)

## உண்ணகர்.

### வேறு.

புகழ்தருநாரா யணத்திருநாமம் பொலியுருப்போக்கின னுலக
ரிகழ்தருபன்றி யுருக்கொடுபுவிதொட் டீசனூர்தாளறிந் திலேன்
நிகழ்தருகாலத் தியற்புனலுருவ நேர்ந்தறிகுவனென மாயன்
அகழ்தருவினைகொண் டாமகழியின்பே ராழமாரறிதா வல்லார். (௩0)

இச்சகத்தரிகொண் டுளவவதாரத் தேற்றமாய்முதலிரண் டாகு
மச்சமுங்கூர்மந் தானுமாந்தடத்த வடிவமுஞ்சங்கமு மணியும்
மெச்சருச்சனைசெய் சகத்திரவனச வியன்மலருந்துதைந் தங்஖ன்
நிச்சலும்பூசை யாற்றுசீர்காட்டி நிறையகழ்ப்புகழெவர் நிறைப்பார்.

பச்சியலகழி யணித்துறவண்டப் பாப்பெலாம்விழுங்கிமே லெழுந்த
நொச்சிநாற்றிசையு மெண்கதவமைந்து நோக்கணிபெறவமை காட்சி
மெச்சியல்வேதம் போலயான்பெற்ற வேதனும்பெயரிறை விறைவ
னுச்சிதமுடிகண் டிலனினிக்காண்பே னென்றுருவெடுத்தசீ ரொக்கும்.

அவிர்பிரமாண்ட மட்டுநீண்மதிலா யமைந்துமேலதிசய மறிய, நவில்வடிவெண்கண் ணுலமையாமை நாடுபுதன்சிட்டி வலியாற், குவியுளச்சனகா தியரையொத்தெண்ணில் குமரர்பெற்றிடவிறைச் சியின்மேற், கவின்படியனந்த கோடியாஞாயிற் கணந்திகழ்ந்திசைகுவ வம்மா.

திருவருணையின்முன் றேடிநானிறைவன் சென்னிகண்டேனெ னும் பொய்மை, மருவுசொற்றீமை யொழிதர்விங்஖ன் வந்தருள் வன்னிநாயகற்றுழ்ந், தொருவுறக்கிரேத யுகத்திஞானத் துண்மை பெற்றிடவருச் சித்த, மருவணிக்கமலன் பெறுமிசைவரத்தின் மகிமை போன்றுயர்ந்தன மதில்கள்.

என்புருவாகு முடலினையருண்மன் னீச்சுரன்றிருவடி கருதா
மன்புகொண்டியலா னந்தக்கண்ணீர்கொண் டாட்டிடினருந்தவச் செல்வி
பின்புயர்வமைதன் றிருவருளின்பப் பேருருநல்குமென் றுவப்பால்
முன்புகும்பலர்க்கு முன்புகல்போத முறைமைகாட்டுவவகழ் மதிலே.

கொற்றமார்நொச்சி மிசையிசையிடப் கொடியசைதோற்ற முன்னுளிற், கற்றவாணவத்தா னுன்முகக்கடவுள் காண்கிலன் காண்கிலன் கானில், விற்றழைநாத்தன் னிப்பெயரமைந்த வேடனுள் ளன்பினுற் காணப், பெற்றனனுலகி ருற்றுமன்னீசற் பேணுமென் றழைத்தல்போற் பிறங்கும். (ருஎ)

கந்தரமணைய வந்தரமெட்டுங் கதிர்மணிமாடமா ளிகைதோய் சுந்தரப்பொலிவார் வீதியினிருபாற் சுகந்தமெண்டிசைகளும் விழுங்க வுந்தரமியமீ துற்றுளார்க்கினன்வெப் புறுத்திடாதின்புதந் தலர்தோய் தந்தலையசைத்துச் சாமரைபுரையுந் தருக்களேந்தருக்களிற் றழைக்கும்.

அநட்டினிற்சுமந்தீன் றளித்ததாய்தந்தை யாதியா முறவையு மின்பம், புநட்டிடுமனைவி மைந்தரொடுயிர்நேர் பொருளையும்பொரு ளெனக்கருதா, துகட்டிடுமின்பத் தாற்பொதிமிடிநோ யுற்பவமிதி னன்றி யண்ட, முகட்டினுற்றிடினும் புகுத்திடும்பாத்தை முறையினர் வீதியும் பொலியும். (ருஅ)

வரையிடத்தமைந்த வரையில்வான்பொருளு மறிதிரைக்கருங் கடன் மருங்கார், கரையிடத்தமைந்த கரையில்பல்பொருளுங் கரு மணிவண்ணமால் காவற், றரையிடத்தமைந்த பொருள்களும்வட விற் றழைத்தவெப்பொருள்களு நிறைந்தே, யுரையிடமாற்றற் றுரையிடற் கொன்று முவமையற்றனகடை வீதி. (ருகூ)

தருக்கவினமரா பதியடைந்திட்டோர் தாம்பெறற்கரியதொன் றினையும், பெருக்கமாரன்னிப் பதிக்கடைவீதி பெறிற்பெறலாமெனும் வளமைத், திருக்கவின்படைத்த நன்மைமுற்றமைந்த திறத்ததென்னி னும்புகு மாந்தர், நெருக்கமாரிடர்வாய்ந் திட்டவோருண்மை நிகழ்வு மோதினனெளித்திலனே. (சுo)

### வேறு.

கொற்றமேலாங் குலத்தனிழி குலப்பெண்ணுடனே கூடிடலா லுற்றவநுலோ மர்களேனை யுதிப்பார்பிரதி லோமர்கன்னி பெற்றகானீ னர்கள்கைமை பிள்ளையாங்குண் டகர்மேலோர் சொற்றபணிக ளாற்றிநலந் தோயுமறுகுந் துலங்கிடுமே. (சுக)

கடைவாயணையு மிரவலர்தங் கருத்தின்குறிப்பை யுய்த்துணர்ந்து
கொடைசெய்திறத்தாற் சடையனைத்துங் குணமாரன்பிற் றம்மில்லத்
திடையெய்தடியார் பசிதணித்திட் டிளையான்குடிமா றனைப்போன்று
நடைகொண்டியல்வே ளாண்டகையார் நயந்தவீதி பலவாமால். (சஉ)

அருண்மிக்கமைமன் னீச்சுரனுக் காங்தோழமையைத் துலக்கிடுவான்
பொருண்மிக்கமைகு பேரனின்பம் பொலியும் படிவம் பலதரித்துத்
தெருண்மிக்கன்னி யூரமைந்த செயல்போலணைவா ரதுமிடிநோய்
வெருண்மிக்குறப்பொன் னிடுநாய்கர் வீதிவிண்போல் விளங்கிடுமே. (சங)

பாசுதரித்த கரமன்னிப் பரமன்றிருத்தாட் டுணையன்பு
விரசுந்தரத்தர்ச் சனைமலரா விழிபெய்தாழி பெறுந்திருமால்
வரசுந்தரப்பே ரணையண்ட வரம்பெங்கணுஞ்சென் றமைதரல்போல்
அரசுபுரிந்திங் கணைவீதி யணிவைகுந்தத் தவிர்ந்திடுமே. (சச)

ஆளாமெனக்குன் சந்ததியென் றடிமையோலை யரன்காட்டல்
மீளாவடிமை யெனவூரர் விளம்பவிரண்டும் பொய்யாகி
வாளாவொழியா திசைசைவ மறையோர்வேத வரம்புணரு
நீளாதரப்பூ சுரர்வீதி நிறைசத்தியலோ கம்போலும். (சரு)

பாசமறமுப் பொருளுண்மை படிப்பார்கேட்பார் பழுதகல
வீசனுவப்ப வருச்சனைசெய் திடுவாரடியா ரேவல்செய்வார்
நேசமுடனல்வர்கள்பாட னிகழ்த்தியுள்ள நெக்குநெக்கு
நீசமனமைம் பொறியிறைதா ணிழலிற்கூட நின்றிடுவார். (சசா)

வாள்விப்பிரர்பொய்ப் புலப்போகம் வாஞ்சித்திரக்க மற்றியற்றும்
வேள்விக்கொலையைக் குற்றமென வெறுத்துச்சீவ கருணைநிறை
தாள்வித்தகர்க ளிறைவனிரு தாள்வித்தகத்தர் தம்பாலாங்
கேள்வித்தகையோ ருளத்தினையுங் கிருபைக்கடல்செய் மாதவரே. (சஎ)

முல்லையலரா மூரலினார் முல்லையலர்ந்து முதிருளத்த
ரில்லையென்னும் வறுமைதம திடைப்பாலன்றி யில்லாதா
ரில்லையடைவார் தம்வாய்கொண் டிசையாமுன்னங் குறிப்பறிந்து
வல்லையன்னஞ் சொன்னமற்றும் வழங்கிப்பூங்கற் பகம்புரைவார். (சஅ)

ஆணைபிறத்தல் பெண்மகவே யமைதலொன்றென் றுதித்திடுதல்
வீணையின்று யமைவாம்நால் விதமாமலடு மேவாமே
மாணையீன்றார் தவம்விளக்கு மணிபோலொழியாக் கீர்த்தியணிப்
பூணைபுனைமைந் தர்கணிறைந்து பொலியுஞ்செல்வ மனையெல்லாம். ( )

வேறு.

மாதரங்க வனப்புளவாவியே
மாதரங்க வனப்புளவாவியே
போதகத்திற் புணர்தருமாகத்தர்
போதகத்திற் புணர்தருமாகத்தர்.

இ-ள். மா—வண்டுகளையும், தரங்கம்—அலையோசையையும், அனப்புள—அன்னப்பறவைகளையும் உடையன, வாவியே—தடாகங்கள், மாதர்—கற்பு மங்கையர்களின், அங்கம்—சரீரத்துள்ள அவயவங்களின், வனப்பு—அழகை, உள்—மனத்தின்கண், அவாவி—விரும்பி, (ஏ—அசை) போது—தாமரைமலரையொத்த, அகத்து—இருதயத்துனிடத்து, இற்பு—மேலெழும் இயற்கையின்பத்தை, உணர்தரும்—அறிதலைக்கொண்ட, ஆகத்தர்—வடிவழகிற் சிறந்த ஆடவர்கள், (ஒவ்வொருவரும் தகுதியாராயுமிடத்து,) போதகத்தில்—ஐராவதமென்னும் யானையின்மீது, புணர்—பொருந்திச் செல்கின்ற, தரு—ஐந்து தருக்களுக்கும், மா—பெரிய, கத்தர்—தலைவரான பல இந்திரர்களுக்கொப்பாவர் என்பதாம். (ரு௰)

மாரவேளை வரத்தடுப்பாரெங்கு
மாரவேளை வரத்தடுப்பாரெங்கும்
ஆரவார மகத்தவிருந்தினம்
ஆரவார மகத்தவிருந்தினம்

இ-ள். மாரவேள்—மன்மதனாலேவப்படும், ஐ—பஞ்சபாணங்களும், வர—தம்மிடத்தடைதலை, தடுப்பார்—(தம் தவவலியால்) மறுப்பார்களும், எம்—எமது, குமாரவேளை—முருகக்கடவுளை, வரத்து—மேலான திருவருட்பிரசாதம் (அளிக்கவேண்டுமென்று துதித்து), அடுப்பார்—(பிரபஞ்ச விவகாரங்களைவிட்ட அறிவுமயமாகிநின்று அன்பினால்) நெருங்குவார்களுமே, எங்கும்—எவ்விடத்துமுள்ளார்கள், ஆரவாரம்—கோலாகலவொலி யுண்டாகத்தக்க, மகத்து—மேன்மையானது, அவிரும்—பிரகாசித்துக்கொண்டிருக்கும் (அதனால்) தினம்—நாடோறும், ஆர—உண்பதற்கு, வாரம்—உரிமையை, அகத்த — உள்ளத்தின்கட்கொண்டன, விருந்தினம் — புதுமையான கூட்டங்கள் என்பதாம். (ருக)

மதுரசங்க வரும்வண்டமிழ்வலர்
மதுரசங்க வரும்வண்டமிழ்வலர்
பதுமராகப் பணியிசைவேந்தரே
பதுமராகப் பணியிசைவேந்தரே.

இ-ள். மதுரசம்—தேனின் சுவையை, கவரும்—கொள்ளை கொள்ளும், வண்டு—ஈக்களது, அமிழ்வு—ஆழ்குதலைக்கொண்டுள்ள, அலர்—மலர்க் கூட்டங்கள், மதுரசங்க—தித்திப்பமைந்து சங்கப்பலகையேற்ற, அரும்—சிறப்பினராகிய, வண்டமிழ்வலர்—வளப்பம் வாய்ந்த தமிழ்ப்புலவர், பதுமராகம்—கவுத்துப மணியாலமைந்த, பணி—ஆபரணத்தின், இசைவு—பொருத்தத்தை, ஏந்தர்—தாங்கியவராய் விளங்குதலின், (ஏ—அசை) பதுமராக—பிரமதேவர்களாலே, பணி—சொல்லத்தகுந்த, இசை—கீர்த்தி வாய்ந்த, வேந்தரே—தன்மையுடையவராவர் என்பதாம். (ருஉ)

பாடகப்பதப் பத்தியர்செவ்வழி
பாடகப்பதப் பத்தியர்செவ்வழி
நாடகத்திர மிக்குவமங்கலம்
நாடகத்திர மிக்குவமங்கலம்.

இ-ள். பாடகப்பத—காலணி தரித்த (பெண்கள் பலரும்,) பத்தியர்—அன்பமைந்தவராய், செ—மேலாகிய, வழிபாடு—ஆராதனை வணக்கம் பொருந்தி, அகம்பதம்—தமதுள்ளத்தின்கணுள்ள இறைவன்றிருவடிகளை, பத்தியர்—கீதப்பாடலாற் றுதிக்குந்தன்மையினர், செவ்வழி—நெய்தல் நிலத்திராகத்தால், (ஆதலின்) நாடுஅகத்து-நோக்குவோருள்ளங்கள், இரமிக்குவ—சந்தோஷிப்பனவான, மங்கலம்—சுபகரம் பொருந்திப, நாடுஅகத்திர்—தேயத்திலுள்ளவர்களே, அ மிக்கு—அவற்றை மிகுதியாய்ச் சொல்வதற்கு, உவமம்—ஒப்புப்பொருளை, கலம்—யாம் கற்றிலேம் என்பதாம். (ருங)

வன்னிபாடல மாந்தருக்காமகிழ்
வன்னிபாடல மாந்தருக்காமகிழ்
சென்னிவந்த திருக்கடைவாயிலே
சென்னிவந்த திருக்கடைவாயிலே.

இ-ள். வன்னி—வன்னிமரங்களும், பாடலம்—பாதிரி மரங்களும், மாந்தரு—மாமரங்களும், மகிழ்—மகிழ மரங்களும், கா—சோலையின்கணுள்ள, வன்னி—கிளிகள், பாடல்—நீட்டிப்பேசுதல், அம்—அழகிய, மாந்த

ருக்கு—மனிதர்களுக்கு, மகிழ்—களிப்புவிளைவித்தல், ஆம்—ஆகும், செல்—மேகராசிகளுக்கு, நிவந்து—உயர்ந்துள்ளனவும், திரு—அழகமைந்தனவுமான, கடைவாயிலே—தலைவாசல்களே (உறைவிடமாகும்), இருக்கு—வேதங்களின், அடைவு—முறைகளையெல்லாம், ஆயில்—விசாரிக்கில், சென்னி—அவற்றின் முடிப்பொருளாகிய (மன்னீச்சுரர் திருவருட்சிறப்பு), வந்தது—பொருந்துவதாகும் என்பதாம். (ருச)

ஆரங்கொன்றை யலர்மணங்காட்டகம்
ஆரங்கொன்றை யலர்மணங்காட்டகம்
சாரந்தங்கவே தாகமஞ்சாற்றினர்
சாரந்தங்கவே தாகமஞ்சாற்றினர்.

இ-ள். காட்டகம்—வனத்தின்கண், ஆரம்—சந்தனமும், கொன்றையலர்—கொன்றைப் புட்பமும், மணம்—வாசனைசெய்யும், ஆரம்—முத்துமாலையணிந்த, கொன் — பெருமை வாய்ந்த, தையலர் — மங்கையாது, மணம்—விவாகச்சிறப்பை, அகம்—வீடுகள், காட்டு—காணச்செய்வனவாகும், சாரம்—சத்தநுபவம், தங்க-நிலைபெறும்படி, வேதாகமம்-வேதங்களையும் ஆகமங்களையும், சாற்றினர்—அத்தியயனஞ்செய்வோர்கள், சார்-புறச்சாரையும், அந்தம்—முடிவுகாலத்தையும், கௌ—பிடிப்பதற்கு, ஏது—காரணமாயுள்ள ஆகம்—சரீரத்தையும். அஞ்சு—பயமுற்றடங்கச் செய்யவல்ல, ஆற்றினர்—சன்மார்க்கங்களையநுட்டிப்பவர்களாவார்கள் என்பதாம். (ருரு)

அம்புயத்தனு மங்குவனண்ணனும்
அம்புயத்தனு மங்குவனண்ணனும்
வம்புலாங்கடுக் கைமன்னியத்தரே
வம்புலாங்கடுக் கைமன்னியத்தரே.

இ-ள். அம்பு—புஷ்ப பாணங்களை, உய்—செலுத்துகின்ற, அத்தனும்—கைகளையுடைய மன்மதனும், உவன்—இவனது, அண்ணனும்—தமயனாகிய, அம்புயத்தனும்=பிரமதேவனும், அங்கு—அவ்விடத்தில், மங்குவன்—கெட்டொழிந்தவராதலின், அண்ணல்—அவர்கள் நம்பாற்பொருந்தற்கு, நாம்—அச்சமடைவார், வம்புலாம்—வாசனையுலாவுகின்ற, கடுக்கை—கொன்றைமாலையணிந்த, மன்னியத்தரே—மன்னீச்சுரப்பெருமானே, வம்—வருதிரென்று, புல்ஆங்கு, பொருந்தல்போன்று, அடுக்கை—நெருங்குதல், மன்—நிலைபெற்ற நிச்சயமென்றுகூறும், இயத்தர்—சொற்களைக்கொண்டவராவார் என்பதாம். (ருசா)

தேறலூற்றலர் சிந்தைக்கடுக்குமே
தேறலூற்றலர் சிந்தைக்கடுக்குமே
சாறளிக்கணஞ் சக்கழுத்தேற்றரே
சாறளிக்கணஞ் சக்கழுத்தேற்றரே.

இ-ள். அலர்—புட்பங்கள், ஊற்று—சொரிகின்ற, தேறல்—தேனானது, சிந்தை—சமுத்திரத்தை, கடுக்கும்—ஒப்பாகும், தேறல்—ஞான நிச்சயம், ஊற்றலர்—அசைவற்ற மேலோர்களது, சிந்தைக்கு—போதத்துக்கு அடுக்கும்—நெருங்கி நிற்கும், சாறு—திருவிழாக்காலத்துப் பொருந்தும், அளி—அன்பமைந்தோரது, கணம்—கூட்டங்கள், சக்கு—கண்களை, அழுத்து—மன்னீச்சுரர் பாதங்களில் ஆழ்த்தவல்ல, ஏற்றரே—மேன்மையுடையவர்களே, சால்—மேலாகிய, தளிக்கண்—கோயிலினிடத்து, நஞ்சக்கழுந்து—காளகண்டத்தையுடைய, ஏற்றரே—இடபாரூடரே நின்றருள்வர் என்பதாம். (௫௭)

வானந்தத்தொனி வாசவன்பக்கமே
வானந்தத்தொனி வாசவன்பக்கமே
மானந்தக்கர மன்னியத்தாவென்பார்
மானந்தக்கர மன்னியத்தாவென்பார்.

இ-ள். வால்—வெண்ணிறமமைந்த, நந்தத்தொனி—சங்கோசையானது, வாசவன்—தேவேந்திரனது, பக்கமே—அருகுசெல்லும், வான்—ஆகாயத்தினது, அந்தத்து—முடிவின்கண், ஒல் நிவாச—பொருந்தி வசிக்கச்செய்யும், அன்பு—பக்தியாகிய, அக்கமே—கண்ணாகி விளங்குபவனே, மான்—மானையேந்திய, அந்த—அழகு நிறைந்த, கர—கைகளையுடைய, மன்னி அத்தா—மன்னீச்சுரனே, என்—அடியேனுடைய, பார்—உலகத்தின்மீதுள்ள, மால்—மயக்கத்தை, நந்து—கெட்டொழியச் செய்யவல்ல, அக்கர—பஞ்சாக்கர மந்திரம், மன்—நிலைபெற்ற, இயத்தா—சத்தத்தையுடையவனே, என்பார்—என்று (அடியார்கள்) துதிப்பார்கள் என்பதாம். (௫௮)

வேறு.

## திரிபங்கி.

தனத்தன தானன தானனதானன தன்னதனா

குணத்தமை வார்பழி யோடமெய்நீர்குதி கொண்ணிலைசால்
மணத்தமிழார்மொழி பாடலினான்மதி நன்மைகொள்வார்
கணத்திசைவார்விழி நாடல்விடார்கதி மன்னியுமா
வணக்கமுளார்வழி பாடகமேல்வதி யன்னியுளார்.

| தனத்தனனா | தனனாதனனா | தனதன்னனா. |
| --- | --- | --- |
| குணத்தமைவார் | பழியோடமெய்நீர் | குதிகொண்ணிலைசால் |
| மணத்தமிழார் | மொழிபாடலினால் | மதிநன்மைகொள்வார் |
| கணத்திசைவார் | விழிநாடல்விடார் | கதிமன்னியுமா |
| வணக்கமுளார் | வழிபாடகமேல் | வதியன்னியுளார். (௫௯) |

## திருக்கோயில்.

### வேறு.

சோதிமணிக்கோ புரத்துடன்விண் டுதையுமணியார் திருமதிலு
மீதிலெழுந்தோங் கியதோற்றம் விரிபாதலத்திற் குடிபொருந்து
மாதிசேடன் றன்னும மபத்தம்பெருது மண்டலம்வாய்ந்
தேதினாக நாட்டினையு மெட்டிநாடுந் திறம்போலும். (௬0)

தொண்டுபுரிவார்க் கருணிறைசிற் சுகவீடுதவ வருள்விருது
கொண்டமன்னீச் சுரர்தம்விடைக் கொடிநின்றசைத லன்பமையா
மிண்டுமனத்தர் போமின்மெய் யடியார்விரைந்து வம்மினென
வண்டுங்கயிலை நந்திபிரா னன்பிற்சென்னி துளக்கலொக்கும். (௬௧)

போற்றுமடைப்பள் ளியினீறு பூத்தநெருப்பும் புகையுமிகத்
தோற்றுந்திறமன் னீசருக்குத் தூயவுளம்நை வேத்தியமா
யாற்றுந்தகையோ ரிகதலத்தி லடையுந்தகையும் பரத்திலுடன்
மாற்றுஞ்சிறப்பு முணர்த்திடுவான் மண்பாதலம்விண் புகல்போலும்.

அளியார்கடுக்கை முடிவன்னி யப்பாருந்த வச்செல்வி
தளியார்தாநெய்த் தீபமிகத் தழைக்குந்திறமா ருயிர்க்குயிரா
மொளியாரநுப வம்படைத்தோ ருலப்பிலார்க ளவன்றிருத்தாள்
வெளியார்முத்தி நிலைகூட்ட வேண்டியிரக்குந் தகைத்தம்மா. (௬௩)

கண்டிப்பொலிவுந் திருநீற்றுக் கவசப்பொலிவுங் கவின்றருமெய்த்
தொண்டிற்கிளர்ந்த பேரன்பர் தொகைதம்முள்ளத் திடைபென்று
மெண்டிக்குடையான் சொருபமுட னிலங்குந்தடத்த வநுபவமு
மண்டிச்சிறக்கு நலங்காட்டி யார்வத்துதிகள் பாடுமால். (௬௪)

கரையிலின்பக் கடலாகுங் கருணைமன்னீச் சுரன்றிருத்தாள்
வரையிலுதித்து நீறுமக்க மணியுமலம்பி யருவியெனத்
தரையிற்றிருத்தாட் டுகளமைந்து சாருமன்பர் தமதுகண்ணீர்
புரையில்கோயி லாவரணம் புகுவார்க்கின்பம் புணர்த்திடுமே. (சரு)

மருவாசகற்றுந் தேவார மதுரவொலியு மனங்கரைக்குந், திருவா
சகஞ்சொன் மெல்லொலியுந் தேனுறின்பத் திருப்புகழாம், பெருவாச
கத்தின் முழக்குமறைப் பெருக்கின்னிசையும் புணர்ந்தொன்றாய்த்,
தருவாசவற்கும் புவியமையத் தக்கமெய்ம்மா தவமளிக்கும். (சசா)

மிக்கபுகழ்நா ரணன்றூறு விளங்குஞ்செயல்யா வருமுணரத்
தக்கவிசைத்த போதகசௌளந் தரியாமருந்த வச்செல்வியாய்த்
தொக்கவுயிர்கள் யாவையுஞ்சிற் சுகத்துண்மூழ்கத் தடம்புனன்மேற்
புக்கதவந்தோ யன்னையன்னிப் புரிக்கோயிலின்மாண் புகலரிதே. (சஎ)

தாயின்மாட்சித் தவச்சிறப்புத் தங்குமன்னி யூர்பொலியுங்
கோயின்மாட்சி முடித்தந்திக் கோகனதத்தின் மாலளித்த
சேயின்மாட்சிப் பூசனையின் சிறப்பும்வன்னீச் சுரனவற்குத்
தோயின்மாட்சி வரமளித்த தொன்மைக்கதையும் சொற்றிடுவாம். (சஅ)

நகரப்படலம் முற்றிற்று.

ஆக கவி—கருக.

---

மூன்றாவது

# பிரமதேவன்பூசித்தபடலம்.

---

வானகத்தி லமையிமையோர் வழுத்துபுகழ் நைமிசமாங்
கானகத்தில் விரிவமையக் கழறுமன்னி யூர்மகிமைத்
தேனகத்திற் றித்திக்குஞ் சிவபெருமான் றிருவருளால்
யானகத்திற் றூண்டியவா றிசைப்பனொரு சிறிதன்றே. (க)

பூவிசைந்த நின்கணவன் பூசைபுரிந் திடவன்னித்
தேவிசைந்த விசையனைத்துஞ் செகந்தோச் சிறியேன்சொல்
பாவிசைந்து திகழ்தரச்செய் பாரதியே யுனக்கெனக்கு
நாவிசைந்த பொதுவாகி நண்ணுநிலை சிறப்புறவே. (உ)

மத்தமதி முடித்தசடை வயங்குமன்னீச் சுரன்றான்மெய்ப்
பத்தர்தமக் கெளியனென்றும் பாவியபே ரகங்காரச்
சித்தர்தமக் கரியனென்றுந் திகழ்தருபே ரருளாட
லித்தரையோர்க் குணர்த்திடுமா றினிதுதிரு வுளங்கொண்டான். (ங)

அருட்கடலாம் பரமனுளத் தமையசைவா லறிதுயில்செய்
தெருட்கடலா நாரணனுந் திசைமுகனுந் தம்முளத்தின்
மருட்கடல்போன் றிசைமாயை மயக்கடைந்தியான் யான்மேலென்
றிருட்கடலாழ்ந் தமர்புரிந்தா ரெண்ணிலுக மிகன்றந்தோ. (ச)

அந்நாளி லவர்நடுவோ ரக்கினிவான் கிரிபெரிதாய்
முன்னாக விளங்கியிதன் முடியடிகாண் போர்பெரியோ
ரென்னாத மிருவர்செவி யெட்டிடக்கேட் டிடுகாலை
பைந்நாகத் துயின்மாயன் பதங்காண்புன் யானென்றான். (ரு)

திசைமுகன்யா னிதன்முடியைத் தெரிந்துதிரும் புவனென்று
விசைகொளன்னப் படிவாகி மேற்சென்றெய்ப் படைந்தான்கீ
ழிசைதுணைத்தாள் கண்டிடமா லேனவுருக் கொடுமருப்பால்
மிசைபொதிமண் ணகழ்ந்தகழ்ந்து விறல்குன்றி மெலிந்தானே. (சு)

கதுமெனவாண் டாயிரமே கடந்தனசென் றோர்வேறும்
புதுமையுண ரார்தமெதிர் புகும்படிவே கண்டிட்டார்
பதுமனெதிர் சிவன்முடிதோய் பரிமளக்கே தகைமலர்வீழ்ந்
ததுமகிழ்வோ டிழிந்துபுவி யடைந்துபொய்ச்சான் றதையாக்கி. (எ)

நான்முடியோ னான்முடிகண் டேனென்ன நவின்றிட்டான்
கான்முடிபைந் துளவணிமால் கண்டிலனென் மெய்யுரைத்தான்
றேன்முடியா துமிழிதழிச் செஞ்சடைவா னவன்றெரிந்தே
வான்முடிநீர் முடிதுளக்கி மாயவற்கின் னருள்வழங்கி. (அ)

திசைமுகன்றன் முகநோக்கிச் சினந்திந்தக் கைதைநினக்
கிசைமுகமன் சார்பொய்ச்சான் றிசைத்ததா லெமக்குதவா
வசைமுகந்து போகவென வழுத்தியுனக் கிருநிலத்தில்
நசைமுகமன் கோயிலின நண்ணுதா குகவென்றான். (௯)

ஈசனுரைத் தருண்மொழிகேட் டிதயமிகப் பதைபதைத்து
வாசமலர்த் திருத்தாள்கள் வணங்கிமறை யாற்றுதித்து
நீசமனக் கொடியேன்செய் நெடும்பிழைகள் பொறுத்தவைபின்
மோசனமாம் பரிகார மொழிந்தருளென் றடிபணிந்தான். (௧௦)

கமலன்வழி பட்டிரக்கக் கருணைநெடுங் கடலிரங்கி
யமரர்முனி வர்ப்பிழைத்த வரும்பழிபா தகங்களெலா
நமதருளா லொழியுமிவ ணம்முன்னீ புரிபிழைக்கு
விமலபரி காரமின்றா யினும்விளம்பக் கேட்குதியால். (௧௧)

வேறு.

மன்னியசீர்பொலிகொங்கு வளநாட்டிற்சாதரியாம் வளநள்ளாறு, சென்னியமுற்றமைதடஞ்சால் புண்ணியநற்றலஞ்சிறந்து திகழுமங்கண், மின்னியல்விண்முகிலுறங்கு செழுஞ்சோலை, வளங்கவின்று மேவுமப்பால், வன்னியெனும்படிவமைந்தீண் டுறல்போலோர் சிவலிங்கம் வயங்குமாதோ. (௧௨)

அவ்விலிங்கமிவ்வருணா சலம்போன்றேயுகந்தோறு மமையுமேனிச், செவ்வியற்கைமாறியுறு மங்கமைந்தெம்பூசனைநீ சிறப்பச்செய்து, கவ்வியதுன்பகன்றுபழ மையிற்பொலிமெய்ந்நலங்களெலாங் கலந்துவாழ்கென், றெவ்வியற்றன்பேரருளா லுரைத்தகண்டவான்சொருபத் தொளித்தானன்றே. (௧௩)

சிவனருளின்வழிகொங்கு நாடணைந்துவானிநதி தீரத்தென்றும்
புவனமுய்யவிளங்குதிரு வருள்வடிவாம்வன்னிலிங்கப் புனிதன்கோல
நவமலிபொன்சடையமைந்த கங்கையுறழ்சாதரிமா நதிநல்லாறுற்
பவமிசையம்புயத்தாங்க வாவியினீர்படிந்துபரி சுத்தனானான். (௧௪)

தன்கரத்தாலோர்தீர்த்த மதன்கரைக்கணுண்டாக்கித் தழைத்த தீர்த்த, நன்கமைகைக்கமண்டலத்தின் முகந்துசென்று கருணைவன்னி நாதரின்பக், கொன்கவின்றவிலிங்கவுருத் தன்முகந்தோய் விழிகளுளங் குளிரக்கண்டு, மின்கதிர்க்கும்புந்தியினுள் ளுவகையன்புதுளும்பவடி வீழ்ந்துபோற்றி. (கரு)

மறைவிதியாருபசாரத் திரள்களுக்குப்புவியின்மறை விதிவாரா மெய்த், துறையிலபிடேகமருச் சனைபூசையின்பமிசை துதிகண்முற் றும், நிறையவியற்றுபசார வளத்தையென்சிற்றறிவுகொடு நிகழ்த்திற் சாலக், குறையுமன்றிவேற்றுமைக ணிறையுமென்றுமஞ்சுபுமேற் கூறு வேனே. (கசு)

தன்னகத்திற்கண்டவண்ண மேபுறத்தும்புறத்தமையுந் தன்மை யேபோன், மன்னகத்துங்கண்டுருகுந் தவம்பூசைச்செயலனைத்தும் வழாதுசெய்தே, பொன்னகத்திற் பொலிவுறுநெஞ் சகத்திலின்பாரன் பருவி பொங்கிச்சாயப், பன்னகத்தின் பூண்மார்பன் றிருவருட்சீர் தன்னறிவிற் பதிகைகண்டான். (கஎ)

என்வசமேயன்றுமனம் நாமமுருவத்தினைநா டிடிலாங்கார
மின்வசமேபோந்துபல துன்பத்துமெனையழுத்தும் விடுத்துள்ளன்பா
லுன்வசமேவிடப்புரியி லுலவாதபேரின்ப வூற்றுநெஞ்சந்
தன்வசமேதெனவறியேன் மாயையினாலுளமயங்கித் தயங்கினேனே.

அண்டமுற்றுமாகிநின்றாய் நீயேயென்போதமிசை யசையவாற்றிக்
கொண்டவினைகளைக்காட்டி யூட்டுகின்றாய்நீயேயிக் கொற்றந்தன்று
லெண்டருமிவ்வழிபாடு முன்செயலென்றெப்புகின்றே னெனினுநாயேன்
பண்டகங்காரத்தியற்று தீதுமுனதென்னவச்சம் பதிகின்றேனே. ( )

என்றுபலபடத்துதித்துப் பலகாலந்தவம்பூசை யியற்றியன்பா
னன்றுருகும்பிரமன்முயல் பெருந்தவத்துக்குவந்தருளி நம்பன்வெண்மைக்
குன்றுறழ்மால்விடைமீதி னீலமணிவரையனைய கோலப்பாவை
பொன்றுதைபூரணபுளக களபமணிக்கொங்கையொடு பொருந்திமேவ.

சகத்திரமாங்கோடிவெயி லவர்கூடும்பிரகாசந் தாங்கித்திங்க
ளகத்தமைசீதளந்துளும்பிக் கண்டபுலன்கரணங்க ளனைத்துநீங்காச்
சுகத்தரங்கவாரிதியி லசைந்தாடச்செயலொன்றுந் தோன்றாதோய
மகத்துவந்தோய்புன்முறுவ னிலவொழுக்கக்குண்டலங்கள் வயங்கியாட. ( )

பொன்வரைமேனிறைசூலார் முகில்கிடந்ததன்மைதனைப் போற் கண்டத்தின், மின்வயங்குங்காளமன்பர்க் காத்தாள்கைகாட்டியொளி விருதிலாட, மென்வரைசாலபயவா தக்காங்கனொடுமிளிர்ந்தான் விமலன்வாசக், கொன்வனசத்தாள்பிரம னுள்ளமுழுவதுங்கொள்ளை கொள்ளக்கண்டான். (உஉ)

வீழ்ந்துநெடிதமைந்துணர்வு பிறந்தூற்றிற்பெருகியெழும் விழி நீர்வெள்ளத், தாழ்ந்துபுறத்துருமறைய வகவிழியாற்கண்டுவப்புற் ருடிப்பாடி, வாழ்ந்தனன்வாழ்ந்தனனடியேன் பொய்ப்பணியைமெய்ப் பணியா மதித்துத்தேவர், சூழ்ந்தமையவெனக்களித்த நின்காட்சியா லுவப்புட் டுளும்பினேனே. (உங)

வினைத்திரளாருயிர்களுக்காந் துயர்ச்சடலந்தந்திடச்செய் விதி யைமேலா, நினைத்தெனக்கார்நிகருற்ற ரெனச்செருக்கிலாழ்ந்துபுற நெறிதோய்வேன்பொய், முனைப்பொழிக்கவதனைமிகை படுத்தியென் மேற்சினமமைந்த முறையேபோல, வனைத்தகையாயனைத்துலகு முடையானேவலிந்தாணிற் காற்றலென்னே. (உச)

வன்மைபொலிகுணக்கடையே னதன்வழிபோய்த்துன்பமிக மருவிச்சாலப், புன்மையுற்றேனதனிற் கொன்றுமில்லையத்தகைமை போன்றேயின்றுன், நன்மைபொலிபூசையினு லெட்டரியபேரின்ப நான்கொண்டேனித், தன்மையினுற்புரிவினைக்குப் பயன்றருசான்ரு கினைநீ சரதங்கண்டேன். (உரு)

அலகறுதுன்பளவற்ற காலமடைந்தயர்ந்ததெல்லா மரனேயின்ப, நிலவுவன்னீச்சுரதேவ நின்மலநின்மலர்த்தாள்கண் ணோமுன்பே, விலகியதியான்பெற்றவின்பம் பெற்றமைந்தார்யாவர்கண்மண் விண் மேலுண்டோ, நலமலிமெய்த்தபோதகசுந் தரியிடப்பான்மேவியவா னந்தனேயோ. (உசா)

என்றுதுதித்திடுபிரமன் முகநோக்கிச்சிவபெருமா னிசைத்தல் செய்வான், நன்றுனது பூசனைகொண் டருளருட்சோதிச்சேவை நயக்குங்கான, மென்றுநலந்தாங்கிவன்னிப் பெயர்பொலிகநீபழமை யிசைந்தென்கோல, மொன்றுமுளத்துடன்சான்ரு நின்றனைநின் ரெழில்புரிகென் றுரைப்பான்பின்னும். (உஎ)

தளம்பொலிபங்கயநிறைந்த குளமிதற்குன்பேர்ப்பிரம தடாக மாகும், வளம்பொலிநாமம்பொலிக வெனக்குவன்னிலிங்கமென மரு வலாக, சளம்பொலிதீவினையிவண்சா ரணவருக்குமெந்நாளுஞ் சாரா தாக, வுளம்பொலிநின் வாஞ்சைமுற்று நிறைகுகவென்றுரைத்திலிங் கத் தொளித்திட்டானல். (உஅ)

புறக்காட்சிபெறும்பிரம னகக்காட்சிமீதிலொன்றப் பொருந்தி நாளும், உறக்காட்சியமைந்துறுதன் றெழில்புறஞ்செய்துற்றனனின் போங்குஞ்சோதி, நிறக்காட்சியமைந்தலிங்கம் புகன்றவண்ணஞ்சிலை யுருவாய் நிகழ்ந்துசோன், பெறக்காட்சியக்கினியிற் காட்டியதன்ன தன்புகழ்யார் பேசற்பாலார். (உகூ)

வளங்குலவுகிரேதயுகத் தினில்வன்னியூர்வன்னி லிங்கமென்ன, விளங்கவிம்மன் னீச்சுரனை யயன்பூசித்தருண்மகிமை மேவல்சொன் னேன், களங்கமில்சீர்வியாதன்மறு திரேதத்திலெய்தியுளங் கனிந்து போற்றிச், சளங்கடிந்திவ்வுலகரின்பம் பெறச்செயருணலஞ்சிறிது சாற்றுவேனே. (ஙo)

பிரமதேவன்பூசித்தபடலம் முற்றிற்று.

ஆக கவி—கசுக.

---

நான்காவது

# வியாசமுனிவர்பூசித்த படலம்.

---

மறைவிளக்கிய பிரமன்முன் யுகத்தினில் வரத்தின்
றுறைவிளக்கிய மன்னிநாயகன் றனைத் தொழுதித்
தறைவிளக்கியல் பின்யுகத்தருச்சித்துச் சாத
முறைவிளக்கிய நினைந்தனன் வியாசமா முனிவன். (க)

மேதகைச்சவு னகன்முதன்முனிவர்கள் வினவப்
பூதலத்தியல் கலையெலாந்தெளிவுறப் புகலுஞ்
சூதமாமுனி குரவனென் றடிதொழத் துலங்கும்
வேதநன்குணர் வியாசன்சீர்யாவரே விள்வார். (உ)

வேறு.

ஆதியாகிக ழுகண்டஞானத்திற மமைவியாசன்பாதம்
நீதியால்வழி பாடுசெய்தவனென நிலமிசையிசைமாந்த
ரோதிநாடிட வவன்பதம்பெற்றவ ருலப்பிலரிப்பாரின்
மீதிலாந்துவா பரத்திலுண்டாகிய வியாசனன்றவன்மாதோ. (௩)

இவன்றனக்குமுன் றிரேதமாயுகத்தினி லிப்பதவிக்கண்ணே
துவன்றமைந்திய லகண்டஞானத்தகை தோய்ந்தவனெனன்மெய்மை
யவன்றனோர்மன வெளிக்கணே திருவரு ளமைமன்னிலிங்கப்பேர்ச்
சிவன்றன்மெய்ந்நிலை யுணர்த்தினன்வன்னியூர்த் திறந்தெரிதரக்காட்டி. (௪)

அணிகுலாம்புகழ்க் கொங்கின்முன்யுகத்தினி லயன்புரிதருபூசைப்
பணிகுலாவிவன் னீச்சுரப்பெயருடன் பயின்றனமிந்நாளிற்
கணிசமேவுநின் பூசைகொண்டுவந்திடக் கருதினமெனநாகப்
பணிகுலாவான் றிருவருட்பெருக்கினாற் பகால்கேட்டுவப்புற்றான். (௫)

ஆருயிர்த்திரள் வெம்பவப்பிணியகன் றளவிலின்பிசைமுத்திச்
சீருறும்படி யைந்தொழிலியற்றான் றிருவருட்செயனாடிப்
பேருவப்புளத் திடையெழச்சாக்கிரம் பிறந்தகக்கனிவோடு
பாருலாவுசீர்க் கொங்குநாட்டிடைவன்னிப் பதியினிலடைந்திட்டான்.

தேனணைந்தபூஞ் சோலைகண்மலர்களைத் திருந்தருந்தவச்செல்வி
கோனணைந்தகோ புரத்திலாலயத்தினிற் குவித்தர்ச்சித்திடும்பேற்றாற்
றானணைந்திடும் பயன்மனிதப்பவந் தாங்கினோர்க்கிசைநீர்போல்
வானணைந்துயர் வளந்தெரிந்துவந்தனன் மறையுணர்விசைதூயோன்.

ஒளியமைந்தமெய் பொலிமன்னியீச்சுர னைப்பில்போருணீர்போற்
றெளிவமைந்துநான் முகன்பவம்போக்கிடுந் திப்பியத்துடன்றேனா
ரளியமைந்தவம் போருகமலர்த்திர ளணிநறுமணம்வாரி
வளியமைந்ததன் மேற்படக்களிப்பெனும் வாரியிலுளந்தோய்ந்தான்.

காந்தமொத்தென துளத்தினைவசமறக் கவருமித்தலந்தன்கண்
போந்தமாத்திரத் தீண்டுறக்கூட்டலென் புனிதமாதவப்பேறோ
பாந்தளம்பணி புனைமன்னீச்சுரனுளம் பாந்தபோருளேயோ
வாய்ந்ததாங்கலப் பேகொலோவென்றுதன் மனமுவந்தனனின்றான்.

கண்கவர்ந்திடு வனப்புடைப்பிரமவான் கமலவாவியினுள்ளாந்
தண்கவர்ந்திடு வான்புக்கதன்மையிற் §ருனநல்வினையாற்றி
யெண்கவர்ந்திடு நித்தியக்கடனெலா மியற்றினனுவப்போடும்
விண்கவர்ந்திடு சிகரிவன்னீச்சுரன் விரவுகோயிலுட்புக்கான். (௧0)

அருந்¶தைவப்பெரும் பேற்றினையடியவ ரல்லல்வன்பிணிதீர்க்கு
மருந்தைநாடுவா ரகம்புறவிழிபெறு மகிமையற்புதஞான
விருந்தையன்னியூர் வைப்பினைப்பவளமெய் வெற்பினையணித்தந்த
முருந்தைநேர்தபோ தகசவுந்தரியிட முயங்கருளுருவானை. (௧௧)

கண்டுதெண்டனிட் டுளங்கரைந்துருகிடக் கண்புனற்பெருக்கெய்த
வண்டுநாத்தழு தழுத்திடமதுரமிக் கமைமறைத்துதிசால
விண்டுகோயிலை மும்முறைவலஞ்செய்து மீண்டுமீண்டுபோற்றித்
தொண்டுவந்துவன் னீச்சுரன்பூசனைத் தொழின்முறையாற்செய்தான்.

பெருகுமன்பினு லிவ்வணம்பூசனை பேணிமாதவஞ்செய்து
மருவுநாள்வன்னீச் சுரப்பிரான்கருணையுண் மலிந்துமால்விடைமீதிற்
கிருபைதோய்தபோ தகசவுந்தரவல்லிக் கிளியிடப்பான்மேவப்
பொருவில்பூரண மதிமுகத்திருவிழி பொங்குபேரருள்கொட்ட. (௧௩)

மான்மழுப்படை யாதிகொள்சதுர்ப்புய வரைகளின்மணஞ்சான்ற
தேன்மலிந்ததா தகிகொன்றைமாலிகை சிறந்தசைந்திடச்சென்னி
மேன்மந்தாகினித் தரங்கமார்நுரையென விதுக்கதிர்வில்வீச
வான்மலிந்தசெக் கர்த்திரட்செவ்வொளி வாய்ந்துகண்கவர்கிற்ப. (௧௪)

அணிசெய்வீரகண் டைகளணிந்தவிர்திரு வடிமலர்த்துணைதோன்றப்
பணிபெருந்தவ வியாசன்றனிருவிழி பார்த்துளங்களிகூர
மணிகொள்கந்தரத் தான்சுரர்களும்பிர மதகணங்களுகூடத்
தணிவில்பேரரு ளோடுமுன்றோன்றலுஞ் சயசயவெனப்போற்றி.(௧௫)

கருவியுங்கர ணங்களும்போழல் கலந்ததாமெழுகேபோ
லுருகிடப்பா மானந்தவாரியி லுள்ளம்வீழ்ந்திடலொப்ப
வருவிதோய்விழி பெற்றிடும்வியாசன்று ணடியறுமாமென்ன
விருநிலத்தில்வீழ்ந் தெழுந்துபன்முறைதொழு திசைத்துதிபகர்கின்றான். ()

---

§ தானம்—முழுக்காடல். ¶ தைவம்—பாக்கியம்,

போற்றிமாயவ னன்முகனறிதாப் புனிதவான்பொருப்பேயோ
மாற்றிலாப்பசுங் கிரணமெய்யருந்தவ மங்கைபங்குள்ளானே
நீற்றிருந்திரு மேனியாயானந்த நிறையருட்கடலேயோ
வாற்றிருந்தவம் பெருவெனேவலிதுவந் தாண்டருண்மணிக்குன்றே. ()

மட்டிலாதபே ரருணிறைவேயுன்னை மாலயன்முன்றேட
வெட்டிலாயென விசைத்திடுங்கலையெலா மேழையேனொருவன்றன்
மட்டிலையமுற் றிடவிவணின்றன்பால் வரவழைத்துனதன்பிற்
கட்டியாண்டருண் மன்னிநாயகநின்மெய்க் கருணையென்னென்பேனே. ()

எனப்பல்வாறுபோற் றியதவவியாசன்மீ தியலருந்தவச்செல்வி
தனக்குநாயக னன்னியூரெனுமிசைத் தலத்திறையகனன்பாம்
வனத்துழாய்முடி யானிகர்வியாசனின் மகிமைநற்றவங்கண்டே
யினப்பெருங்களிப் பெய்தினமுனக்குநல் கிடாப்பொருளொன்றுண்டோ. ()

வேண்டல்கேட்குதி யென்றலுங்களித்தனன் மீண்டுமன்புடன்போற்றி
யாண்டநாயக தபோதகசௌந்தரி யணையுநாயகவென்னை
யீண்டணைந்துவந் தனைசெய்துன்சேவைநே ரின்பமெய்திடநன்கு
தூண்டருட்கட லாமுனக்கேழையேன் சொற்றுணர்த்திடலென்னே.

ஆயினுந்திரு வாய்மலர்ந்தருளலி லடியனேன்கேட்கின்றேன்
றாயினும்பெரு கன்புளாய்மிசைமிகத் தழைத்தவன்புறவேண்டும்
பேயினுஞ்சிறி யேனறியாமையிற் பிழைகள்செய்தனனேனும்
தோயிரும்பெருங் கருணைநீராற்பொறை சூழ்ந்தருள்செயல்வேண்டும்.

தறையின்மேவினர் யாருமென்போன்றனைத் தழைத்தபூசனையாற்றி
மறைநெறித்தலை நின்றிடவேண்டுமிவ் வன்னியூரென்பூசை
நிறைவுபெற்றகா ரணத்தினல்வானியா நிகழ்த்துபேருறல்வேண்டுங்
குறைவில்போரு ளிலிங்கமும்வானிப்பேர் கொடுதிகழ்ந்திடவேண்டும்.

களிமிகுந்திவ ணடைந்துனைப்பூசைசெய் கருத்துடைப்பெருந்தொண்டர்க்
கெளிதிலென்றனக் களித்தலிற்றிருவரு ளீதல்வேண்டுந்தீமை
யொளியவிவ்விடத் தென்றுநின்றிருவரு ளொளிபரப்பிடல்வேண்டுந்
தெளிவுலாநல முற்றுநீயளித்திவண் சிறந்திலங்கிடவேண்டும். (உ௬)

என்றுளங்கனிந் தருள்பொலிவியாசனுங் கிரந்துவேண்டியவாறே
யென்றுமீருவ னெனவரமளித்தன னிலிங்கமாய்விளங்குற்றான்
நன்றுதோய்வியா சன்களிப்பாற்பின்னு நயந்துமாதவம்பூசை
குன்றுருவுவப் பாற்பிரியாவிடை கொண்டகன்றனன்மாதோ. (௨௪)

இன்னவாதிரே தத்திடைவானியா மிலிங்கமூர்த்தியையன்பா
னன்னலங்கொளும் வியாசன்மெய்ப்பூசனை நவிற்றியதிறஞ்சொன்னேன்
பின்னணைந்திடு துவாபரயுகத்தருள் பெற்றமார்க்கண்டேயன்
றன்னதங்கையாற் பணிபுரிசரிதமுஞ் சற்றுரைத்திடுவேனே. (௨௫)

வியாச முனிவர் பூசித்த படலம் முற்றிற்று.

ஆக கவி—௧௮௬.

---

ஐந்தாவது

# மார்க்கண்டேயர்பூசித்தபடலம்.

---

புனிதத்தகைக்கா விரியின்வளம் பொலிசோணாட்டுக் கடவூரிற்
றுனிதீர்மிருகண் டேயர்மருத் துவதிதவத்தின் பயனாகிக்
கனியன்புருவச் சேயாமார்க் கண்டன்சரிதம் பார்மீதின்
மனிதப்பிறப்புற் றோர்காணும் வரையார்விளக்குப் போலுமே. (௧)

அன்னோன்பதினா றாண்டென்று மடைந்துகாலன் றனைவென்ற
பொன்னோன்றாள்கொள் பரமனுறும் புனிதத்தலமுற் றும்பேணு
நன்னோன்புற்றித் திருக்கொங்கு நாட்டிற்புகுந்தா னேவன்றி
முன்னோன்குறிப்பின் படியீண்டு முயங்கினான்கொ லன்றியே. (௨)

முற்சார்யுகங்க ளிரண்டினுநான் முகனும்வியாச முனிவானுந்
தற்சார்கடமை யென்றுதனித் தனிவந்தர்ச்சித் துவப்புறல்போற்
பிற்சார்யுகத்திற் றன்பூசை பிறக்கவேண்டும் பெருங்கடமை
யிற்சார்ந்தனன்கொன் மன்னிலிங்க விறைவனுணருஞ் சத்தியமே. ()

சாதத்வமெம் மன்னைதபோ தகசுந்தரிநீர் மிசைபுரியும்
வரமிக்கமையப் பெறும்பிரம வாவிதன்னின் மார்க்கண்டன்
றாமிக்கிசைய நீராடித் தன்னித்தியமெய்க் கடன்முடித்துச்
சுரவற்புதவே தத்தின்முடி தோய்மன்னீசற் றொழப்புக்கான். (௪)

தானேமுளைத்த சுயம்புவாந் தகைமன்னிலிங்க வாதனருள்
வானேயெனநின் றமையுருவை மருவுங்கண்ணால் வாங்கினனுண்
பானேயென்ன வென்புருகும் பத்தியமைந்து பரவசனாய்
நானேகாணப் பெற்றனனென் னம்பன்றனையென் றகமுருகி. (௫)

மாயவடிவப் பிறப்பினுக்கா மருந்தேபரமா னந்தநலந்
தோயவருளா லென்கண்முனந் தோன்றும்விருந்தே யென்னன்னை
யாயவருந்த வச்செல்விக் கன்பாவின்பா வெனையாண்ட
தூயமன்னீச் சுரவென்னத் தொழுதானழுதான் றுதித்திட்டான். (௬)

ஆர்த்தரங்க நிரைபொலியு மணியார்பிரம தடத்தருகாய்த்
தீர்த்தமகழ்ந்திட் டபிடேகஞ் சிறக்கப்புரிந்தர்ச் சனைபூசை
யார்த்திபெறச்செய் தன்பதனா லாடிப்பாடி வலம்புரிந்து
சீர்த்திபெருக மாதவங்கள் செய்துபன்னா ளமைந்திருந்தான். (௭)

மனமும்வாக்குங் காயமுந்தன் மயமாம்பணிக்கே யர்ப்பித்துத்
தினமுங்கனிவிற் றவம்புரியுஞ் சீலமார்க்கண் டேயன்மிசை
வனமுங்கலையுஞ் சடையிலணி வன்னியிலிங்கப் பெருமானார்
கனமுந்தியதம் பெருஞ்சேவை காட்டக்கருத்திற் கனிவமைந்தார். ()

பனிவெற்பரையன் பயந்தமடப் பாவைபொலியு மிடமுமவிர்
புனிதத்திருநீ றிசைபவளப் பொருப்பையனைய திருவுருவுந்
தனிவெண்பிறைபாம் பறுகுகொன்றை தழைத்தமுகந்தோ யருள்விழியுந்
தொனியற்புதமா மறைமுடிநேர் துணைத்தாட்டுணையுந் துலங்கிடவே.

தருமவடிவா கியவிடபந் தன்மேல்விழிமுன் சார்ந்திடலும்
பெருமைத்தவஞ்சான் மார்க்கண்டன் பெற்றநிலைநாம் பேசுவதே
யுருகிக்கரைய வுள்ளமெலா மூற்றாய்விழிநீ ருடனனைத்துப்
பெருகித்தரைபாய்ந் திடத்துதிவாய் பேசக்காங்கூப் பினனின்றான். ()

தண்டமெனமுன் வீழ்ந்தெழுந்தான் சயசங்கரதற் பரனீல
கண்டபோற்றி யெனையருளாற் காத்தாய்போற்றி யென்பூசை
கொண்டவன்னீச் சுரஞானக் குழகாபோற்றி யிளமதிநேர்
துண்டவணியார் தபோதகசுந் தரத்தாய்துணைவா போற்றியே. (௧௧)

பதினாறுண்டெற் களித்தென்றும் பதினாறுகப் புரிந்தியமன்
விதியீறுக வுதைத்தருளும் விமலகமலப் பதஞ்சிரத்திற்
பதிவாகிடச்செய் தெனக்கின்பப் பதிவாழ்வருளும் பரம்பரனே
மதிதீர்சிறியே னுனக்கெதுகை மாறுபுரிய வல்லேனே. (௧௨)

பைப்பாம்பணியும் புலியானை பஞ்சானனத்தின் றோலுரிய
மெய்ப்பாலணிந்தாய் விண்ணோர்கள் வெருவப்படர்ந்த காளவிடந்
துய்ப்பாய்க்கென்னை யாண்டருளச் சொந்தமுளதென் றோகருணை
வைப்பாய்வைப்பா யுனக்கடியார் மற்றிங்கெனையற் றிலரேயோ. (௧௩)

என்னத்துதிக்கு மார்க்கண்டற் கிரங்கிவன்னி யிலிங்கேச
ருன்னற்புதபூ சனைப்பெருக்கை யொப்பின்மெய்ம்மா தவச்சிறப்பை
யுன்னவுன்ன வெமதுளத்தி லூற்றுப்பொங்கும் பேரருட்சீர்
மன்னத்தகுநின் கனிவாயால் வரங்கேளெனத்தம் வாய்மலர்ந்தார். ( )

காமதேனு வளித்தவிளங் கன்றுக்குளதோர் குறைநினது
நாமதேயம் புகன்றனடி நாடிக்கனிவிற் பூசிக்குஞ்
சேமநீண்மா தவர்க்கரிதிச் செகம்விண்பாத லத்துளதோ
ஆமதேனும் நின்பதப்பே ரன்பின்னமுந்தேங் கிடவருளே. (௧௫)

இந்தத்தலத்தி லுனைப்பூசை யியற்றுமனைவோர் களுமெனைப்போ
லெந்தப்பேறு களும்பொருந்தி யிணையின்முத்தி பெறவருள்க
மந்தக்குணத்தோ ரெனினுமுனை வணங்கிப்போற்றில் வாஞ்சைமுற்றத்
தந்தற்புதஞா னந்தத் தனிக்காட்சியுமீந் தருள்வாயே. (௧௬)

பிரமன்பொருட்டால் வன்னிலிங்கப் பெயரும்வியாசன் றன்
பொருட்டாற், றாமன்னியவா னிலிங்கமெனத் தழைத்தபெயரும்
பொருந்துதல்போல், வாமன்னியவென் பொருட்டினுயர் வள்ளியி
லிங்கப் பெயரமைந்து, திரமன்னியவூர் கோயில்கொண்டு சிறப்பா
யெனச் சேவடிதொழுதான். (௧௭)

மார்க்கண்டன்கேட் டிடுபலவாம் வரமும்வழங்கி வல்விடஞ்சார்
கார்க்கண்டமுளான் றிகழிலிங்கக் கண்ணோமறையக் கண்டமைந்த
நீர்க்கண்டாரை பெறத்தொழுது நீங்காவிடைபெற் றனனகன்றுன்
பார்க்கண்டழைத்த தவன்வாக்கிற் படர்ந்துவள்ளிக் கிழங்கம்மா. ( )

வன்னிலிங்க மென்றும்பின் வானியிலிங்க மென்றுமதன்
பின்னிலிங்கன் பிசைவள்ளிப் பெயர்தோய்ந்துகமூன் றினுங்காண
மன்னிலிங்கப் பெருமான்பின் மருவுங்கலியி லன்பர்தொழ
மன்னிலிங்கப் பெயரமையு மகிமைவரலா றினியிசைப்பாம். (கக)

மார்க்கண்டேயர் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆக கவி உ0உ.

---

## ஆறுவது
## மூர்த்திமகிமைப்படலம்.

---

பொன்னிறையகன் போற்றிய நாயகன் புதுநீர்ச்
சென்னிநாயகன் றிருமலியிமயநற் சிமயக்
கன்னிநாயக னன்னியூர்க்காவல்செய் கருணை
மன்னிநாயகன் மகிமையிற்சிலசொல்வேன் மாதோ. (க)

நீறணிந்தமே னிகொள்பானருள்கொடு நிலவும்
வீறமைந்தசே வூர்த்திருவாலயம் விருப்பால்
ஊறகன்றிடத் திருப்பணிபுரிந்ததி யுவப்பாய்க்
கூறரும்புகழ்ச் சேரனுஞ்சோழனுங் குளிர்ந்தார். (உ)

அந்தவாறறுங் காலருங்கொங்குநாட் டணியாய்
வந்தவள்ளிமா வனமெனுங்கானிடை வதியுஞ்
சொந்தமார்வன சான்பலபிறவியிற் றெடர்ந்த
செந்தகைத்தவத் துடன்சிறுகுற்றமுஞ் சேர்ந்தோன். (௩)

ஒருபிறப்பினி லொருவன்செய்தவமவ னுடன்பின்
வருபிறப்பொரே ழினும்வருமெனுமொழி வயங்கக்
கருமமிக்கவே டுவக்குலத்துதித்துழன் கௌவான்
பெருகுகாய்கனி கிழங்குதேனுணுநெறி பிடித்தான். (ச)

உயர்குலத்தினுட் பிறக்கினுந்தீவினை யுடையோர்
கயமைமிக்கிழி தசைவெறிப்புனலுணல் கடுப்ப
மயல்கொள்வேடனு மவனுயர்ந்தோர்நெறி வகித்த
செயலறிந்திடிற் றிருவருட்டிறநன்கு திகழும். (ரு)

கொண்கன்றன்கருத் தினுக்கிசைந்தொழுகுநற் குணஞ்சால்
பெண்கள்வாய்ந்திடிற் றவங்கெடாதெனுநிசம் பிறங்க
வண்கவின்றவன் னவன்றனக்கில்லென வாய்த்தாள்
கண்களோரிரண் டொன்றைநோக்குதல்புரை கருத்தாள். (சா)

அன்னியென்றிடு பெயர்கொடுதிகழ்தரு மவன்றான்
பன்னிதன்னுடன் பலமலைவனந்தொறும் படர்ந்து
துன்னிரும்பசிக் கேற்றநல்லுணவுக டுருவி
நன்னினைப்புட னயின்றுபோக்கினனெடு நாளே. (எ)

அந்தவாறுசெல் காலொர்நாளவ்வனத் தருகாய்
வந்தவானிமா நதிக்கரைதனிலக மகிழ்வாற்
செந்தகைக்கிழங் கமைந்தவள்ளிக்கொடி தெரிந்தே
சிந்தமண்ணகழ்ந் தருஞ்சினைகளைந்தனன் சிலைஞன். (அ)

சூழ்ந்தபல்கலைத் துறைகளின்பொருளெலாந் தொடங்கி
வீழ்ந்தசிந்தையி லாய்ந்தறிந்தவற்றினுள் விளைவை
யாழ்ந்தடைந்திடு ஞானிகள்செயலென வஞ்ஞோன்
போழ்ந்தமண்ணிடைக் கிழங்குகண்டுளங்களி பூத்தான். (கூ)

மிகப்பருத்துநீண் டுருசியார்கிழங்கினை வேடன்
உகப்பிஞன்மனை யோடுதான்கொள்பசி யொழிப்பான்
றகக்கைசேர்படை யாற்சிறிதரிந்துதன் குடில்சார்ந்
தகக்களிப்புடன் புசித்திடலாயின னன்றே. (க0)

அன்றுதொட்டுனை வினுக்கெனப்பலவிட மலையான்
சென்றுநீர்முழுக் காடுவோர்க்குயர்பயன் சேர்க்குந்
தென்றுலங்கிய வானியாற்றருகினிற் செழிப்பா
னன்றுறுங்கிழங் கினிற்சிறிதெடுத்தன ளாளும். (கக)

வருடமொன்றுமுற் றுறும்வரைபன்னிரு மதியும்
பொருவில்பன்னியுந் தானுமக்கிழங்கினைப் புசித்திட்
டுருகுசிந்தையொ டருந்தவநெறிபிடித் துற்றார்
மருள்செய்காமனைங் கணைதொடாநிலை மருவி. (கஉ)

அவளினத்தராம் புளினர்களிவ்வித மறிந்திட்
டிவனென்னேழுய லேனமானுடும்புபுள் ளினத்தை
யவமுறச்சிலை கணைகொடுவதைத்துண ளுகிச்
சிவநிலைத்தவ ரெனத்திகழ்ந்தனனென்று சென்றார். (க௩)

உலகினுள்ளசா தாரணக்கிழங்கெனி னுரிய
சிலதினத்தினிற் றீர்ந்திடும்பெருமறைத் திருநா
லலகிலாநெறிக் காதரப்பிரணவ மாகி
யிலகருட்சிவத் துறுகிழங்காலொழிந் திலதே. (க௪)

வனஞ்செறிந்ததால் வள்ளிநற்கொடிதொடும் வாஞ்சை
மனஞ்செறிந்ததால் வேட்டுவத்தேகம்வாய்த் திடலான்
முனஞ்செறிந்தவே னற்புனத்துறுவள்ளி முகுளத்
தனஞ்செறிந்தவேற் குகனுறழ்ந்தானிவன் றனே. (க௫)

மூன்றுநூறுட னறுபத்தைந்துநாண் முடிந்து
தோன்றுமற்றோராண் டுதிக்குநாள்வேடனுந் தோகை
போன்றுபின்வரு கொடிச்சியுமவ்வயின் பொருந்தி
யூன்றுகைப்படை கொடுகிழங்ககழ்ந்திட லுற்றார். (க௬)

### வேறு.

ஆதிநாணானன்றன் கோலமெனுங்கோலமெய்தி யகழ்ந்துங் காணச், சோதிவானவனருளா லன்னியென்பான் கருவிகொண்டு தொடுமவ்வேல்லை, தீதிலாக்கிழங்ககன்று வட்டவடிவாயினிது திக ழக்கண்டு, மாதின்மாமுகநோக்கி யென்னவியப்பிதுபாராய் மயிலே யென்றான். (கள)

உடனவள்கண்டிதுவியப்பே யென்றுரைத்தாள்வேடனகழ் வுற்
றானங்குத், திடமனத்தன்னவனோச்சுங் கருவிகிழங்கினிற்படலுஞ்
செந்நீர் பொங்கிப், படர்வதுகண்டுளநடுங்கிக் கிழங்கினிடையிவ்
விரத்தம் பரவலென்னென், றிடர்தவிர்வாழ்க்கைத்துணையா மவளு
டன்சொற்றையமிக வியைந்தான் மன்னோ. (௧௮)

அந்தவிரத்தப்பெருக்கைத் தம்பதிகளிருவருநன் கணுகிநோக்கி
நந்தவில்கண்ணொளிமழுங்கி மனமயங்கிப்பலவசன நவின்றுகூவச்
சந்ததமாடாடுமேய்த் திடுவான்வந்தவ்வனத்திற் சார்வோர்களா
விந்தநெடுங்குரலெழுங்கா ரணம்யாதென் றயிர்த்தவண்வந் திட்டார்மாதோ.

மறையாதிநாலுணர்மீ மாஞ்சருடன்வாமிகளு மற்றும்வாசத்
தறைமீதுமருத்துவநா லினர்சிலரும்வேறுசிலர் தாமுஞ்சீவர்
குறைநாடாதுடல்வகைசே தித்திடலாயினர்வேடன் குருதிகண்டே
நிறைசோகமடைந்தனனென் றால்வினையினளவறிந்து நிகழ்த்தொண்ணாதே.

கொலையினொடுபுலையுமிலாக் குணங்கொளுமவ்வனசான்றான் குலத்
தின்சான்றாய்ச், சிலையினொடுகணைபுயத்திற் றாங்கியதாலிலிங்கமிசை
செந்நீர்பொங்கு, நிலையதுகண்டுளம்வெருவுஞ் செயலாற்பொன்முகலி
யின்சார் நிகழ்காளத்தி, மலையிலரனருள்பெறுகண் ணப்பனுக்கோர்
துணைவனென வழுத்தலாமே. (௨௧)

வந்தவர்தாமங்குளவா றறிந்தவனைவினவுதலும் வாய்ந்தவெல்லாஞ்
சொந்தமுறவினிதினெடுத் திசைத்திடலாலவர்பயமுட் டுதைந்தாராகி
முந்தவிரைந்தேகுபுதம் முதியோர்பாலிவைமுழுது மொழியவன்னோர்
சிந்தனையிற்களிப்புடனச் சஞ்செறியக்குழுமிவந்து தெரிந்தாருண்மை.

அன்னியென்பான்றன்செயலு மருந்தவத்தின்பயனாகி யவற்கு
வாய்த்த, பன்னியென்பாளுறுநிலையும் பார்த்தறிந்தோர்மிகவுமனம்
பதைத்தோராகி, நன்னிமித்தமாமிதனைச் சேவூரிற்றிருப்பணிசெய்
நமதுசோன், சென்னியெனுமன்னர்திருச் செவிகொள்ளத்தெரித்து
மெனச் செப்பிச்சென்றே. (௨௩)

செம்பியநற்பதியிலமர்ந் தரசுரிமைமுறையினிது செலுத்துஞ்சோன்
கம்பிதமெய்தாமனத்தோ னம்பிகைபாகனைநெடிது கருதிநாளுங்
கும்பிடுநன்னியமமுளான் சமுகமடைந்தியன்றவெலாங் கூறித்தாழ்ந்தார்
நம்பியசிந்தையனாகு மவனியற்றுந்திறஞ்சிறிதே நவில்வாமன்றே.(௨௪)

வேறு.

நகரவாசிகள்வந் துரைத்திடுமொழிக ணன்குகாதுறக்கொளுஞ் சேரன்
அகமதின்மகிழ்வு மச்சமும்வியப்பு மையமுமடைந்துமெய் யறிவான்
மிகமனக்கலப்பார் சோழனுங்காஞ்சி விளங்குசெங்குந்தரிற் சேயா
யிகமதிலுதித்த சமயனென்பானு மெழிற்சடையப்பனுஞ் சூழ. (௨௫)

அவ்வவர்தகுதிக் கேற்றவாகனங்க ளவையிவர்ந்தனந்தவே வலர்கள், செவ்வனப்புறுபல் பொருள்வகையெடுத்துச் செறிந்திடச்சென்றன னிணையொன், றெவ்வவில்வளச்செம் பியப்பதிநீங்கி யுரியவாணித்திரு நதிப்பா, லெவ்வமில்கிழங்கு வடிவெனமன்னி யீசன்வாழ்வள்ளிமா வனத்தில். (௨௬)

அன்னியென்றிடும்பேர் வேடனுமனைய மன்புமேலிட்டசிந் தையினுன்
முன்னிருந்தாங்கே முகக்கண்கடுலங்க முக்கணனருளினுற் பெற்று
வன்னியிற்றகிக்கும் பசிமுதற்றுயர்கண் மாறியங்கமைந்தனர் மன்னன்
றன்னதுபரிவிட் டிறங்கியங்கணுகிச் சார்திருத்தடப்புனன் மூழ்கி.

நீறுகண்டிகையா தியதரித்தன்பு நிறைந்தசிந்தையினெளிர் சோழன்
மாறுதீர்சமய னுதியரொடுபோய் வனசரன்கொடிச்சிவாய் மொழிகேட்
டூறுபட்டிடலில் வள்ளியின்கிழங்காங் கிசைகுழிதனைக்கண்ணுேக்கி
ஊறுபட்டுதிரஞ் சொரிவதுகிழங்கன் றுயரருளிலிங்கமென் றுணர்ந்தான்.

முழங்குமாமறைக ளனந்தமுங்காணு முடிவினிலுளபொருண் முன்னோர், வழங்குபல்சமய வரம்பினுமமையா வான்பொருள்வானியாற் றருகிற், பழங்கணுற்றடங்காப் பசிதவிர்த்திடக்கைப் படையினுற்பறித்தவே டனுணக், கிழங்கதாய்ப்பெருகி வருடமொன்றயிலக் கிளர்ந்தநின்பெருமையென் னேயோ. (௨௯)

கன்றதைப்பிணிக்குந் தறியிற்பால்பெய்யுங் காரிகைமேற்றவன் சினந்து, நின்றவத்தறியைப் படைகொடன்றேச்சு நிமிடமத்தறியிலிங் கமதாய்க், கன்றல்செய்திரத்தம் பெருக்குகன்றுப்பூர் கவின்கழை வேரிலவ் வாறே, நன்றருள்விளக்கு நெல்லையாதியவா நற்றலப் பெருமைகேட்டுள்ளேன். (௩௦)

இந்தநாள்வள்ளிச் சினையின்கீழ்வேட னெறிபடைச்சுவடுகொண் டிரத்தனுஞ், சிந்தலிலவன்மே னீகொளுங்கருணை தெரிந்தனனுலகிலென் போல்வார், வந்தனைப்பணிகள் புரிந்துநற்போகம் வண்மைசேர்முத் தியோ டெய்த, வந்ததோரிலிங்க வடிவுடன்விளங்கி வள்ளனீதயை செயென் றிசைத்து. (௩க)

பன்முறையங்க மெட்டுடனைந்து படியுறப்பணிந்துபோற் றிசைத் துக், கொன்முறையொழிந்து குலவுமவ்வேடன் குலமனையுடன்சுகித் திருப்ப, நன்முறைவசதி பலபுரிந்தப்பான் ஞாலமுள்ளளவுமிவ் விலிங் கஞ், சொன்முறைமறையா கமவழிப்பூசை தொண்டாற்கொளல் செய்வே னென்ருன். (௩உ)

தனதுசொல்லேவ லாளர்நூற்றுவரைத் தகவழைத்திப்பெரு வனத்தி, லனகமாரிந்த விலிங்கத்தையெடுத்தே யயலிடத்தினிலமைத் திங்கே, சினகாமியற்றி யாகமவிதியாற் செய்குவன்பதிட்டையென் றுரைக்கக், கனபலத்தவர்தா மிறைமொழிவழிதங் கைப்படுகருவி கொண் டகழ்ந்தார். (௩௩)

எவ்விதமகழ்ந்து மிலிங்கமாடியதின் றெழுந்ததுபிலமுகத் திரு நீர், வவ்வியபீட மூன்றவிர்ந்ததனை மன்னவன்சமயனு லுணர்ந்து, நன்னர்நோக்கிடுகான் மூன்றினுமொவ்வோர் நல்விவரம்பொறித் திருந்த, செவ்விகண்டறிந்தான் முதற்கிரேதத்திற் றிகழயன்பூசித்தா னிதன்பேர். (௩ச)

வன்னிலிங்கமதா மிவ்வனத்தருகார் வளநகர்ப்பேர்வன்னி யூராம், பின்னிகழ்திரேதத் தினில்வியாதன்ருன் பிரியமார்பூசைசெய் திட்டா, னன்னிலைத்திருப்பேர் வானிலிங்கமதா நகர்ப்பெயர்வானியூ ராகும், பன்னிடுந்துவாப ரத்தின்மார்க்கண்டன் பண்ணினன் பூசை தான் பலநாள். (௩ரு)

இந்தநல்லிலிங்கத் தினுக்கந்நாள்வள்ளி யிலிங்கமென்பதுதிரு நாமம், பந்தமார்பதியும் வள்ளியூரென்னப் பகர்பெயர்கொடுநிகழ்ந் ததென்றே, வந்தசோழனுமற் றையருமவ்விதங்கள் மனத்துணர்ந் தளவற மகிழ்ந்தும், அந்தமாதலம்விட் டசைகிலாமையினு லகங்காச் செயல்செயற் கமைந்தார். (௩சா)

ஏழுறுப்புகள்கீழ்ப் படிமதகளிற்றி னெறாழ்மலிபுழைக்காத் தெழிற்றோர், வாழூறவிழுக்கும் வடத்தினைக்கொடுத்து மகிமைசேரி லிங்கத்தின் மாட்டி, யாழும்வேர்பறிய வீரக்குமாறதன்மீ தமைந்த பாகரைக்கொடு புடைத்துத், தாழுறுமுயற்சி புரிந்தனனிலிங்கஞ் சலன மோர்சிறிதுமுற் றின்றே. (ஙஎ)

ஞானிகளுளத்தி லமைசுழிமுனையாய் நவில்பலண்டங்களு மவற்றின்
மேனிகொண்டிலங்கி யழிபலபொருளும் விளங்குதற்காதா மாகு
மானியின்மகிமைப் பிரணவசொருப மாகியேயன்னிசெய் தவத்தால்
வானியாற்றருகே வயங்குமவ்விலிங்க மதகரிக்கசைவதெவ் வாறே. ()

இலிங்கமார்குழியி லிருந்தொருசோதி யிரவியாயிரமென வெழுந்து
புலிங்கமார்கனல்வீ சுபுமதயானை புரவலன்பரிசனர் புலர்ந்து
நலிந்தயவிரிய வெதுப்பலினயர்ந்தார் நாடுநற்சமயன்மாமனத்தின்
மலிந்தபோன்பா லெதிர்பணிந்திறைஞ்ச மாறியங்கொடுங்கிய தம்மா.

யாவருமயங்கி விழவெழுஞ்சோதி யெதிர்வரக்கண்டுமுள் வெருவா
தாவலிற்பணிந்தஃ தடங்கிடுமாறு மருஞ்செயல்சமயன்செய் யருமை
காவலனறிந்து பலபரிசளித்துக் கச்சிவீரப்பெரு மாட்பே
ரீவதாயினன்பின் சிவனுறைகோயி லினிதுசோன்செய நினைத்தான்.

ஆவினன்குடியி லயிற்குகப்பெருமாற் காலயம்புரிந்துவண் மதுரை
மேவியபரமன் றருமுறிப்பாடன் மிலைந்துநல்லிசைமிகு பாணற்
கோவிலாப்பிரியத் தளவில்பொற்குவிய லுதவியுஞ்சுந்தர னுடனே
வாவியற்பரியூர்ந் தாள்கிரிசென்றோன் வழிவருசுதனெனுஞ் சோன். ()

அருள்கொள்சேவூர்முன் னும்பலதலத்தி லருஞ்சிவதளிகணன் காற்றி, யிருள்படாப்புகழ்கொண் டிலங்குநாள்வள்ளி யெழில்வனத் தமைந்தமா லிலிங்கப், பெருமை கண்டிதற்கு மாலயம்வகுக்கும் பிரிய முற்றிடுமவன் பிறைசேர், திருமுடிப்பரம சிவனருளதனாற் செனித் தவனெனுமொழி திரமே. (சஉ)

கத்தூரிரங்கப் பன்சடையப்பன் கச்சியூர்ச்சமயனே முதலோர்
நத்தூதியத்தொண் டருமையாயங்கு நடத்துதற்கிசைந்துட னயந்தா
ரெத்தூரவூர்க்குந் தெரித்தலிற்சிறப்ப ரெற்றுநாற்காரர்கல் லொட்டர்
சத்தாகமுணர்த்து நூலுடன்கருவி தமதுகைக்கொண்டவண் சார்ந்தார். ()

சார்ந்தவர்தமைப்பார்த் தருட்குணச்சேரன் றக்கநுங்கைத் தொழில் சிறக்க, நேர்ந்தவித்தலத்திற் கோயிலொன்றமைக்க நினைத் தனன்முடித்திரென் றுரைத்துக், கூர்ந்தவுள்ளுவப்போ டரும்பொருள் வாரிக் கொடுத்தவணிருந்தா சாட்சி, யார்ந்தனன்பரமன் றிருவுளச் செயலை யளவிடத்தக்கவ ராரே. (சச)

வள்ளிமாவனத்தில் வனசரன்கொடிச்சி வந்ததுங்கிழங்குகெல் லியதும் நள்ளியகிழங்கோ ராண்டளவுணவாய் நாடொறுமரியநீண் டதும்பின் றெள்ளியவுதிரஞ் சாய்ந்ததுஞ்சேரன் றெரிந்தவணணைந்தும் புகன்றும் ஒள்ளியதிருவா லயப்பணியவனுங் குளுற்றுசீருரைக்குது முவந்தே. ()

மூர்த்திமகிமைப்படலம் முற்றிற்று.

ஆக கவி உசஎ.

ஏ ழா வ து

# சேரன்பணிசெய்படலம்.

சென்னியூர் பிறையுடையான் விடைமீதூர்வான்
சிமயவினத் திறைதவத்தின் சிறப்பாற்றோன் றுங்
கன்னியூர் வாமமுளான்வேடவேடங்
காட்டிவிச யற்கருளுங் கருணையாளன்
அன்னியூ ரினுக்கணித்தா யமைந்தவள்ளி
யாரணியத் தன்னியெனு மரியநாம
மன்னியூர் வனமுதலெவ் வுயிருங்கொல்லா
வனசரன்கெல் லியகிழங்கில் வயங்கன்மாண்பே. (க)

கல்லமைந்த மலைகளிற்ப லேவலாளர்
கடிதுபோய் வேண்டியவா கணக்கிற்பேர்த்து
நல்லவா றருஞ்சகடத் தேற்றிச்சேர்த்து
நாகரிகம் படவுளிக ளுட்டிக்கூட்டி
வல்லதா ளுத்தரம்போ திகைநற்கோளு
வட்டமுங்கோ முகைபட்டி வரிக்கல்லோடு
சொல்லவரு மெழுதகமே பதுமம்யாளப்
துலங்குகால் மாடமொடு தோய்கபோதம். (உ)

பான்வளர்கர்ப் பக்கிரக வாசன்முன்பு
பயிலருத்த மண்டபத்திற் பதியும் வாசல்
விரவுமகா மண்டபமே யாதியாக
விளங்குபல வாசல்கட்காம் விசேடக்கற்கால்
காவறமு டிடும்பாவு கற்களன்பர்
காலின்மிதித் துயர்நிலைசேர் கவின்சோபானத்
தாமுடன்யா ளித்துதிக்கை வடிவாய்ப்பக்கஞ்
சார்தருநற் சிலையினைத்துஞ் சமைத்தாரன்றே. (௩)

வேடனகழ் படையாலுந் தனதுசொல்லால்
விளங்குபரி சனர்கருவி விதத்தினாலுங்
காடதனிற் பறித்தமண்ணின் குவியல்யாவும்
கனத்தபெருங் குழிநிறையக் கடிதுதூர்ப்பித்
தேடவிழ்தார்ச் சோர்பிரான் சிவபிரான்ற
னெழிற்றிருவா லயம்வகுக்க வினியநாளின்
மாடமைமே லோர்மொழிபெற் றரிதாஞ்சிற்ப
மறைவிதியி லகழ்தலுற்றான் வானமம்மா. (௪)

சுண்ணமலை மணன்மலைசெங் கல்லின்குன்றஞ்
சொல்லரிய வாறமைத்துத் துலங்குந்தூநீர்
நண்ணமுகார் தடமமைத்து நான்குபாலு
நனிநெருங்கு செடிமரங்கள் நலியுமாறு
திண்ணமுறு கோடரிகூர்ங் கொடுவாள்கொண்டு
சேதித்து வேரகழ்ந்து செப்பஞ்செய்தார்
கண்ணகலவ் வனத்தினிடை காவலாகிக்
கவினிருபெண் டேவதைகள் கனன்றுசீறி. (௫)

எம்மதுகா வலிலிருக்கும் வனத்தினீவி
ரெளிதுபுத் ரினமரங்கள் யாவுநன்கு
சம்மதமெம் மிடம்வினவிக் கொளாமல்வெட்டிச்
சாய்த்துநே ரக்கிடுத றகாதுகண்டீர்
நும்மதுளம் வருந்தவிடர் விளைப்போநீங்க
ணேன்மையுற வேண்டிலெம்முள் நடக்கந்தீரச்
செம்மலர்ப்பூ சையுமுணவு மமைப்பீரென்று
செப்புதலுஞ் சமயனது செய்வேன்பின்னர். (௬)

இப்போதா லயப்பணிநன் கியலுமாறுள்
ளிசைந்துதுணை புரிவீரென் றிரந்தான்பெற்றுக்
கைப்போது குவித்தனுப்பச் சுண்ணச்சாந்துங்
கல்லுமுறை செறித்தகழ்ந ணிறைத்துமேடை
யெப்போதுஞ் சிதையாவா றளவுசெய்தே
யெழில்வாச னிலைகொள்சுவர் இனிதுகாட்டி
யப்போதக் கடலுலகோர் வியக்குமாறே
அரியதிருத் தொண்டியற்ற லானான்சேரன். (எ)

யானைமுகப் பெருமாற்குங் குமரவேட்கு
மிசைபெறுமன் னீச்சுரற்கு மிமயச்செல்வ
மானைநிக ருமையாட்குஞ் சண்டேசற்கு
மற்றுமுள்ள பரிவார வகைத்தேவர்க்கும்
வானையள வியசிகாக் கனகத்தூபி
வயங்குதிருத் தளிகண்மிகு மாண்பாச்செய்து
சோனைமுகி லுறங்குதிரு மதில்கண்முன்பு
துலங்குதிருக் கோபுரங்க டொகுத்திட்டானே. (அ)

விடைக்கொடியேற் றிடுங்கம்பம் பலிபீடஞ்சீர்
மிக்கநந்தி தேவருறு மேடைமேலா
மடைப்பள்ளி யுடன்யாக சாலையீசன்
மகிமையுலாக் கொள்ளுமுரு வயங்கவாக்கி
யடைக்கலமாப் பணிபுரிவோர் வந்துபோற்று
மன்பர்பலர் வசிப்பதற்கா மரியசாலை
தடைப்படவில் லாதியற்றி யறிஞராகுஞ்
சற்சனர்பல் லோரையவண் சாரச்செய்தான். (கூ)

இரவிசெலுங் குடதிசைநோக் குறமன்னீச
னிலங்குபெருங் கோயின்முடித் தெழிலார்வீதி
விரவுபல மாளிகைக ளனந்தமாற்றி
வேதியரா தியர்குலத்தில் விளைந்தநல்ல
தாமனிதர் குடிபுகச்செய் திடுநாள்காஞ்சித்
தடநகரின் புடையிருந்து சார்ந்ததாத்தன்
வரவுதெரித் துமைவடிவச் சிலைசோன்கண்
மகிழவருட் செயலான்முன் வயங்கிற்றம்மா. (க0)

வந்ததிரு வருட்செயலை நினைந்துசிந்தை
மதிக்கரும்பே ரின்பமுடன் வயக்குங்கோயிற்
சொந்தமுறப் பிரதிட்டை புரிந்துமற்றுஞ்
சூழ்பலமூர்த் திகள்சமைத்துத் தோய்வித்தன்பாய்க்
கந்தமலர்க் குழலுமையாள் வலிதேவந்த
கருணைநம்மா லன்றெயினன் களிக்குமில்லாய்
நந்தலில்கற் பமைந்தகொடிச் சியின்றவத்தை
நாடியதா லென்றுவகை நண்ணிமன்னன். (கக)

வன்னிமய மாய்ப்பறந்து வந்தசோதி
வளரிலிங்க மாய்க்குழிப்பால் மன்னிநின்ற
நன்னிமித்தத் தாலிறைவன் மன்னீசப்பேர்
நயக்கவுமைக் கருந்தவச்செல் வியெனுநாமம்
பன்னியுல கிறைஞ்சுகவிப் பதியன்னிப்பேர்
படைத்தவன்முன் னிலையில்வந்த பான்மையாலே
யன்னியூ ரெனப்பலரு நவின்றுபோற்ற
அரனருளால் விளங்குகவென் றுறைத்திட்டானே. (கஉ)

வேறு.

செய்தநற் பணிகள்யாவுஞ் சீருற நிறைந்தபின்னர்
மெய்தழை யுளத்துச்சோன் வேதவா கமநூலாய்ந்து
பொய்தவி ரறிவுவாய்ந்த பூசுரர்பலரைக்கூட்டி
யுய்தமொ டினியகும்பா பிடேகமாங்குளுற்றல்சொல்வாம். (கரு)

சிவபிரான் சிவைவினவச் செப்புகா மிகமுன்னுருந்
தவலரு மாகமங்கள் சாற்றிய நெறியினுலே
யுவமைதீர் யாகசாலை யுரியவா றகலநீள
நவமுற வகுத்துக்குண்ட மண்டல நவிற்றலானுன் (கச)

வேதிகை சமைத்துநான்கு வியன்றிசை வாசல்காட்டி
நீதிசே ரரசுவன்னி நிறைபுர சறுகாலத்தி
யாதியாஞ் சமித்தின்கூட்ட மரியமா விலைதருப்பை
கோதிலாச் சிருக்கினேடு குலவுநற் சிருவஞ்சேர்த்தான். (கரு)

ஆவினெய் நிறைகுடங்க ளரியநெற் பொரிபொற்சுண்ணம்
ஓவில்கும் பங்கள்வைத்தற் குரியபல் கலங்கள்சேர்த்துக்
காவிவெண் சுதைகளாலே கவின்கொள்கோ லங்கள்காட்டி
யோவியத் தனந்தந்தேவ ருருவங்கள் பொறித்தானன்றே. (கசு)

தோரண நிலைக்கண்ணாடி துலங்குசா மரைநற்றீபம்
நாரதிற் பிணைத்தபல்பூ நறுந்தொடை கனிவர்க்கங்கள்
பூரண பலமாந்தேங்காய் புரையில்சந் தனமடைக்காய்
சீரவி ரரிசனந்தேன் சீரமுற்பலவுஞ் சேர்த்தான். (கஎ)

விக்கின ராசன்பூசை மிருத்திகை கவர்ந்துமீள
லக்கிர முளைதெளித்த லநுமதி பெறுதலாதி
முக்கியக் கிரியையாவு முன்னிடு சுபநாள்கோலி
மிக்கிய லாதிசைவ விப்பிரர் தொடர்ந்தார்மாதோ. (கஅ)

தக்கவீ சானத்தோடு தற்புரு டமுமகோர
மிக்கவா மதேவஞ்சத்தி யோசாத வியன்முகங்க
டொக்கவைம் பிரமமாகத் துலங்குமைங் குறிதுலக்கி
முக்கணற் குரியகும்ப முறைப்படி நூல்கள்சுற்றி. (கசு)

மந்திரப் புனனிரப்பி வாசமார் பொருள்கடூவி
முந்திய சுவணம்வெள்ளி முத்திரத் தினங்கள்சேர்த்துக்
கொந்தின்மா விலைமேற்றேங்காய் குசைமுடி சாத்திவாசச்
சந்திலக் கதைபூந்தாமந் தகைகொளாடையுந்தரித்து. (உ0)

மத்திவே திகையிற்சாலி வயங்குதண் டுலமுமீதே
நத்திய நவக்கோள்சாரா நலஞ்செய்தா னியமுமாக்கி
நித்தியப் பாமன்வாழு நிலைபெறு கும்பந்தன்னை
மெத்தியற் பீடமீதே விருப்புடன் றுபித்தாரால். (உக)

அருந்தவச் செல்வியாகு மம்மையின் கும்பந்தானும்
பொருந்துவிக் கினேசன்கும்பம் பொருவில்வேற் குமரன்கும்பம்
இருந்தபன் மூர்த்திகட்கு மிசைந்தகும் பங்கள்பாங்காய்
விருந்தலி லுளநேர்பீடம் வதியவைத் திட்டானன்றே. (உஉ)

முரசமுங் குழலும்யாழு முழங்குகை மணியுஞ்சங்கும்
விரவுபல் லியமுமார்ப்ப விப்பிரர் வேதவோசை
சுரருல களவியார்ப்பத் தூயசெந் தமிழ்த்தேவாரம்
பரவுவா சகமிசைப்பா பல்லாண்டு புராணஞ்சந்தம். (௨௩)

திருமுறை யிசைவழாமற் றெளிபொருள் சிதைவுறாமற்
பெருகுதண் ணுமைநற்றாளம் பெறுசுதி பிசகுறாமல்
வருமுளத் தன்புமீற மகிமைதோய் சைவத்தொண்டர்
குருபர னடித்தொண்டாற்றுங் குறியர்போ னிலைத்துக்கூற. (௨௪)

சாதகக் குரவர்கையிற் றாங்குபுத் தகங்கொண்டங்கே
போதகக் குரவர்சீடர் புந்தியுட் புகச்சொற்றாங்கு
தீதகத் திலாய்வைகுஞ் சிவமலி குரவர்முன்பு
பீதகத் தாசையெண்ணார் பிழையிலா துரைத்தார்நூல்கள். (௨௫)

அருச்சகன் சிவன்சொரூப மாமெனு மதுமெய்யாக
மருச்செறி புதுநீர்மூழ்கி வளர்பஞ்ச கச்சஞ்சாத்திக்
குருச்செய்வெண் ணீறுபூசிக் குளிர்திரி புண்டரங்கள்
உருச்சிறந் திடக்கண்டத்து முற்றதஞ் செவியினூடும். (௨௬)

கரத்தினுஞ் சிரத்தின்மீதுங் கவினுருத் திராக்கமாலை
சிரத்தையொ டணிந்துமுந்நூல் திகழொளி மார்பராகி
விரத்திதோ யுளத்தராகி விளங்குமக் கினிகுண்டத்தில்
வரத்தகை பெருகவோம மந்திராகுதிகள் செய்தார். (௨௭)

ஆதார சத்தியாதி யமைசத்தி புவனமீறாய்
மீதான சிவத்தைப்பூசை விதிமுறை யியற்றிப்பின்னர்
கோதாராக் கும்பந்தன்னிற் குலவுமூ லத்தாற்கூட்டி
யோதாவா கனாதிநான்கா முபசார வகைநடாத்தி. (௨௮)

முத்திரை கொடுத்துநன்கு மொழியுமர்க் கியமுநல்கி
நத்திய தூபதீப நற்கருப் பூரமேற்றித்
துத்திய முரைத்தியாகத் தொழிலெலா முடித்தார்தூய
சத்தியச் சோணாஞேன் றவமெவர் சாற்றற்பாலார். (௨௯)

பூரணு குதியியற்றிப் பொருவில்பூ சனைபுரிந்து
சாரநா மங்களாலே தகுமருச் சனைகள்செய்து
நாரண வியமனத்தா னன்குதோத் திரங்களாற்றிப்
பாரதிக் கெட்டுஞ்சொல்லிப் பலிக்கடன் முடித்தபின்னர். (௩௦)

மறையவர் முனிவர்வேந்தர் வைசியர் சைவர்மற்றோர்
குறையற நீறுநல்கிக் குறித்தநல் லோரைசேரப்
பிறையணி சடைகொண்மன்னிப் பிரானருந் தவத்தின்செல்வி
நிறைமதக் கணேசன்செவ்வே ணிகழ்த்துபஃ றேவர்கட்கும். (௩௧)

அட்டபந் தனங்கள்சாத்தி யவிருநல் லுருக்கள்வாய்ந்த
கட்டமை தளிகளூடு காகநீ ரொடுபூத்தூவி
யிட்டமாம் பெரியோர்யாரு மினிதா வொலிமுழக்க
வட்டவெண் குடைகவிப்ப வாகன பூசையாற்றி. (௩௨)

உத்தமப் பனவர்சென்னி யுறச்சிவ கும்பமாதி
வைத்தகும் பங்கடம்மை மறைமுழக் குடன்கொண்டுய்த்துச்
சித்தநன் குறநியாசத் திறமுடித் தருட்சீர்தோயக்
கைத்தலத் தெடுத்துச்சேரன் காணநன் காட்டினூரே. (௩௩)

அன்னியின் செயலுமந்நா ளவனுக்கு மனையாய்வந்த
கன்னியின் றுணிவுங்கோயில் கட்டுமன் பமைந்தசேரன்
றுன்னிடுந் தவமுஞானச் சுடரிலிங் கமதாய்நின்ற
மன்னியெம் பெருமானுடல் மாண்பலாற் பிறிதின்றம்மா. (௩௪)

கும்பநல் லுதகமாடிக் குலவுமன் னீசன்றன்னைச்
செம்பய னளித்துக்காக்கு மருந்தவச் செல்வித்தாயை
யிம்பரூ ழிறையாஞ்சேர னிருவிழி கொளச்சேவித்து
வம்பவிழ் கடுக்கைபோலும் வளங்கொளத் துதித்தான்மன்னே. (௩௫)

## வேறு.

வானின்ற தேவர்தவ மாமுனிவர் மாமறைக
டானின்று போற்றுதற்குஞ் சாராத் தனிமுதனீ
கானின்ற வேடன் கருவிகொண்டு கெல்லுமன்று
பானின்ற வள்ளிக் கொடியாய்ப் பயின்றுயே. (௩௬)

நீடன் புளவடியர் நெஞ்சுகுடி கொண்டுவிளை
யாடன் புருவா மருட்கருணை யார்மணியே
வேடன் றினமரிந்து வெந்தருந்த வெண்கிழங்காய்
நாடங்கோ ராண்டளவு நன்கு வளர்ந்தனையே. (௩௭)

கன்னித் திருநாடு காத்தசெழி யன்பிரம்பும்
வன்னிக் கிரையளித்தோன் வண்சிலையுந் தாங்குதல்போ
லன்னிப் பெயரெயின னன்றெறியுங் கைப்படையுஞ்
சென்னிப்பா லேற்றுதிரச் செவ்வாறு காட்டினையே. (௩௮)

திண்ணப் பெயர்வேடர் செம்மலென வந்தவனைக்
கண்ணப்ப னாச்செய் கருணைக் கொருதுணையாய்
நண்ணற்பார் வேடனுன்ற னல்வடிவ மாமிலிங்க
வண்ணத்தைக் கண்டு மகிழ்வித்து மன்னினையே. (௩௯)

நாரா யணனகழ்ந்து நாடருமுன் றாளடியே
னோராது பேர்த்தெடுக்க வுன்னிவடத் தாற்பிணித்தே
யோரார் களிற்றினைக்கொண் டீர்த்தபிழை தான்பொறுத்த
சீரார் கருணைத் திறத்தினையென் செப்புவதே. (௪0)

என்னை யொருகருவி யென்றமைத்து நீயருளா
லுன்னையுல குள்ளார்க் குணர்த்துங் கருணையன்றிப்
பொன்னைப் புவியையணிப் பூவையரைப் போற்றியுழன்
முன்னை வினையேன் முழுச்செயலிங் கேதுளதே. (௪௧)

உன்றனருளா முமையாள் சிலைவடிவா
யென்றனெதிர் வந்த விருங்கருணை யென்னேயோ
குன்றமுற்றுங் கொண்ட குமரனொடு குஞ்சரத்தை
நன்றருளி நானிலத்தோர் நாடவைத்த நாயகனே. (௪௨)

தந்தைதா ளைச்சிதைத்தோன் சண்டேச னாகியுற
முந்தைநாள் காத்த முதிர்கருணைப் பெம்மானே
சிந்தையா னாடித் தினம்புவியோர் கண்டுதொழ
வெந்தைநீ யிங்கே யிருந்தருள வேண்டுமே. (௪௩)

அருந்தவச்செல் வித்தா யமரிடத்தாய் போற்றி
பெருந்தவத்தோர் நெஞ்சிற் பிறங்குவோய் போற்றி
வருந்தவிடா தென்னை வழித்தொண்ட னாக்கித்
திருந்தருமைச் சேவடியிற் சேர்த்தருள்வாய் போற்றி. (௪௪)

என்னப் பலகூறி பின்பப் பாவசனா
யுன்னற் கருமுணர்வுற் றொப்பில்புகழ்ச் சேரர்பிரான்
பின்னப் பெருமான் பிராட்டிமுதன் மூர்த்தியெல்லாந்
தன்னற் புரிமைகொடு சார்ந்துபணிந் தேத்தினனே. (௪௫)

மன்னிப் பெருமான் வயங்குதவச் செல்வியுடன்
சென்னிக் களிறுமயிற் சேய்முதற்பஃ றேவர்கட்குந்
தன்னிச்சை கொண்ட தனியபிடே காதிசெய்து
முன்னிப் பயன்கொண் முறையினிது சொல்வேனே. (௪௬)

வேறு.

தயிலத்துடன்மா வாமலகந் தகைசேர்மஞ்சட் பொடியானைந்
தயிலந்தமிர்தம் பாறயிர்தே னருநெய்கரும்பின் சாறுட்டிப்
பயில்பல்கனிகட் பிழியிரசம் பாங்காமிளநீர் நறுஞ்சாந்தம்
வெயில்சேர்பனிபோல் வினைபொடிக்கும் வியனார்திருநீ றாட்டினனால்.

வெண்பட்டாடை முதலாக விளங்குகலைக ளவைசாத்தித்
தண்பட்டுளநற் றிலகமுந்நூல் தகைசேர்மலர்மாலைகள்சாத்தி
யெண்பட்டமையாப் பலவகையா மினியநிவேத னஞ்சமர்ப்பித்
தொண்பட்டுளநற் றீபவகை யொளிர்மந்திரமோ துபசாரற்றி. (௪௮)

அருச்சித்தேபின் றோத்திரங்க ளறைந்துதிருநீ றதுபெற்று
மருச்செய்கடுக்கைத் தொடைமுடிகொண் மன்னிப்பிராற்கு முமைக்குமுயர்
திருக்கல்யாண விழாவினிது செய்துதிருவீ தியிற்பவனி
பெருக்கவியற்றிப் பெரும்பேறு பெற்றான்சேரர் பெருமானே. (௪௯)

அன்னிப்பெருமா நகர்புரக்கு மமலப்பெருமா னம்புலிசேர்
சென்னிப்பெருமா னொருமான்சேர் திருக்கைப்பெருமான் றிருவருட்சீர்
பன்னிப்பெருமால் செறுமவர்க்கே பலிக்கும்பெருமான் பாவிலிங்க
மன்னிப்பெருமான் மணமலர்த்தா மரைத்தாள் பிறவிக் கரைத்தாளே. ()

வேதாகமநூற் பொருளுணர்ந்து மிகுமன்பதனாற் பிரதிட்டை
காதார்பணிலக் குழைப்பரமன் கருணைத்துணைகொண் டியற்றிவைத்த
மீதாஞ்சிவவே தியக்குரவர் வித்தைமலிசா தகர்மறையோர்
தீதாராமற் றிருவமுது செய்தபரிசா ரகர்பலர்க்கும். (௫௧)

மற்றுந்தமிழ்வே தம்படித்தோர் வயங்குபுதுப்பாச் சொலும்புலவர்
சற்றும்பிசகா திசைபாடுந் தகையோர்பலர்க்குங் களிசிறப்ப
முற்றும்பணிகள் கலைவகைபொன் முதலாவனவேண் டுவவளித்துப்
பற்றுஞ்சிற்பத் தொழில்படைத்தோர் பலர்க்குமளித்தான் பரிச்சோரன்.

நித்தியமதோ டதன்குறைக ணீக்குநைமித் திகபூசை
நத்திப் புரிவோ ரமுதமைப்போர் நாதவேத மறைநவில்வோர்
பத்திபெறப்பூத் தொடுத்திடுவோர் பதிநற்றீபப் பணிபுரிவோ
ரெத்திசையுங்கேட் டிடவியங்க ளிசைப்போர்பலரை நியமித்தான் (௫௩)

அன்னநிவேத னத்தினுக்கு மணிவத்திரங்க ளமைப்பதற்கும்
பின்னமறநல் லபிடேகம் பிறக்குவதற்கும் பெருகும்விழா
நன்னர்வாரம் பட்சமதி நாடுமயனம் வற்சரத்திற்
பன்னப்படுவ வனைத்தினுக்கும் பரிவினிபந்தம் பலவிதித்தான். (௫௪)

நெல்லும்பொருளும் விளைவதற்கா நிலங்களளவில் லனவெழுதிக்
கல்லும்பதித்துத் தக்கவரைக் கவனித்தியற்றக் கடமைசொலி
மல்லுந்தியதோட் சோர்பிரான் மன்னீச்சுரன்றன் மலரடியே
யல்லும்பகலும் பணிந்துமகிழ்ந் தவிர்ந்தான் பிறவிதவிர்ந்தானே. (௫௫)

மாரன்றெழிலு நமன்றெழிலு மலரோன்றெழிலு மறுத்தமனச்
சோரன்பணிசெய் சரிதமதிற் சிறிதுபகர்ந்தேன் றிறற்கச்சி
யூரன்சமயன் செயல்சிறிது முபர்சோரன்னிப் பெயர்வேடன்
சாரன்புறுமில் லுடன்பதவி சார்ந்தவிதமுஞ் சாற்றுவனே. (௫௬)

சோரன்பணிசெய்படலமுற்றிற்று.

ஆக கவி ௩0௩.

எட்டாவது

# வேடன்கதிபெறுபடலம்.

சோமான் றனக்கருஞ் சினேக னவன்
பாரகத் தரும்புகழ் படருங் காஞ்சியிற்
றீரசெங் குந்தரிற் செனித்துக் கல்விநூற்
சாரமுந் தெரிந்தவன் சமயன் றனரோ. (க)

சத்திதன் மதத்தினிற் சார்ந்து வாமமார்க்
கத்தினை நலமெனக் கருதி னனல்லோர்
புத்திசொன் மொழிசெவி புகவி டாமன்முன்
னத்திய வினைபுரி நவையி னலந்தோ. (உ)

வேதவிற் பனங்கொளு மேற்கு லத்தரும்
பாதகக் கொலைமகம் பழகு வாரெனிற்
சாதகத் தன்மைதோய் சமயன் வாமநூல்
போதநன் றெனக்கொளல் புதுமை யல்லவே. (ங)

ஞானயோ கியர்தொழு நல்ல மூர்த்தமா
மானமார் புவனையும் வளங்கொள் பாலையு
மீனமில் பயன்றரா விருந்தும் பற்றிடான்
றீனமார் திரிபுரை யென்னுந் தேவியை. (ச)

காளியைத் துர்க்கையைக் கறும்பி டாரியை
நீளிய மனத்திடை நினைத்து பாசித்து
வாளினு லுயிர்ப்பலி வயக்கிச் சில்பயன்
மூளிசை தெரிந்தக முதிர்ச்சி யெய்தினன். (ரு)

அடிக்கடி சோன்பா லணுகி யங்கவன்
பிடித்தகா ரியங்களைப் பிரிய மாய்முடித்
தொடித்திடா வுரிமைகொண் டுவன்ச காயத்தான்
மிடித்தொடர் பின்றியே மிளிர்த லாயினன். (சா)

ஆதலின் வனத்திடை யன்னி யாலகழ்
மேதகு குழியிடை மிளிர்ந்த லிங்கத்தைப்
போதகமிழுத்திடப் புகன்றி யற்றுநாள்
பாதகம் விடுகெனப் பகர்ந்திலானிவன். (எ)

அவ்விடத் தெழுந்தபே ரழற்பி ழம்பினைச்
செவ்விய மொழிசொலித் திரும்பச் செய்தது
மூவ்விதப் பீடங்கண் மூர்த்தி யேற்றசீ
ரொவ்விடாப் பெருமையை யுணர்ந்து சொன்னதும். (அ)

சத்தியை வழிபடுந் தகுதி யாலன்றிப்
புத்தியின் பலமெனப் புகலல் கூடுமோ
நத்தியவிருவித நாமத் தூர்க்கைகள்
மெத்தியல் வனச்செடி வேந்தன் வெட்டுநாள். (கூ)

வேறு.

எந்தமக்குயிர்ப் பலிகொடுபூசனை யியற்றிச்
சொந்தக்கோயிலுங் குயிற்றுகென்றிவனிடஞ் சொல்கேட்
டிந்தமாதிருத் பணிமுடிவுறப்பொறுத் திருக்கிற்
பிந்தச்செய்வனென் றுரைத்ததோர்வாய்மொழி பிசகான். (கO)

முடிந்தபின்னிரு கோவில்களினிதுமுற் றுவித்து
மடிந்திடாதகல் வடிவங்கள்வகுத்துநல் வழியில்
வடிந்ததேன்வடை பாயசம்பயறன்னம் வைத்துத்
தடிந்தநாளிகே ரக்கனியாயிரந் தகர்த்தான். (கக)

பூசணிப்பெருங் காய்பலவாள்கொடு போழ்ந்தா
னீசவூன்படைத் திடும்விதியிழிவென நெஞ்சி
லாசகன்றிட வறிந்தனன் பூசனை யாற்றி
நேசமுற்றவா றதற்குவேண்டியபொரு ளிறைத்தான். (கஉ)

கொலையதேதொழி லாக்கொளுமெயினனுங் குளிர்நன்
னிலையனுக்கிழங் கயின்றுமாதவஞ்செய நிறுவுந்
தலைவனுணமன் னீச்சுரன்சமயனைச் சைவக்
கலைபமைந்திடக் கருணைசெய்ததுமிகு களிப்பே. (கஈ)

நிலத்தின் றன்மையா னீர்குணங்காட்டல்போ னேர்மை
நலத்தின்மேலவர் சேர்க்கையால்வருமெனு ஞாயம்
புலத்தின்சீர்மலி சோர்கோனுடனிசை புணர்ப்பிற்
குலத்தின்மேன்மையிச் சமயனுற்றமைந்ததாற் குலவும். (௧௪)

சோன்றன்னிடஞ் சமயனுஞ்சோழனுஞ் சிந்தை
வாரமார்ந்தகத் துரிரங்கனெனும்வை சியனும்
போரவாமலி யுளச்சடையப்பனும் பிரியா
நீரதாம்விடை கொடுதமூர்சென்றனர் நெடிதே. (௧௫)

சோன்மன்னிநா யகன்றனித்திருப்பணி செய்து
வாரமிக்கரும் பப்புணலாட்டல்வன் கவியாண்
டாரமுச்சகத் திரத்தைஞ்ஞூற்றைம்பத்தைந் தாரும்
பாரமிக்கவிக் கிரமவைகாசிப்பஞ் சமியே. (௧௬)

சுத்தபூசைசெய் திடுமிடத்தினிற்றெய்வந் தோய்ந்து
பத்தர்வேண்டிடு பயன்முழுதளித்தருள் பயக்கும்
பித்தர்கோழியா டேனநல்லெருமையின் பிணவூன்
வைத்தபூசையிற் பேய்களேநின்றுயிர் வாங்கும். (௧௭)

சுசியிரக்கமுள் ளன்புமெய்த்தவநிலைத் தொடர்பாம்
பிசிதங்கள்ளரக் கருந்தல்பாழ்நரகுறு பிழையே
நிசிசரர்க்குநேர் வாமிகள்கொலைசெய்து நிலத்தோர்க்
கசிநிணத்தசை கௌவிடப்பழக்கினர் கயவால். (௧௮)

ஈசனாணைன் குகன்கணபதிசிவை யிலங்கும்
வாசமார்தளி யென்னினுமுயிர்ப்பலி வழங்கு
மாசமைந்திடிற் கொலைக்களமனையதே யலகை
நேசவாய்தலு மஃதின்றேறக்கிலையை நிகர்க்கும். (௧௯)

கருணைபத்திவை ராகமெஞ்ஞானமாக் கழறும்
பொருள்செறிந்ததாற் படிகொடேமுத்தியிற் புகுத
லருள்கொண்மேலவர் முறையெனின் முதற்படி யழித்தோர்
பெருமைவீட்டுறன் முயலின்கோடனையதே பேசின். (௨௦)

கல்லைநேர்மனக் கசடுறுபுன்குணக் கயவர்
சொல்லைநம்பியெவ் வகையினுலுங்கொலை தொடங்கா
தில்லைமாதரைப் பொன்னைமெய்யெனுமயக் கிசையா
தெல்லைதீர்குரு பானடிதொழனல்லோ ரியல்பே. (௨௧)

வள்ளலாம்வட லூர்ப்பெரியோனருள் வாய்மை
விள்ளவந்தவண் ணச்சரபேந்திரன் விரைப்பூங்
கள்ளமைந்தபைம் பொதும்பர்சூழ்சிரவையிற் கருணை
கொள்ளருட்குரு வாமிராமானந்தக் குரிசில். (௨௨)

ஆதியாம்பெரி யோர்பலரிந்நா ளகிலந்
தீதிலாநலஞ் சேரவோதியகவித் திரளிற்
கோதிலைந்திடு கொலைபுலையிஞ்சைவன் கொடிதென்
றோதினாத னூலறிவாளர்கண் டுய்வார். (௨௩)

ஔவைவள்ளுவ னரியவெண்காடனே யாதிச்
செவ்வைமாதவப் பெரியருங்கொலைபுலை தீய
கௌவையாமெனக் கழறினரெத்தனை கண்டுந்
தௌவைசேர்குணத் தினர்திருந்தாரெனல் சரதம். (௨௪)


கொன்றுணுங்கொடி யோர்சிலருட்பயன் கொண்டா
ரென்றுநம்பியந் நெறிசெலல்பழுதன்றோ ரிகத்தில்
வென்றுளாரெனச் சிலசிறுசெயல்சினுள் விளைத்துப்
பொன்றுநாள்பெரு நரகவாதனைகொள்வார் புவியீர். (௨௫)

அன்னியூர்ச்சிவன் றளிவடக்கொடுதெற்கி லமைந்த
கன்னிமாரிரு தார்க்கைக்கும் பிணப்பலி கண்டு
பின்னியன்றவர் பழகினரினியுளார் பிழையென்
றுன்னிநீக்கிநற் பூசைசெய்துய்ந்திட லுயர்வே. (௨௬)

எக்குலத்தினிற் பிறக்கினுமீசனன் பியைந்தோர்
மிக்குயர்ந்தவ ரெனுமறைத்திருமொழி விளங்கக்
கைக்குகந்தபல் கருவிகொளெயினரிற் கவின்ற
மைக்குழம்புற முன்னியுமவன்பெறு மனையும். (௨௭)

உ

சிவமயம்.



குமாரபாளையம்

திருவாளர் சி. ந. கறுப்பகவுண்டரவர்கள்

அன்னியூர் தருமகர்த்தர்.

கலைபயின்றிலர் குரவனையடுத்திலர் கருத்தி
னுலைவிலாப்பெரும் பத்தியுநிராசையு மொருங்கே
நிலைபெறத்திகழ்ந் தகழ்ந்திடுகிழங்கினு னிமலன்
றலைமையார்திருச் சேவைபெற்றவனருட் டழைவால். (௨௮)

உடலிரண்டுயி ரொன்றெனப்பலபக லுற்றூர்
கெடலிலாப்புகழ்ச் சேரன்றனுரிமையிற் கிளர்ந்து
படருமாலயப் பணிதிருவிழாவணி பலவு
நடலைதீர்பெருங் களிப்பிற்கண்டிருந்தொர்நன் னுளில். (௨௯)

மருள்செய்மாயைவன் றொடர்பறமாற்றிநன் மதியைப்
பொருள்கொளிப்புவி நினைவின்மெய்ந்நிலையிடை புகுத்தி
அருள்கொளன்னியூர் மன்னியீச்சுரன்றிரு வடியிற்
றெருள்பெரும்பா ஞானமெய்க்கதிபொருந் தினரே. (௩௦)

யாவுமாகியெப் பொருளினுந்தாக்குத லில்லாக்
கோவுமாயடி யவர்மனக்குறிவழி குலவுந்
தேவுமாயமைந் திடுமன்னீச்சுரனருட் செயலோர்
நாவுளார்சொலின் முடிவுறுதென்பர்ஞா னிகளே. (௩௧)

அன்னிப்பேர்கொளு மெயினனுமவன்மனை யாளும்
பன்னிக்கோரிட மளித்தவன்பதம்பெறல் பகர்ந்தேன்
மன்னிப்பேர்கொளுஞ் சிவன்பணிசுறுப்பண மகிபன்
சென்னிப்பால்வகித் தியற்றியதிறஞ்சொல்வேன் சிறிதே. (௩௨)

வேடன்கதிபெறுபடலமுற்றிற்று.

ஆக கவி—௩௩௫.

ஒன்பதாவது

# தலோத்தாரணப்படலம்.

அருள்விளங்குமன் னிப்பதியூடவிர்
இருள்விளங்குகண் டத்துமன்னீசற்குத்
தெருள்விளங்கு திருத்தளிசேர்கோன்
பொருள்விளங்கப் புரிந்தனன்பூர்வத்தில். (௧)

இந்தநாளவ் வெழிற்றிருவாலயம்
நந்தலெய்தி நலங்குலையாமலன்
புந்தகத்தினுத் தாரணம்பண்ணுமோர்
செந்தவப்புனி தன்றிறஞ்செப்புவாம். (உ)

ஆலயத்தி னரும்பணிமாதவச்
சீலர்மேவுந் திருமடத்தின்பணி
நூலனந்தம் வெளியிடுநோன்பணிப்
பாலதேபதி புண்ணியம்பார்மிசை. (௩)

அன்னம்பற்பலர்க் கன்புடனிட்டிடல்
சொன்னம்வீடுநற் றாசுமனைதால்
இன்னமுஞ்சொ லிவைபோலனந்தமும்
பன்னலாம்பசு புண்ணியமாகுமால். (௪)

தாயர்தந்தை தனையர்சகோதரர்
ஏயபன்னி யினுமுள்ளசுற்றத்தார்க்
கியநேர்வ திழிபாசபுண்ணியம்
ஆயவென்ன வறைந்தனநூல்களே. (௫)

மூன்றினுட்பதி புண்ணியமுத்தியும்
ஏன்றியங்கருட் போகமுமீந்திடும்
ஊன்றிரண்டு முறுபரபோகமுந்
தோன்றிகத்தின் சுகங்களுந் தோய்ப்பவே. (௬)

மேலதாம்பதி புண்ணியமேதகு
சீலமொன்றிய சிந்தையிற்செய்தவர்
கோலமார்தரு கோச்செங்கட்சோழன்றென்
ஆலவாயி லவிர்ந்தகூன்பாண்டியன். (௭)

சேரமான்பெரு மாண்முதற்செப்புநன்
னீராகு நிருபர்களெண்ணிலார்
நாரணன்றளி நற்பரகாலன்முன்
சீரங்கத்திற் செய்துமுடித்தனன். (௮)

பொருளின்சத்தியி னாலும்புரைதவிர்
அருளின்வெற்றியி னாலுமவர்புரி
தெருளின்மிக்க திருப்பணிச்சீர்பொலேன்
மருளிலாய்ந்து வழுத்தற்கடங்குமோ. (௯)

அத்தகைப்பணி யான்றதன்பொன்கொண்டும்
நத்தனேகநல் லோர்தருபொன்கொண்டும்
இத்தரைக்க ணியற்றுதல்நன் மையே
சித்தமூடு செருக்கின்னல்போக்கியே. (௧௰)

புதிதொர்கோயில்செய் புண்ணியந்தன்னிலும்
பதிபழந்தளி யைப்பழுதோவவே
மதிநினைந்து திருத்துதன்மாட்சியாங்
கதிவழங்குமென் றூர்கலைவாணரே. (௧௧)

மதிகுலத்தரி மர்த்தனபாண்டியன்
குதிரைகொள்ளக் கொடுத்தபொருட்குவை
முதிரருட்குரு சந்நிதிமுன்குவித்
ததிநலங்கொண் டனர்வாதவூரரே. (௧௨)

பின்னப்பொன்னைப் பெருந்துறைத்தம்பிரான்
மன்னலான வயின்றிருக்கோயில்செய்
தன்னவேந்தன தாணையுந்தாண்டிநின்
றின்னலில்கதி யெய்தலிகஞ்சொலும். (௧௩)

அவ்விதங்க ளறைந்துமுடிவதன்
றிவ்விடத்தி லெடுத்தகதைத்தொடர்
செவ்விதாயொர் சிலதொகுத்தோதுவேன்
வெவ்விதாகும் வினைதவிர்ந்துய்யவே. (௧௪)

வேறு.

எயினனந் நாளகழ்ந்த வினியநற் கிழங்கிலீசன்
பயிலரு ளிலிங்கமாகிப் பதிந்தமை யுணர்ந்தசோரன்
செயிரறு களிப்பாலங்குச் சென்றுகண் டரியகோயில்
வெயில்விடு மணிப்பொற்றூபி வியன்மதில் சிகரிசெய்து. (௧௫)

பொதுவொடு சிறப்பதாகும் பூசனைக் குளநிபந்தம்
குதுகுலத் துடனமைத்துக் கும்பவான் புனலுமாட்டி
விதுவணி சடையான்பாத மேவல்முன் னுவன்றேனந்தச்
சதுரன்செய் பணிபல்காலந் தாண்டலாற் பழமைத்தாகி. (கசு)

சிலவிடம் பிளந்துநின்றுஞ் சிலவிடஞ் சிதைந்துவீழ்ந்தும்
இலகுசில் விடங்கள்மீதே யிருஞ்செடி மாமுளைத்தும்
நலமுறு மட்டபந்த னப்பெரு மருந்துமூர்த்திக்
கிலதுபேர்ந் தசைந்துநின்ற வியல்பினை யெவருந்தேர்ந்தார். (கஎ)

அரசியற் றுறைகைக்கொண்டோ ரளித்திடு மரும்பொன்னாலே
பரமனு ராதனங்கள் பரார்த்தமா நடப்பதாயிற்
றரமொடு தளியின்சீருந் தாரண முளுற்றுஞ்சேயோன்
றாணமார் பொழில்சூழன்னி யூர்ப்பர னமைத்தானந்நாள். (கஅ)

கொங்குநா டதன்முகம்போற் குமாரபா ளையமென்றோரூர்
தங்குமந் நகர்வேளாளர் தங்குடித் தலைமையாகிச்
செங்குணப் பொலிவுவாய்ந்த சின்னநஞ் சப்பநாமன்
மங்குறுக் கற்பிற்சீர்த்த மனைவள்ளி யம்மையோடே. (ககூ)

செய்தமா தவத்தின்சேயாய்ச் செகத்தினிற் செனித்தசீலன்
மெய்தழை யுளத்தன்கொல்லா விரதனா னுநன்னோன்பன்
நெய்தவ ழிதழிவேய்ந்த நெடுஞ்சடை நிமலன்பாதம்
உய்தரத் துணையாமென்னு முணர்ச்சிமுன் றவத்தானுற்றோன். (உO)

பூமக ளருளாஞ்செல்வப் பொலிவுடன் புரைதீர்ஞானப்
பாமக ளருளாங்கல்விப் பயனுநன் கமைந்தபண்போன்
காமம்வெங் குரோதந்தானுங் கனமத மாச்சர்யாதித்
தீமையுஞ் சேராநெஞ்சன் றிகழ்நறுப் பணனெனும்பேர். (உக)

தந்தைதா யுரைக்கப்பெற்றோன் சற்சனர் நேயன்றீயோர்
சிந்தையி னிடையேயச்சஞ் சேரமெய்த் திறஞ்சாதிப்போ
னிந்தையில் புகழ்சேரன்னி நெடுநகர் நிகழ்மன்னீசர்
முந்தையா லயத்திலேகி முழுமனத் துடன்பணிந்தான். (உஉ)

அருந்தவச் செல்வியாகு மம்மையி னிருபொற்பாதந்
திருந்தவே கண்டுபோற்றித் திருப்பொரு மெய்யன்பூறிப்
பெருந்தவத் திவனெஞ்சூடு பிறங்கிய பெருஞ்சங்கற்பங்
குருந்தெனத் தோன்றிப்பின்னர்க் குன்றெனச் சிறந்ததம்மா. (௨௬)

கோயிலிற் பணிகள்செய்வோர் கொண்டதை நடத்துங்கர்த்தர்
ஆயினோர் சிரத்தைகுன்றி யபசாரச் செயல்களாற்றி
மேயின ரெனவுள்வாடி வெகுளியுஞ் சலிப்புமேவி
வாயினு லொன்றுஞ்சொல்லான் மவுனமாய்ச் சிலநாளுய்த்தா

அவன்மனச் சங்கற்பந்தா னதிகரித் திடுங்காலத்திற்
சிவபிரா னருளைப்பாற் றிகழ்நகர் வளர்வோர்யாரும்
நவமுற நீயேமன்னி நாதனு லயத்துத்தன்மம்
தவறுறு தியற்றும்வேலை தாங்குகென் றுரைத்தார் மாதோ.

பலர்சொலு மந்தமாற்றம் பான்மொழி யெ
நலமலி முப்பாணுண்டி
குலவுபூ சனைவிழாக்கள்
நிலவுறு மானஞ்செம்

சிற்சிலாண் டியலுநா
பொற்சிலைப் பெருமா
கற்சில பெயர்ந்துவீழ்
நற்சிவை வளருங்கோ

அரியகற் பணிதவக்
கிரிதொறு நடிக்குஞ்
விரிசடைப் பரமன்று
பெரியமண் டபங்கள்

முகப்புமண் டபத்தை
சகத்தினர் மதிக்கு
மகத்துவத் தலைப்புவ
உகப்புடன் முடித்து

மண்டப வடிவாச்செய்து வளர்திரு முற்றமெங்குந்
தொண்டர்க ணடந்துநாளுந் துதிக்கநற் கற்பதித்து
விண்டகன் மதிலின்றொன்றும் வினைபயிர்த் தொழிலினாலே
கண்டதன் பொருளுநல்லோர் கைப்பொனுங் கலந்துசெய்தான். (ஙO)

கலியையா யிரத்தொடீர்பான் கவின்றசித் தார்த்திநாமம்
பொலிவரு டத்திலீசன் பொற்கோயிற் பணிதுவக்கி
மலிபதி னெட்டாண்டாக மனச்சலிப் பணுவுமின்றிப்
பலிதமார் தவத்தாற்செய்த பான்மையென் னென்பதம்மா. (ஙக)

வள்ளியம் மாட்பேரோடு வயங்குநல் லம்மாளென்னுந்
தெள்ளிய பெயர்தோய்கற்பின் றெரிவைய ரிருவர்தம்மை
நள்ளியே வதுவைமுன்பின் னனிபுரிந் துயரில்வாழ்க்கை
யுள்ளிசைந் தாண்பெண்சேய்க ளுதிக்கப்பெற் றொளிருநாளில். (ஙஉ)

திங்களூர் வருமப்பூதி திருநாவுக் கரசர்க்காற்றும்
பொங்கமார் பணியின்வேளை புணர்விடத் தொருசேய்போன்ற
அங்கது குறித்துநெஞ்ச மயர்ந்திடா னன்னோன்செய்த
பங்கமில் செயல்போலின்னோன் பக்குவம் புவியோர்தோ. (ஙங)

ஐந்துவற் சரங்கள்செய்தே யருந்தவச் செல்விகோயில்
முந்துற முடித்தகாலை முதற்சுதன் பதினொன்பானாண்
டுந்துமெவ் வனத்தன்மாள வுளுற்றினன் பரமனிந்த
மைந்துடைப் புனிதன்சிந்தை வருந்துபு தியங்கிநில்லான். (ஙச)

வினைத்தொடர் பதனுல்வந்த விபத்தென விலக்கிக்கொண்ட
பனைத்துணைத் தவத்தால்மற்றும் பலதிருப்பணி செய்திட்டான்
மனைக்கிடை சிறிதுநட்டம் வரினுந்தெய் வத்தைநிந்தித்
தனைத்தும்பொய் யெனப்பிதற்று மவாறி யாமையென்னே. (ஙரு)

வேளாள மாபில்வந்த மேன்மையால் விமலன்றுளில்
மூளார்வச் சிந்தைதோய்ந்த முதுகறுப் பணப்பேர்த்தூயன்
றளாண்மைத் திறத்தைக்கூறிற் றகுதிருத் தொண்டர்தங்கள்
மீளாமெய்த் தொண்டினோடு விளம்பலா மெனல்மெய்யம்மா. (ஙசு)

உலகினிற் பலர்வருந்த வொறுத்துந்திக் கில்லாமாந்தர்
சிலர்மறைந் தபினன்னோர்பொன் றிரட்டியுஞ் சோரன்செய்த
அலகறு பணிகடம்மி லவிர்புவி யுழுவால்வந்த
நலமிகு பொருளாலின்னோ னவிற்றல்மிக் கேற்றமாமே. (௩௭)

ஆசமை பரத்தைமாருக் கரியமா ளிகைமுடித்தும்
தூசணிப் பணிகள்வாங்கித் தொகுத்துங்கட் குடிவிளைத்தும்
பூசல்சேர் வழக்குச்செய்தும் புரையுல கியலில்வாய்ந்த
நேசமார் பதவிவேட்கை நிரம்பியும் பட்டப்பேர்கள். (௩௮)

பெற்றிடல் குறித்தும்பல்லோர் பெருந்தொகைப் பொருளையள்ளி
மற்றிணை யில்லையென்ன வள்ளல்போ லிறைத்துவாடி
முற்றிய துயரநிந்தை முயங்கின ரிந்தத்தீரன்
பற்றினன் மன்னிநாதன் பணிதவத் தொடர்பால்மன்னோ. (௩௯)

அருந்தவச் செல்விபாகத் தமர்ந்தமன் னீசர்தங்கண்
பொருந்திய வருளானூல்கள் புனன்றவா றட்டபந்த
மருந்துசாத் துபுமுடித்து வளங்கொள்கும் பாபிடேகம்
வருந்துறு தியற்றிவேத மறையவர் முதற்பல்லோர்க்கும். (௪0)

அன்னமுந் துகிலும்பொன்னு மளித்துவப் படையச்செய்து
நன்னலத் துபசாரங்க ளுயகன் றளியிலென்றும்
மன்னவே நடத்தியின்னும் வண்பணி பலசெய்நோக்கம்
துன்னலுற் றுளனவ்வாறு துணைசெய்வான் பரமன்மாதோ. (௪௧)

அல்லிசை களத்தான்மன்னி யான்றிருப் பணிக்குள்ளன்பாய்க்
கல்லிலொன் றெடுத்தளித்தோர் கவின்மலி திருமுற்றத்துப்
புல்லிலொன் றகழ்ந்தெறிந்தோர் பொற்புயர் சிவலோகத்தில்
ஒல்லிவாழ்ந் திடுவரென்ப துண்மையீ துண்மையாமே. (௪௨)

ஈசுர வருடத்தானி யெட்டினிற் சோமவாரம்
மாசுறுத் திதிபன்மூன்றில் வளரநு டப்பேர்மீனைப்
பேசுநற் றினத்திலோரை பெறுசிங்க மாகும்விண்பால்
வீசுநீர்ச் சடைமன்னீசன் மிளிர்கும்பா பிடேகநாளே. (௪௩)

## வேறு.

வயலில்விளைந்த நெல்முளையை வாரிக்கொணர்ந்தங் கரனடியார்க்
கியலுமமுது சமைத்தளித்த விளையான்குடிமா றனுமிருகட்
கயல்சேர்பரவை கோனடியார் கணத்தை வணங்கா மையிற்கனன்றிட்
டயலேயடியார் குழாத்திவனென் றறைந்தவிறல்மிண் டன்றானும். (௪௪)

தனதுமகள்கூந் தலைமணநாள் தவவேதியர்வேட் டமைதெரிந்து
மனமாரன்பா லரிந்தளித்த மானக்கஞ்சா றனுமமணர்
கனலிற்கொளுவு நீற்றறைதண் கவின்வாவியதாய்க் கடலிடுகல்
முனமோர்கலமாய்க் கரைசேர்ந்த முதன்மைத்திருநா வுக்கரசும். (௪௫)

சிவனாமுதுக் குறுசாலி தேகசுகத்துக் கெனவெடுத்த
தவறானதுகண் டுளசுற்றந் தடிந்தேயருள்கொள் கோட்புலியும்
நவமார்தமிழ்சே ராரூ ரனம்பன்றனைத்தூ தனுப்பினனென்
றவனைக்காணா துயிர்துறந்திட் டருள்சேர்கலிக்கா மன்றானும். (௪௬)

பிடகர்மொழிகொண் டிழிபவுத்தம் பிடித்துஞ்சிவன்மேற் கல்மலர்தூய்க்
கெடலில்கதிகொள் சாக்கியனுங் கெருவமிகுந்து சிவநிந்தை
யிடர்தீரடியார் நிந்தைசொல்வோ ரிசைநாவினைவா ளாலரிந்தே
திடமார்புவிமன் னரும்பணியத் திகழ்ந்தசத்திப் பெரியோனும், (௪௭)

ஐம்பாதகத்தி லொன்றுஞ்சூ தாடுந்தொழிலா லாக்கியபொன்
கம்பார்குழையா னடியவர்க்குக் கனிவிலளித்துக் கதிபுக்க
செம்பான்மைகொண்மூர்க் கனுமரியின் செந்நெல்லமுது கமரில்விழத்
தம்பாலுளவாள் களமரியச் சலியாவரிவாட் டாயனும்பின். (௧௮)

ஒருபூவெடுத்து முகந்தவண்மூக் குதிரம்பெருக வுடனறுத்துப்
பெருமாநிலத்திற் சிவனடிசேர் பெருமையமைந்த செருத்துணையும்
செருவிற்றளர்வார்க் குபகாரஞ் செய்துதிரட்டுந் தனமடியார்
மருவக்கொடுத்துத் தவம்பெருக்கி வண்மைக்கதிசேர் முனையாடுவான்.

மயிலைத்தலத்தி னிடைதோன்றி மனத்திலான்பூ சைகளியற்றிக்
கயிலைக்கிரிசேர் வாயிலான் றானுங்கவினார் வேளாளர்
பயினற்குடியி லவதரித்துப் பரமனடியிற் பதிந்தகதை
மயிலொத்தவிர்சங் கிலிபரவை மணாளன் றிருத்தொண் டத்தொகையில்.

நன்குவிளங்கு மறைவிரித்து நாரையூர்ப்பா வலனவின்ற
தென்குலவுமந் தாதிகொண்டு திருவார்தொண்டர் புராணநூல்
பொன்குவடுதாங் கியசுடர்போற் புவியோர்புகழ்தில் லைப்பதியில்
மென்குதலைவா ணியினருளால் விரித்தகுன்றைப் புலவோனும் (ருக)

வேளாண்மரபி லவதரித்து வேந்தனநபா யனைக்காத்தான்
நீளாதரத்தா லன்னிநகர் நிமலன்றிருக்கோ யிற்பணிசெய்
தாளாகியவிக் கறுப்பணப்பே ரன்பன்ருனு மக்குலத்தில்
மூளார்வத்தா னுதலால் முதிர்ந்ததிவன்பான் முழுத்தீரம். (ருஉ)

இந்தப்புனிதன் சிரவணமா புரத்திலிராமா னந்தகுரு
சொந்தக்கவுமா ரச்சபையிற் சுபமாயடைந்து மன்னீசன்
சந்தப்பெருமைக் கதையுலகிற் றழைக்கத்தமிழிற் காவியமாய்
அந்தப்படச்செய் தளித்திடென வரிதுகேட்டிட் டனனென்பால். ( )

வேறு.

அதன்பினிப்புரா ணத்தினைக்குருபர னருளால்
விதந்துகூறுத லாயினேன்யானந்த வேளை
மதந்தவிர்ந்தரா மானந்தக்குரவன்றன் மனத்தில்
இதந்தருந்தனிக் கருணையாற்றிகழ்ந்தவா றிசைப்பாம். (ருச)

ஒருகணத்தினுக் கொருவிதப்பிறழ்ந்திடு முலகின்
மருவுமாந்தர்தம் மனமிந்தக்கறுப்பண மகிபன்
உருகுமன்புசே ருளம்பதினெட்டெனுண் டோயா
தருண்மன்னீச்சுரன் பணியினின்றின்னமு மமையும். (ருரு)

ஆதலாலிவ னானருளாலவ தரித்த
நீதவான்கொள்பின் ளைத்திருநாமந்தா னிற்க
போதவுத்தம ருத்தாநப்பியென் புதுப்பேர்
ஓதலாகவென் றொருதிருமொழியுதித் ததரோ. (ருசா)

இத்தகைப்பெரும் பேறடைந்திட வுலகிடத்திற்
சுத்தமானிடப் பிறவிகொள்பயனெனல் துணிவே
வைத்தபேர்ப்பொருள் தொண்டர்சீர்ப்புராணத்தில் வாய்ந்த
முத்தர்பூருவ நம்பிகளிவணிந்நாள் மூண்டான். (ருஎ)

அந்தவேதுவால் உத்தாநப்பியென் றமையும்
முந்தமன்னிநா தன்பணிசேர்கோன் முடித்தான்
பிந்தவந்திந்நா ளதையிவன்புதுக்கிய பெட்பால்
வந்தகாரணப் பெயரென்றாலுந்தகு மாதோ. (௫௮)

சீதைநாயகன் சரிதைகம்பன்சொலச் செய்த
மேதைதோய்ந்தவே ளாளநற்சடையன்போல் வேத
வோதைசேரன்னி யூர்ப்புராணஞ்சொல்சீ றானாற்றி
மாதவோபலப் பேர்நிறுவினனிவன் மன்னோ. (௫௯)

உழவினாற்புரு டார்த்தமோர்நான்குமுற் றோங்கும்
அழகுசான்றவே ளாளர்தங்குலத்துதித் தவிர்வோர்
பழகுமாலயப் பணியடியார்பணி படிந்து
குழவிவெண்பிறைச் சடைப்பரனருள்கொளல் குணமே. (௬0)

நிலையுறாப்பொருட் செல்வநீயடைந்திடி னிலத்து
டலைவிலாப்பதி புண்ணியப்பயன்கொளென் றறைந்த
விலையிலாத்தமிழ் மறைமொழிமுத்திவீட் டினுக்குத்
தலைவனாலமைத் துளபடியென்றிடத் தகுமே. (௬௧)

கொங்குநாட்டில்வே ளாண்குலத்தினி லுருக் கொண்டு
பொங்குசெல்வமும் பொருந்திவாழ்புனிதர்கள் பலரும்
சங்குசேர்குழைத் தம்பிரான்றொண்டினிற் சார்ந்து
தங்குலப்புகழ் தழைத்திடவவன் செய்க தயையே. (௬௨)

கொங்குசேர்குமா ரபாளையக் கறுப்பணக் குணவான்
தங்குதன்மகர்த் தன்றொல்வேளாளனத் தலினால்
வெங்குணந்தவிர் சிரவைவாழ் கந்தசாமிசொலும்
பொங்குமன்னியூர்ப் புராணமுற்றமைந்ததற் புதமே. (௬௩)

வேறு.

வேளாளர்பெருங் குடிப்பிறந்து வேளாளனெனும் பொருள் விளக்குந்
தாளாண்மைகொளுந் தவமுருக தாசக்குரவன் றனதருளின்
மூளாதரரா மானந்த மூர்த்தியுபய முளரித்தாட்
காளாமடியா ரவரடியா ரடியார்மலர்த்தா ளெந்துணையே. (சூச)

தலோத்தாரணப்படலமுற்றிற்று.

ஆக கவி ௩௧௧.

## வாழிவிருத்தம்.

அணிபொழில்சூழ் அன்னியூர் வாழியங்கே
ஆலயங்கொள் மன்னிலிங்க அமலன்வாழி
தணிவில்புகழ்த் தபோதகசுந் தரித்தாய்வாழி
தந்திமுகன் குகன்முதலோர் தழைத்துவாழி
பணிபுரிமெய்ப் பத்தர்முது மறையோர்வாழி
பசுக்குலம்வான் முகில்புலவோர் பலரும்வாழி
மணிவடம்வெண் ணீறுடனைந் தெழுத்தும்வாழி
மாயன்முதற் றேவரெல்லாம் வாழிமாதோ.

அன்னியூர்ப்புராணமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

**தெய்வமேதுணை.**

உ

குருவே துணை.

# அன்னியூர்ப்புராணவசனம்.

நீர்மலிகடலுடை நிலவியநிலமகள், ஏர்மலிதிருமுகம் எனச் சிறந்தொளிரும், தமிழ்த்தேயத்தின் கண்களை யொத்து, சேரன் சோழன் பாண்டியனென்னும் செங்கோல்மன்னர் மூவரால் ஆளப்பட்டுவந்த கேரளநாடு சோழநாடு பாண்டிநாடென்னும் மூன்று நாடுகளினிடையில் நடுநிலைத்தீபமாய்ச் சேரமானுடைய அபிமானத்திற் பொருந்தி விளங்குவது, தென்கயிலையென்று வழங்கப்படுவதும் சிவவடிவமைந்ததுமான வெள்ளியங்கிரி முதலிய பல மலைகளையும், காவேரி முதலிய புண்ணிய நதிகளையும், திருப்புக்கொளியூர், திருமுருகன்பூண்டி முதலிய பல தெய்வத்தலங்களையும், பொருள்வளம் அருள்வளமாதி வளங்களனைத்தும் ஒருங்கேயமைந்து விளங்குவது கொங்கு என்னும் திருநாடாகும்.

அத்தகைய கொங்குநாட்டின்கண் அமைந்த பல நகரங்களினும் அதிகச்சிறப்பினதாகிய பதியொன்று வானியாற்றின் தென்கீழ்த்திசையில் உள்ளது. மலர்த்தடங்களாலும், அழகிய தென்னை, பலா, மா முதலிய விருக்ஷங்களாலும் சூழப்பெற்று, தருமநெறி வழுவாத உத்தம குணத்தினரான நல்லோர்கள் நிறைந்து விளங்குவது, ஸ்ரீ தபோதகசௌந்தரி என்னும் தேவிசகிதம் ஸ்ரீ மன்னீச்சுரப்பெருமான் எழுந்தருளி அன்பினர் விருப்பம் அனைத்தும் அளித்தருளும் அற்புதத் திருக்கோயிலையும், ஸ்ரீதேவி பூதேவி சகிதம் ஸ்ரீ வரதராசப்பெருமாள் அமர்ந்து விளங்கும் சன்னிதானத்தையும், இருகண்போற்கொண்டு விளங்குவது குடிவளம் செழித்துக் குணநலமிகுத்துள்ளது அன்னியூரென்னும்பதியாம்,

அந்தப்பதியின்கண் விளங்கும் ஸ்ரீ மன்னீஸ்வரர் சுயம்புலிங்கமானது பூர்வம் கிரேதாயுகத்தில் சிருட்டிகர்த்தனாகிய பிரமதேவன் தனது தந்தையாகியும் உலகரக்ஷககர்த்தராகியுமுள்ள ஸ்ரீ நாராயணமூர்த்தியிடத்தில், செருக்குற்றுப்பிணங்கித் தானே சிறந்த தலைமையுடையோனென்றும், விட்டுணுமூர்த்தி தனக்குத் தாழ்ந்தவரென்றும் தருக்கித்துப் பெரும்போரிட்டனன். இவரிருவரும் பகைகொண்டு வாதிட்டதனால் உலகிலுள்ளோர் அனைவரும் சராசரவுயிர்வருக்கங்கள் பலவும் அதிக சஞ்சலமுறும்படி நேர்ந்தது.

அக்காலத்தில் கருணை நிறைந்த கண்ணுதற்கடவுளாகிய சிவபிரான் ஆதியந்தமில்லா அருட்சோதிமலையாய் அவரிடையேநின்று இதன் அடிமுடிகளிலொன்றைக் கண்டுவந்து சொல்பவரே பெரியரென்று அசரீரியாய்க் கூறியருளினர். அம்மொழி செவிக்கொண்ட பிரமனும் விட்டுணுவும் உடனே முறையே அன்னப்பட்சியாயும் வராகமாயும் வடிவுகொண்டு முடியையும் அடியையும் காண்போமென்றுகூறி மேலே விண்ணிற்பறந்தும் கீழே புவியில் அகழ்ந்தும் சென்றனர்.

அவ்வாறுசென்றுபல் லாயிரம் ஆண்டுகள்வரை தேடியும் காணாது திகைத்து விட்டுணு மீண்டு பூவுலகடைந்து பணிந்துநின்றனராக, நான்முகன் அங்கு இறைவன்திருமுடியினின்றிறங்கிய தாழைமலரொன்றைப் பொய்ச்சான்று நியமித்துக்கொண்டு பூமியில்வந்து, தான் சிவபிரானது திருமுடிமுடிவைத் தெரிந்ததாகக் கூறினர். அந்நிலை கண்ட பெருமான் பிரமதேவனுக்கு மறக்கருணையால் அரிய சாபமிட்டு விட்டுணுவுக்கருள் புரிந்தனர். அப்போது நான்முகன் வணங்கித் துதித்துத் தனது பிழைக்குத் தீர்வு வேண்டல்செய்து பரமேசன் அருளிய திருமொழிப்படி, கொங்கிலுள்ள வள்ளிவனத்திற் சுயம்பாய் அமைந்த இலிங்கமூர்த்தியைப் பல்காற்பூசித்துச் சிவபிரான் திருச்சேவைபெற்று, திருவருளுக்குரியனாகி, அவ்விலிங்கத்துக்கு வன்னிநாதரென்று பேரிட்டுத் தன்பதவி சேர்ந்தனன்.

அதன்பின் இரண்டாவதான திரேதாயுகத்தில் அகண்டானுபவம் பெற்ற வியாசமுனிவர், உலகின்கண் அரிய மானிடப்பிறவிபெற்ற ஜீவர்கள் பலர் நன்மை தீமை புண்ணிய பாவங்கள் ஒன்றுந் தெரியா

மல் வினை யுழன்றொழியாது உண்மையுணர்ந்து சரியை கிரியை யோக மார்க்கங்களில் முயன்று ஞானமோக்ஷங்களைப் பெற்றுய்யு மாறு தமதுள்ளத்திற் கருணை சுரந்து முன் கிரேதாயுகத்தில் தமது மூதாதையாகிய பிரமதேவரால் ஆராதித்துப் பயன்கொள்ளக்கொடுத்த வன்னியூர் என்ற தலத்தை யடைந்து அங்கு விளங்கும் வன்னியீஸ்வரர் சுயம்புலிங்க மூர்த்தத்தைக்கண்டு அளவிலாப் பெருமகிழ்வுடன் பன்முறை பணிந்தெழுந்து அங்குள்ள பிரமதீர்த்தத்தில் மூழ்கி நித்திய நியமங்களை முடித்துக்கொண்டு, அபிஷேக அலங்கார நிவேதனங்களும், அர்ச்சனை தோத்திர நமஸ்காரப்ரதக்ஷணங்களும் புரிந்து பரம சிவனது திருவுருவத்தை மனவெளியில் அமையக்கொண்டு தியான நிட்டையில் நிலைத்துத்தவமியற்றினர். இவ்வாறு பல்கால் இயற்றி வருகையில் அருட்பெருங்கடலாகிய சிவபிரான் தர்மவடிவாகிய இடப வாகனத்தின்மீது காட்சியளித்து நின்றனர். அதுகண்டு ஆனந்த பரவசராய்த்தெளிந்த வியாசமுனிவர் வேதசூரங்களாற் பலவாறு துதித்து வணங்கலும், இறைவன் அவரை நோக்கி உனக்கு வேண்டும் வரம் யாதென்னலும் எல்லாமுணர்ந்த முதன்மைப் பொருளாகிய தேவரீருக்கு ஒன்றும் போதாத அடியேன் சொல்லித் தெரிவிப்பதியாதுளது, ஆயினும் உத்தரவின்படி சொல்லுகிறேனென்று சொல்லி, உமது திருவடித்தொழும்பாகிய அடிமைத்திறம் எக்காலத்திலும், மாறாமலிருக்கவேண்டும், இங்கு வந்து சந்நிதியில் வணங்கித் தெரிசிப்போர்களது குறைகளெல்லாம் தீரவும் இஷ்டசித்திகளெல்லாம் இனிது பலிதமுறவும் அருள் புரிதல்வேண்டும். இதுமுதல் இவ்விலிங்கம் வாணிலிங்கமென்று வழங்குதல் வேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறாகுகவென்றுரைத்து, சிவபிரான் அந்தர்த்தானமாயினர்.

அவ்வாறே கிரேதாயுகத்தில் வழங்கப்பெற்றிருந்தது. பின் மூன்றாவதான துவாபரயுகத்தில், மிருகண்டு முனிவரது புத்திரராகிய மார்க்கண்டேயர் தமது தவவலிமையினால், திருக்கடவூர் என்னுந்தலத்தில் ஸ்ரீ அமிர்த லிங்கேஸ்வரரைப் பூசித்து அன்பு செலுத்தி அவ்விறைவன் அருளால் இயமவாதையைமாற்றி நித்தியத்தன்மைபெற்ற விஷயம் உலகிலனைவரும் உணர்ந்ததேயாகும். அப்படி அருள் பெற்ற அவர், உலகின் கணுள்ள பல சிவதலங்கள்தோறும் சென்று சிவபிரானை விதி வழி பூசித்துத்தெரிசித்துச் சந்தோஷிக்கும் நியதியுடையவராயொழுகினர். அம்முறையில் பிரமன் முதலியோர்களாற் காலக்கிரமத்தில்

ஆராதிக்கப்பெற்ற புண்ணியமூர்த்தமாகிய வானிலிங்கத்தை வந்து கண்டு மகிழ்ந்து பணிந்து ஸ்நானநுட்டான நியமங்கள் முடித்து, பூஜா உபகரணங்களனைத்தும் சேகரித்துக்கொண்டு வேத மந்திர ஜெபத்துடன் சிவாகம முறைப்படி சகலவுபசார சகிதம் ஆராதித்துத் துதிகூறினராக, ஸ்ரீ சிவபிரான், மான்மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திரங்களுடன் சந்திரசூடனாய், பார்வதி பாகத்தனாய்க் காட்சி வழங்கப்பெற்றுப் பன்முறை பணிந்து ஆனந்த பரவசராகித் தெளிந்து நிற்புழி என்ன விருப்பமென்று சிவபிரான் வினவலும் உனது கருணைத்திருவடிவத்தில் மாறாத பக்தியருள்கவென்று வேண்டலுற்று அடியேனாற் பூசிக்கப்பெற்ற இன்று முதலாக இந்த இலிங்கத்துக்கு வள்ளிலிங்கமென்று திருநாமம் வழங்கவேண்டும், இங்கு வந்து வணங்குவோர்களுக்கெல்லாம் தீர்க்காயுளும் திடகாத்திரமும் செல்வம் கல்வி முதலான பயன்களெல்லாமும் பெருகும்படி தேவரீர் கிருபை பாலிக்க வேண்டுமென வேண்டினர். அதற்குப் பெருமான் அவ்வாறாகுக வென்றருள்புரிந்து மறைந்தனர். மார்க்கண்டர் வேறு தலங் கட்கேகினர். அதுமுதல் அவ்வனம் வள்ளிக்கொடிகள் எங்கும் முளைத்துப் படர்ந்து செழித்து விளங்கியதால் வள்ளி வனமென்று பலரும் சொல்லும்படி நாளடைவில் மழை வெள்ளம், காற்று முதலிய காரணங்களால் அதிகமேடுபட்டு மரஞ்செடிகளால் மிக மூடப்பட்டு அவ்வனம் விளங்கிற்று.

இந்தக்கலியுகத்தின் வருடம் மூவாயிரத்துக்கு மேற்போந்த ஐந்தாவது நூற்றாண்டு கடந்த காலத்தில், தமிழ்த்தேசத்தைச் சேரன், சோழன், பாண்டியனென்ற மூவேந்தர்கள் ஆண்டு வந்தனர். அவருட் சேரமன்னவன் அதிக அன்பு நிறைந்த மனத்துடன் செங்கோல் செலுத்திப் பல சிவாலயங்களையும் தெரிசித்து ஆங்காங்கும் நித்திய நைமித்திக பூசை விழாக்களைக் குறைவற நடாத்தியும், ஆலய ஜீர்ணோத்தாரணம் புரிந்தும் இருந்தனன். அம்முறையில் கொங்குநாட்டின் கணுள்ள சேவூர் என்னும் சிவதலத்தின்கண் சிவபிரானுக்குத் திருக்கோயிற் பணிதுவக்கி நடத்திக்கொண்டிருப்பதானன்.

அக்காலத்தில் வானியாறு என்னும் புண்ணிய நதியின் ஆக்னேயதிசை ஒன்பதாவது மைலில் இருந்த வள்ளி வனமென்னும் காட்டில் ஒரு வேடன் அன்னி என்னும் பெயருடையவன், சுற்றுப் பக்கங்

களிலெல்லாம் தானும் தன் மனைவியுமாகச்சென்று, வேட்டையாடி யும், காய் கிழங்கு கனிவகைகள் தேடியும் உண்டு சீவிப்பவன், ஒரு நாள் எங்கும் அலைந்து தெய்வச் செயலால் ஒன்றும் எய்தப்பெறாது திகைத்து, வள்ளியாரணியத்தையடைந்து பெரியதொரு வள்ளிச் செடியை இரைவிருப்பத்தால், கருவிகொண்டு கெல்லத்தொடங்கினன். அது மிகவும் ஆழம்போய்க் கிழங்கிருப்பது தெரிந்து நன்கு பறித்துப் பெயர்க்க எத்தனிக்கவும் அது மிகப்பருத்து நீண்டிருப்பது கண்டு விடுத்துத்தன் உணவுக்கு வேண்டிய அளவில் அரிந்துகொண்டுபோய் உண்டு பசி தீர்ந்தனன். பின் மறு நாள் தொடங்கிப்பல இடம் சென்றுழல்வதையும் உயிர்க்கொலை புரிவதையும் விடுத்து அந்தக்கிழங் கில் ஒரு பாகத்தையே தினமும் அரிந்து பக்குவப்படுத்தி உண்பதா யிருந்தான். அக்கிழங்கு அரிய அரிய வளர்ந்துகொண்டேயிருந்தது.

அவ்வாறு ஓராண்டு வரை அன்னிவேடனனவன் கிழங்கை அரிந்துண்ணவே அவன்பால் அரிய தவம் பெருகிப் புண்ணிய வடிவா யினன். மறு ஆண்டு முதற்றினம் குழியிலிறங்கிக் கருவியைக் கிழங் கின்மீது ஓச்சுதலும் குபீரென்று இரத்தம் பெருக்கெடுத்துப் பொங் கிற்று. அச்செயல்கண்ட வேடன் மனம் கலங்கி உடல் வெயர்த்து வாய்குழறி, கண்மயங்கி மனைவியுடன் பலவாறு கூக்குரலிட்டுக் கூவி னன். அவ்வோசை கேட்டு வனத்தில் ஆடுமாடு மேய்க்கும் சிறு வர்கள் ஓடிவந்து பார்த்து விஷயந்தெரிந்து தம் வீட்டு முதியோரிடம் போய்த்தெரிவிப்பதாயினர்.

அந்த விசேடத்தைக் கேள்வியுற்ற கிராமவாசிகள் வியப்புடன் விரைந்து சென்று வள்ளிவனத்தின்கண் அன்னிவேடனால் அகழ்ந்த குழியிலுள்ள கிழங்கினிடத்திருந்து பெருகும் உதிரப்பிரவாகத்தை யும், வேட தம்பதிகளின் நிலைமையையும் தெரிந்து அச்சமும் வியப் பும் பொருந்தி விரைந்துபோய்ச் சேவூரில் ஆலயப் பணிபுரிந்து கொண்டு செம்பியப்பதியில் வசிக்கும் சோமான் அரசன் சமுகத்திற் றெரிவித்தனர். அம்மொழி வினவிய அரசன் அதிமகிழ்வும் ஆச்சரிய முங்கொண்டு தனக்குரிமையுள்ளவனை சோழனும், சமயன், சடை யப்பன், கத்தூரிரங்கப்பன் முதலான பரிசனர்களும் புடைசூழப் புறப்பட்டு வள்ளியாரணியத்தையடைந்து ஸ்நான சந்திகள் முடித்து அன்னியும் அவன் பன்னியும் இருக்கும் நிலைமையையறிந்து அவர்கள்

வாய்மொழியும் கேட்டுணர்ந்து பின்பு, கிழங்கு வெட்டிய குழியினுள் இறங்கிப் பார்வையிட்டு ரக்தப் பிரவாகத்தை மாற்றிச் சுத்தம்பண்ணி நோக்கும்போது அற்புதச் சிவலிங்கத் திருவுருவமாகக் காட்சி கிடைக்கப்பெற்று அளவிலா அன்பு பெருகிப்பணிந்து துதித்தனன்.

சேரமான் அங்குத்தோன்றும் இலிங்கத்தை எடுத்து அப்புறம் வைத்துவிட்டு அவ்விடத்தில் ஆலயம் செய்து பிரதிஷ்டை செய்யலாமென்ற எண்ணங்கொண்டு பெயர்த்துப்பார்க்கையில், கீழே வேரோடியசையாமைகண்டு யானையின்கையில் வடத்தைக்கொடுத்து இலிங்கத்திற்பிணைத்து இழுப்பித்து அதினும் அசையாததுடன் அதிலிருந்து காலாக்கினிபோற் பெருஞ்சோதிப் பிழம்புதோன்றி மேற்பாந்து ஆற்றுறுவெப்பிழைத்தது. அதுகண்ட சமயன் தனது அறிவு நுட்பத்தாலும் தவப்பொலிவினாலும் வணங்கித்துதித்து வேண்டியவுடன் அடங்கி இலிங்கத்தில் ஒடுங்கி மன்னியது. அதுகண்டு வியந்து அரசன் சமயனுக்கு வெகுவிதமான பரிசுகள் வழங்கி கச்சிவீரப் பெருமாளென்னும் பட்டப்பெயரும் அளித்தனன்.

அதன்பின் வேடனுக்கும் வேடிச்சிக்கும் வேண்டிய வசதிகள் அமைத்துவிட்டு, இந்த இடத்தில் அரிய திருப்பணிகள் செய்து உலகிலுள்ளோரனைவரும் அழியாப்பேரின்பம் பெறுமாறு செய்யக்கடவேனென்று சொல்லி அங்கு இடம் அமைத்துத் தங்கி, வெளியூர்களிலுள்ள சிற்பத்தொழில்வல்லோர், நாலளவாளர், கல்லொட்டர்கள் ஆகியோர்களை வரவழைத்து, இனியமொழிகளால் உபசரித்து அங்கு பரமசிவனுக்குத் திருக்கோயில் அமைக்குமாறு கூறி வேண்டிய பொருட்டொகையும் ஆட்சகாயமும் கொடுத்துதவினன் சேரர்பிரான்.

அரசனது பரிசனர்களது ஏவல்வழி அவிடத்துள்ள மரம் செடிகளனைத்தும் வெட்டியழித்து வெளியாக்கி மேடுபள்ளங்களைச் சமன் செய்தனர் நூற்றுக்கணக்கான ஆள்கள். அதுசமயம் அவ்வனத்திற் குடிகொண்ட இரு பெண்தேவதைகள் சமயனென்னும் வாமமார்க்கத்தினனெதிர்நின்று எமது வனத்தை நீவிர் எம் அநுமதி பெறாமல் அழித்தது ஞாயமாகுமோ, எங்களுக்குச் சந்தோஷம் விளையும்படி கோயிலும் பலியும் பூசையும் ஏற்படுத்தவேண்டும் இன்றேல் அநேக தீங்குகளைப்புரிவோமென்றனும் அம்மொழி வினவிய சமயன், அவ்வாறே செய்வேன் அது பின்பு செய்வதாகும் இதுசமயம் சிவபிரான்

திருவாலயம் திருப்பணி நடைபெறுவதற்குத் தடைசெய்யாமலிருப்ப துடன் வேண்டிய உதவியாயுமிருக்கவேண்டுமென்றுறுதிசெய்து அநுமதி பெற்றுக்கொண்டனன்.

பின்னர் மலைகளிலிருந்து கற்கள் பெயர்த்துவந்து, சிற்பர்கள் திருக்கோயில் வேலையை மிகவும் அழகுபெறச் சாத்திரவிதிப்படி முடிவுசெய்து அரசனுக்குத் தெரிவித்தனர். அவன் அதிமகிழ்வுற்று, சுயம்பாக அமைந்த மன்னிலிங்கப்பெருமானல்லாத, ஏனைய, விநாயகர், முருகன், சண்டேசர் முதலிய மூர்த்திகள் யாவும் உரிய இடங்களில் அமைத்து, காஞ்சியிலிருந்து சுயேச்சையாய் வந்து தோன்றிய (அருந்தவச்செல்வி) தபோதக சௌந்தரி அம்பிகை விக்கிரகத்தையும் அன்புடன் தாபித்து, சிவாகமங்களிலும் வேதநூல் விற்பத்தியிலுஞ்சிறந்த ஆதிசைவ வைதிகப்ராமணர்களைக்கொண்டு, குண்ட மண்டல வேதிகைகளுடன் அக்கினி ஓமங்கள் கும்பஸ்தாபனம் பூரணாகுதிகள் செய்து யாகசாலையினின்று பூரணகும்பங்களை உரிய சுபலக்கினத்தில் ஸ்ரீ மன்னீஸ்வரருக்கும் அம்பிகையாதிமூர்த்திகளுக்கும் அபிஷேகித்து மஹாபிஷேகம், அலங்காரம், நிவேத்தியங்கள், தூபதீப சோடசோபசார ஆராதனைகளும் தோத்திரபிரதக்ஷண நமஸ்கார செபம் ஆதிய வழிபாடுகளுமியற்றி, பிராமணர், அரசர், வணிகர், சைவர், சூத்திராதிய அனைவருக்கும் அறுசுவையுண்டி அன்புடனளித்து, சிவமறையோர்முதலனைவருக்கும் வஸ்திரங்கள் திரவிய முதலான பரிசு வழங்கி மகிழ்வித்து, இரவு சுவாமிக்கு விவாகமகோற்சவமுடித்துத் திருவீதியில் திருவுலாச்செய்வித்துச் சிவகிருபைக்காளாயினன்.

அம்மட்டில் நில்லாது எக்காலத்தும் குறைவின்றி மன்னீஸ்வரருக்கு நித்தியநைமித்திக பூசைகள் நடைபெறுவதற்கு வேண்டிய, பூமிகள், பொருள்நிதிகள், பாத்திரபண்டங்கள், பரிசனர்கள், வசிப்பிடங்கள் எல்லாம் சோமான் அமைத்துத் தானும் அங்கிருந்து தெரிசித்து ஆனந்தமுற்றிருந்தான். அங்கு அரசனால் ஏற்படுத்தப்பட்ட ஊர் அன்னிவேடனால் முதல் ஏற்பட்டதால் அன்னியூர் என்று வழங்கலாயிற்று.

யானையினால் இழுப்பித்தபோது ஒளிதோற்றக்கண்டு அனைவரும் மூர்ச்சையடைய சமயன் என்பான் தனது மந்திரவலியினால் வணங்

கிப் பிரார்த்தித்ததால் அடங்கி இலிங்கத்தில் ஒடுங்கி மன்னியபடியா லும் அப்படியிழுத்த குற்றத்தை மன்னித்த காரணத்தாலும் சுவாமிக்கு மன்னீச்சுரரென்று நாமம் வழங்குவதாயிற்று.

பின்பு சமயனென்பவன் தனது வாய்மொழி தவருமல் துர்க் கைமாரிருவருக்கும் தெற்கிலும் வடக்கிலும் கோயில்கள் அமைத்து, திருவுருவச்சிலைகள் பிரதிட்டைசெய்து வைதிகமார்க்கமான சுத்த பூசைகளை செய்து வேண்டும் நிபந்தங்களும் அமைத்துவிட்டு அரசன் பால் விடைபெற்றுத் தன் பதிசேர்ந்தனன். அதுமுதல் மன்னீஸ்வரர் கிருபையினாலும் சோன் கூட்டுறவினாலும் சமயன் கொலைபுலையுள்ள வாமமார்க்கத்தை நீங்கி ஆசாரவொழுக்கமுள்ள தக்ஷணமார்க்கத் தைக்கொண்டொழுகுதலானன். அன்னியென்ற வேடனும் மனைவி யும் எல்லா அருஞ்செயல்களையும் கண்டு அளவிலாப் பேரானந்தம் பொருந்திப் பலநாளிருந்து ஒரு சுபதினத்திலே தூலசரீரத்தைப் பூமி யில் விடுத்துச் சூக்குமவுடல்பெற்றுச் சிவகணங்களுடன் அருட் பெருங்கடலாகிய மன்னிப்பெருமான் மலரடித்துணை சேர்ந்தனர்.

இந்த அன்னியூர் மன்னிநாதர் புராணசரிதத்தை அன்புடன் வாசித்துப்பூசித்து நேசிப்போர் அனைவரும் பேரின்பப் பெருவாழ்வும் சகல நன்மைகளும்பெற்று வாழ்வார்களென்பது பெரியோர் மொழி யாகும்.

முற்றிற்று.

**தெய்வமே துணை.**

உ

கணபதி துணை.

விநாயகர் தோத்திரப்பா.

தந்தமொன்றைத் திருமுகத்திற் காட்டிமற்றோர்
தந்தமொடித் தணிக்கரத்திற் றாங்கியன்பர்க்
கெந்தவிடை யூறறினு மொடிப்பேனென்று
மிச்சைகண்முற் றளித்தருள்வே னென்றுந்தானம்
வந்ததிருக் கரங்கொண்டு காட்டியெங்கண்
மாதவப்பே றாகிப்பொன் மலைபோலென்றுஞ்
சொந்தமுட னன்னியூர்க் கோயின்மேவுந்
துதிக்கைமுகக் கணபதியைத் துதிக்கை செய்வாம்.

---

# ஸ்ரீ மன்னீஸ்வரர்

# தோத்திரப்பதிகம்.

## காப்பு.

வெண்பா.

அன்னிப் பதியிலணி யாலயங்கொண் டோங்குமின்ப
மன்னிப் பெருமான் மலர்ப்பதத்திற்—பன்னிப்
பதிகமொன்று சூட்டவவன் பத்தர்திருப் பாதம்
வதிகவின்றோய் மென்றுகள்கா வல்.

கோச்சகக்கலிப்பாக்கள்.

கங்கைமதி யணிசடையுங் கதிர்த்துவர்வெற் பிசைவடிவுஞ்
செங்கைகளும் பதமலருந் தெரியவந்தாள் சீதான்மெய்த்
தங்கையென விளங்குதபோ தகசவுந்தரிக்குயிலாம்
மங்கையணை யன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (க)

சொல்லவனே பொருளவனே துணையவனே யாதொன்று
மல்லவனே யானவனே யனைத்துயிர்க்கு மின்பளிக்கு
நல்லவனே யானந்த நாடகனே யெல்லாஞ்செய்
வல்லவனே யன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (உ)

முன்னவனே யுல்குதிக்கு முளையவனே யானுணராப்
பின்னவனே யென்னதுளம் பிரிகிலனே மாற்றறியாப்
பொன்னவனே மணியவனே போற்றுமிமை யோர்பலர்க்கு
மன்னவனே யன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௩)

திங்களணி முகமடவார் செம்பொனிசை மண்ணசையா
லிங்களவற் றிடுதுயர்கொண் டேங்குமெனைக் காத்தருள்வாய்
கொங்களவு தாதகியுங் கூவிளமுங் கொன்றையுந்தோய்
மங்களமா ரன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௪)

ஆரணமு மாகமமு மளப்பரிதா யோங்குமின்பப்
பூரணநின் புகழ்ச்சிறப்பே புகன்றுதொழ வெனக்கருள்வாய்
தோரணமும் பூகமும்பூந் தொங்கல்களுந் தோய்மறுகில்
வாரணஞ்சூ ழன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௫)

கலிபுரியுங் கொடுமைகண்டுட் கலங்கிமிக வாடிடுவேன்
பொலியருட்பே ரின்போங்கப் புரிதிருநா ளேதுரையாய்
ஒலிபெறுநான் மறைமுழக்கு முரைநால்வர் பாவிசையும்
மலிவளஞ்சா லன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௬)

கருவிடுவாய் கரும்பிறவிக் கலக்கமலத் தியக்கமற
வுருவிடுவாய் தற்போத முண்மைபெற நாதாந்தத்
தெருவிடுவாய் நினையலதோர் திக்கறியே னுட்புறத்து
மருவிடுவா யன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௭)

களம்பொருந்தும் படிவிடங்கொள் கருணையுளாய்க் கேழைமையேன்
சளம்பொருந்துங் குணங்கொள்ளுந் தகையினதே மிகையன்றுன்
னுளம்பொருந்துங் கருணையென்மட் டொழித்தலென்கண் விழித்தருள்வாய்
வளம்பொருந்து மன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௮)

உந்தித்தேன் பொழியுமல ருந்திக்கே சவன்விதியுஞ்
சந்தித்தேத் திடலரிதுன் றாண்முடியென் றாலடியேன்
சிந்தித்தே னென்பதுதான் றெள்ளியர்க்கு நகையன்றே
வந்தித்தே னன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (௯)

வெயிலணையும் புன்புழுப்போல் வெதும்புமெனை மெஞ்ஞானத்
துயிலணையும் படிதிருத்தாட் டொட்டிலிலேற் றிடுமின்ப
வயிலணையும் பேரருட்கண் ணம்மையருந் தவச்செல்வி
மயிலணையு மன்னிநகர் மன்னிலிங்கப் பெருமானே. (க0)

சுரர்நரர்மா தவமுனிவர் தொண்டுவந்து கொண்டருளால்
வரமுதவு மன்னிநகர் மன்னிலிங்கப் பெருமான்மேற்
சிரவையிரா மானந்த தேசிகன்பொற் றுண்மலர்கள்
பரவுகந்த சாமிபுனை பாப்புகல்வார்க் கருள்வருமே. (கக)

முற்றிற்று.

---

## சந்தக்கவி.

தன்னதாத்தனதானன தனதானு.

பொன்னையீட்டுத லேபொரு ளென்னவாப்பிணி மூடுறு
புன்மைமாக்களுள் வீணினி லலையாதே
பொம்மைபோற்சட மீதினின் மின்னமாப்பணி மேவிசை
பொம்மலாட்டமி ஞர்மய லமையாதே
தன்னையாக்கையின் வேறெனு முண்மைநோக்கம்வி டாதவர்
தம்முள்வாய்த்தசு கோததி மயமாகீ
தண்ணிலாப்புனை வேணியொ டென்முனுய்ப்பிற வாநெறி
தன்னிலேற்றிடு மாறுள மிசைவாயே
அன்னையாய்ப்பிதர் தேசிக மன்னனுப்பா மாநிறை
யண்ணலாய்த்திகழ் பூரண முதல்வோனே
அன்னிவேட்டுவ னீள்பசி யுண்ணவேட்டகழ் மூலமெய்
தம்மைபோற்பொலி காரண நிகழ்வானே
§மன்னைமாட்டமை மாயைசெ யின்னன்மாற்றிடு தேசிக
வண்ணமேற்றெனை யாளருண் மிகையோனே
மண்ணிலேற்றம தாநிக ழுன்னியூர்த்தளி யூடமை
மன்னியீச்சுர னேசிவ பெருமானே.

ஆக கவி கச.

---

§ மன்னை—கழுத்து.

தேவிசகாயம்.

# ஸ்ரீ தபோதகசௌந்தரி
# தோத்திரப்பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

தல்லியரு ளன்னித் தபோதகசவுந்தரமா
வல்லிதிருத் தாளின் மகிழ்ந்தணிபாச் — சொல்லிடுதற்
கானதுணை யைந்துகரத் தானைமுகங் கொண்டவிரும்
வானவன்பொற் ருட்டா மரை.

### கட்டளைக்கலிப்பாக்கள்.

மதிநிகர்த்த முகத்தின் மலர்ந்தவிர் மந்தகாசமு மையுண்டகை தரு, கதியருட்சுக வாரியொப்பாந்திருக் கண்களுங்குரு காரணிக்கை களும், புதியதாமரைப் பூத்துணைப்பாதமும் பொங்குமங்களம் பூத்தி யன்மேனியுந், தநியிதென்கண்முன் ரேன்றுதியன்னியூர் சார் தபோதக சௌந்தர வல்லியே. (க)

பொன்னைநாடிமண் ணுடிமின் ஞர்மயற் போகநாடிப்பின் பாகவ யோகிகத், தென்னைநாடிடு வோமென் றிருந்திறந் தேமனுடிட மெய்துநர்க் கூடிடா, துன்னைநாடித் துதித்தரு குண்மையன் புற்று ளார்புடை யொன்றிட நாடுவேன், றன்னைநாடி யருள்புரியன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (உ)

சங்கையற்ற பிறப்பிறப் புற்றுளந் தட்டழிந்திடு வேற்குநின் ஞானமெய்க், கொங்கையின்பச் சுவைதரி ளுட்டணிக் கொங்கையின் பங் குளிர்தாச் செய்குவேன், மங்கைநாயகி யேமன்னி யீச்சுரன் வாம நாயகி யேயருண் மாயவன், றங்கையேசற் றிரங்குதி யன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (ங)

பொக்கமாருடற் புக்கவ மேதினம் போக்கிநெஞ்சகம் புண்பட் டழுங்கிய, துக்கம்போதுமிம் மட்டு மினியுநீ சோதியாதருட் சோதி யுருவுடன், மிக்கபேரரு ளாலென்கண் முன்வா வேண்டிப்போற்றி னேன் விண்ணப்ப மேற்றருள், தக்கமாதவர் தோயணி யன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (ச)

பாவகாரிக ளுங்கமிக் கச்சுறுர் பஞ்சபாதகம் பண்ணினரு ணமைதோய், தேவகாரியஞ் செய்குநர் வன்மிடித் தீமைகொண்டுட் டியங்கி மயங்கியே, யாவகாரிய காரண மாதவ மாற்றுமாற்றலற் றுரதி யாய்கொலோ, சாவகாசமிக் குற்றதெனன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (ரு)

விரும்பிடாப்பொய் வினைவினை வீந்துநின் மென்மலர்ப்பத மேன் மது வார்தருஞ், சுரும்பில்வாழ நினைத்தய ரென்னவாத் தோயநல்க வென் றுயகத் தூடரு, ளரும்பிடாதிருந் தாயிதை யேழையே னுர்க் கெடுத்துரைப் பேனய ஞர்காந், கரும்பிரார்த்த மொளித்தரு ளன்னி யூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (சா)

சீரணித்திடு மெய்கொடுன் மெய்யருட் சீரணித்துறச் சேர்தவஞ் செய்புமிக், காரணித்தகை பெற்றிட வெண்ணுமென் னுவலுன்றனக மறி யாததோ, காரணித்திரு மேனிகண் டேழுகில் கண்டதோகைக் களிப்புற வந்தருள், தாரணித்தலை யாநிக ழன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியே. (எ)

இட்டந்தோய்பொது மாதர்பொய் மாயையா ரின்பவாரியுண் டேயெழு மேகமாங், குட்டந்தோய்முத்துத் தாண்டவ னின்னருள் கொண்டுவாசகம் விண்டவன் போன்றவிர், நட்டந்தோய்பா மானந்த மேல்வெளி நண்ணினுனிங்கு நாயடியேற்குமச், சட்டந்தோய்தாநல் கணியன்னியூர் சார்தபோதக சௌந்தரவல்லியே. (அ)

அரணமாமைந் தொழிற்புரி கத்தரு மம்மைநின்மெய் யருளசை வற்றொரு, திரணந்தன்னை யசைக்கவொண் ணுதெனச் செப்புமாரண சேகரமென்றிடி, விரணநெஞ்சகத் தேன்சிற்றறிவுகொண் டென்செய் துன்கழ லெய்துவன் கைவிடேல், சரணமாயினன் சத்திய மன்னியூர் சார்தபோதக சௌந்தரவல்லியே. (கூ)

சத்தியத்தகை யோகலப் போபொய்யோ தாயென்னுள்ளந் தழைத்துநீ தந்தவா, துத்தியஞ்செய் துணைப்பணிந் துண்மையாந் தொண்டனுக்கெனச் சொற்றிரக்கின்றனன், நத்தியன்பர் விழைந் தவை யாவையு நல்குமன்னையிந் நாயடியேனெனைத், *தைத்தியச்சுதன் போன்றுகொ ளன்னியூர் சார்தபோதக சௌந்தரவல்லியே. (க0)

மாணுலாவிமை யோர்முனி வோர்தினம் வாழ்த்துமெய்யருண் மன்னிலிங் கேசமெய்த், தாணுவாமம் பொலிந்திசை யன்னியூர் சார்தபோதக சௌந்தர வல்லியாஞ், சேணுலாவு மருந்தவச் செல்வி மேற் சிரண்வாமானந் தன்றிருந் தாட்டுணை, பேணுகந்தசா மித்தவன் சூட்டுபாப் பேசுவார்சுகப் பேறுடை யார்களே. (கக)

## முற்றிற்று.

தன்னதத்தனத் தனந்தனத் தய்யத் தனதானு.

கன்னற்றனுப் பெறுங்காக் கள்ளத்
தன்மைப்பயற் குடைந்துமிக் கல்லற்
கன்மத்தினுட் படிந்துகெட் டெள்ளத் திரியாதே

கண்ணெட்டையுற் றவன்றுணர்க் கையிற்
சென்னிக்கணக் கரந்தாற் சொல்லிக்
கண்ணிச்சடத் துழன்றிளைப் பெய்தற் கிசையாதே

தன்னத்தமுற் றிடுங்கயிற் றைவிட்
டென்மெய்ப்பிரித் திடுங்கணக் கெல்லைத்
தன்மப்பெயர்ச் சுரங்கனுக் கொல்கித் தவியாதே

சன்மப்பிணிப் பொழிந்தருட் செல்வத்
திண்மைச்சிறப் புறும்படிக் கைதிற்
றண்மைப்பதத் திடம்புகச் செய்தற் கெதிர்வாராய்

சின்னச்சுதைக் கிணைந்தொர்நற் செய்யுட்
பன்னித்துதித் தவன்பினிற் பையச்
சென்னித்தியச் சுகந்தமெய்த் திவ்யப் பதமாதே

* தைத்தியச்சுதன்—அம்பிகையாற்காக்கப்பட்ட ஓர் அசுரச்சிசு.

செம்மைத்துவர்க் கவின்கனிக் கொவ்வைப்
பண்முத்தவைப் பிஞெனிறணித் துய்மைத்
தெண்ணித்திலத் தொழுங்கினப்பல்வத் திரதேவீ

அன்னத்தினுக் கவிர்ந்தநற் கள்விற்
பொன்னிற்பதித் தணிந்திடற் குள்வைத்
தன்மிக்கவர்த் தணந்தமெய்க் கொள்ளேச் சுகவாழ்வே

அண்ணித்தகத் திலென்றுமெய்ப் பில்லைப்
பென்னப்பதத் தொழும்பருட் கொள்பொற்
பன்னித்தலத் தருந்தவச் செல்விப் பெரியாளே.

ஆக கவி உஎ.

---

முருகக்கடவுடுணை.

## சண்முகக்கடவுள்

## சந்தப்பாக்கள்.

தன்னனு தானதத்த தனதானு.

கன்மமா ருதிசைக்கு மின்னலார் மாயைவைத்த
கண்ணிநேர் தேகமுற்ற சிறியேனீள்

கன்மனே பாவனெப்பி லுன்னைநேர் ஞானமிக்க
கண்ணிலேன் யானெடுத்த வுடல்வீணே

தன்மநீண் மேனிபெற்ற புண்ணியா போருட்கொள்
சண்முகா நீயிரக்க மிகையாலே

*சன்மமாய் வானதற்ற நன்மைதோய் வானமுத்தி
தன்னினு யேனைவைக்க நினைவாயே.

வன்மமார் வேடர்பெற்ற கன்னிபா லாவன்மிக்கு
மன்னுபே ராடலிட்ட முருகோனே

---

*சன்மம் மாய்வு—செனனமரணம்.

வண்ணமார் தோகையிற்க ணெண்ணிலா தேசிறக்கு
மஞ்ஞைவா காகடப்ப மலர்வாகா

அன்மகா மாயையிற்செ லென்னையா ளாகிடச்செ
யன்னேரே ராகுமிக்க குருநாதா

அண்மையா யாவருக்கு முண்மைதோய் பேறளிக்க
அன்னியூர் மீதிலுற்ற பெருமாளே.

தன்னத்தன தானதன தனதான.

பொன்னிற்பொலி தேசாருமுன் மின்னற்கதிர் வேலோடிரு
¶புண்ணித்தல்வி டாதேதொழு நசையேனீள்

புன்மைப்புவி மீதாமயல் பின்னிக்கெடு வார்போன்மிகு
புண்ணுற்றவ மேவாடிட விடலாமோ

மன்னிப்பரி தோதோய்பிழை யென்னிப்படி நாயேன்மிசை
வன்மித்திட னீயேவிடி லெவராள்வார்

வன்னச்சிகி மீதேறியென் முன்னுற்றியன் ஞானாகர
வண்ணப்பத வாரீசமெய் திடவாள்வாய்

கன்னிக்குற மான்மேனசை நண்ணிப்புன மீதாயவள்
கண்ணுற்றிசை வார்சேவைநல் கியகோவே

கன்னற்சிலை வேளுனுறு மொண்மைத்துவர் நேர்மேனிய
கண்மிக்கமை கூதாளநன் மலர்மார்பா

அன்னித்திரை யூடேயுமொர் நன்மைக்கன வோரேனென்னை
யண்ணித்தய வாலாள்குரு பரநாதா

அன்னக்கொடி யோனாண னென்னத்திகழ் வார்மேவிய
அன்னிப்பதி வாழ்வேசுரர் பெருமாளே.

ஆக கவி உகூ.

---

¶புள் நித்தல்—சேவல் மயிலாகிய பறவைகளை நிதமும்.

ஸ்ரீமந் நாராயணாயநம.

# வரதராசப்பெருமாள் பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

வாசப் பெருமாள் மகிழன்னி யூர்கொள்பிர
காசப் பெருமாள் கரிவரத — ராசப்
பெருமாள் பதிகமன்பிற் பேசத் துணையாய்
வருமாள் பதிதாண் மனம்.

### அறுசீர் விருத்தங்கள்.

காரார்மணிமே கத்திலணிக் கமலம்பூத்த தகையிலவிர்
சீராரவய வத்தொகையுந் திகழைம்படையுங் கமழ்துளவத்
தாரார்மார்புந் துலங்கவிரு தாயர்நடுவிற் கருடன்மிசை
வாராய்விழிநே ரன்னிநகர் வரதராசப் பெருமாளே. (க)

தளந்தோய்கமலன் றனையுந்தி தன்னிலளித்தோய் தாள்கொடுல
களந்தோய்பின்னும் வாய்மலர்கொண் டருந்துவோய்க்கிங் கடிச்சிறியே
னுளந்தோய்ந்தோரைம் புலமாயை யுண்ணலரிதென் றிடப்போமோ
வளந்தோய்கோயி லன்னிநகர் வரதராசப் பெருமாளே. (உ)

முதலைவாய்பட் டயர்ந்தாதி மூலமெனும்யா னையின்மொழிபோல்
திதலையணிக்கற் பணிக்கொங்கைச் செல்வியாருந் துரோபதைதன்
*விதலைமொழிபோற் செந்தமிழால் விண்டுதுதிசெய் யடியவனேன்
§மதலையுவந்தா ளன்னிநகர் வரதராசப் பெருமாளே (ங)

---

* விதலை — நடுக்கம். § மதலை — மழலைமொழி.

இரக்கமிலராய் முன்றவத்தோர்க் கிடுக்கண்மிகவே புரிந்திடும்வல்
லரக்கர்குலத்தை வேரறவே யரக்குமாழி யவிர்ந்தருள்செங்
கரக்கஞ்சமுளாய் பொய்மிகவே கலிக்குங்கலிகாலத்திலிவண்
வரக்கண்மலரா யன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௪)

பொன்னேபொருளென் றீட்டியதாற் பொருந்தும்பயனும் புகழுமுறூர்
கொன்னேயழிவா ரிறுமாக்குங் கோலாகலம்பார்த் துளங்கொதித்தே
னென்னேயறியார் போன்றிருந்தா யாரேயுனையற் றொழித்திடுவார்
மன்னேமணியே யன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௫)

பத்திப்பெருக்கு மிசைப்பலிதப் பாடற்பெருக்கு மழிவில்புகழ்ச்
சித்திப்பெருக்கு மின்பமுற்றுஞ் சேரப்பெருக்கு மகிமையருண்
முத்திப்பெருக்கு மெனக்கருள்வாய் முகுந்தாகொங்கு நாட்டிலிசை
மத்திப்பெருக்கா ரன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௬)

சாட்சித்தகையுற் றென்னுள்த்துட் டழைத்துமொளித்த நின்னருளென்
†காட்சியறியுங் காட்சிதரக் கருதிலெவரோ யுனைத்தடைசெய்
யாட்சியுடையார் நின்னருளுக் கடங்காப் பொருளொன் றுளதேயோ
மாட்சிநிறைவா ரன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௭)

புளிக்குள்ளமைந்த காரிதவப் புதல்வன்கண்டு களிக்கமன
வெளிக்குள்ளமைந்தெங் கணுமாகி விளங்கும்வைகுந் தஞ்சிறியேற்
கொளிக்குந்தகைதா னென்னடியேற் குளவோர்ந்திசைய வுரைசெய்பரி
மளிக்குந்துளவோ யன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௮)

வீணிற்செருக்கி யெனக்கயலாய் வேறோர்கடவுள் யாவருளரர்
காணிற்செருச்செய் திடுவனெனுங் கனகன்காண வவன்றன்மனைத்
தூணிற்றிகழ்ந்தன் னவனெதிராய்த் தோன்றல்போன்றென் னோர்குலவின்
மாணிற்கறுமோ வன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௯)

ஆழ்வார்புகலு மருமறையா மமுதுண்டருணின் செவிவாய்க்குக்
கூழ்வார்த்திடல்போ லிங்கடியேன் கூறுந்துதியுங் கொள்வாயோ
ஏழ்வார்தரங்கப் புவியுண்டாய்க் கேதுகசப்ப தேற்றின்ப
வாழ்வார்தரச்செய் யன்னிநகர் வரதராசப் பெருமாளே. (௧௦)

---

† காட்சி — கண்.

பணிவார்துதிப்பார் நினைத்திடுவார் பலர்க்குமின்பப் பரமபத
மணிவாசலைக்காட் டன்னிநகர் வரதராசப் பெருமாளைத்
துணிவார்சிரவைத் தொண்டருளத் துணையாமிராமா னந்தனடிப்
பணிவார்கந்த சாமிதுதி பாவோதுநர்க்குண் டிகபரமே. (௧௧)

முற்றிற்று.

ஆக கவி ௪௧.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

---

குருவே துணை.

குமாரபாளையம் வட்டமலை

# தண்டபாணிதோத்திரப்பதிகம்.

## காப்பு.

வெண்பா.

தொண்டணியா ரன்பரினந் தோய்குமர பாளையம்வாழ்
தண்டணிகை சால்பரம சற்குரவன்—கொண்டணிபா
நல்குமிரா மானந்த நாதனடி யாரடியார்
புல்குதல வாசப் பொடி.

எழுசீர் விருத்தங்கள்.

தண்டுதோய்கரமுங் கோவணப்பொலிவுந் தழைத்தபேரருளுளக் கடலின், மொண்டுபெய்விழியு மனங்கவர்ந்தருள்புன் முறுவலும்வேலும் வெண்பொடிதோ, யொண்டுவர்ச்சோதி வடிவமும்பதமு முளம்புறத் திலங்குசீ ருணர்த்திப், பண்டுதோயன்பர் நிலையருள்குமார பதிப்பதித் தண்டபாணியனே. (௧)

உனக்குரித்தாக நாயினேன்விடுத்த வுளத்தினைவேளெனுநாமந், தனக்குரித்தாகக் கொண்டவன்மாதர் தனக்குறித்தாக்குற வைத் தான், சினக்குறிப்புன்னுட் காட்டியன்னவனைச் செயங்கொடுசிறிய னேறகருள்சொற், பனக்குறிப்புண்மை யுணர்த்துவாய்குமார பதிப் பதித்தண்டபாணியனே. (௨)

விதிமுறைநின்பா லருளுபதேசம் வினவியும்பிரமனுன் புகழ்ச்சீர், துதிமுறையுடையே னெனக்குமிவ்வுலகத் தூக்கமார்விதியிடத் துணிந்தான், மதிமுறைமனையாம் வாணிபோன் றறிவுள் வாய்ந்திலனே கொனீ யருளிற், பதிமுறையின்பம் பெறவருள்குமார பதிப்பதித் தண்டபாணியனே. (ங)

வாசவன்பதமு மற்றமைவோராம் வானவர்பதங்களு முனது
நேசவன்படியார் தம்பதத்துகட்கு நிகர்க்கிலாதறிந்துமென் மாய
நீசவன்மனம்பொய் யுலகவாழ்க்கையினி னிலைபெறச்சுழல்வதென் செய்கேன்
பாசவன்மலநோய் கெடவருள்குமார பதிப்பதித்தண்டபாணியனே.

உனைத்துதித்துருகு மன்பதேபெரிதென் றுவந்தனன் புரியிலென் போத, முனைத்துதிர்ந்திடச்செய் கின்றதோராயோ முருகனேமுறை கொலோ சுரும்பர், கனைத்துதித்திடுதே னருந்துநீபாவென் கவிகணீ மதித்திலையேயோ, பனைத்துதிக்கரத் தன்றுணைவனேகுமார பதிப்பதித் தண்டபாணியனே. (ரு)

கலியுகவரத னீயெனவுலகோர் கருத்துளேநம்பிமிக் கேத்திப்
பொலிவரம்பெற்று ருன்னையானகண்ட பூரணனெனத்துதித் தலினால்
மலிவுறுமற்றோர் வன்மையுன்னுள்ள மருவியபான்மையி னாலோ
பலிதமாரின்பெற் கருள்கிலேகுமார பதிப்பதித்தண்டபாணியனே. (சு)

வரைதொறுநடஞ்செய் திடுமுனதடிகண் மனத்தகத்தோவில தமைத்துத், திரையறுகடல்போன் றமைந்துநெக்குருகித் தியானமா தவமிகப் பெருக்கிக், கரையறுபரமா னந்தமாவெளியிற் கலந்திடக் கடைக்கணித் தருள்வாய், பரைவடிவாம்வேற் படையுளாய்குமார பதிப்பதித்தண்டபாணியனே. (எ)

ஒட்டையொன்பதுவாய்க் கோட்டையேற்றிரப்பித் துயிர்க்கும் பின்னோட்டையே தருமிக், கூட்டையிங்கவமே காத்துலகெனும் பொய்க் கோரணிக்கூத்தினுட் கன்மச், சாட்டையாட்டிடுபம் பரத்துழல்வேற்குத் தகுசிதம்பரத்தமைத் திடுமெய்ப், பாட்டைகாட்டிட முன் வந்தருள்குமார பதிப்பதித்தண்டபாணியனே. (அ)

துற்குணவாகத் திற்கிரைதேடித் துடிதுடித்தயரடி யேனை
நிற்குணவாகப் புரிபரிபூரண நிற்குணஞானவாழ் வருளச்
சிற்குணவடிவங் காட்டுதியருளாற் றேர்விடுசாரதி யாகிப்
பற்குணற்கருள்வோன் மருகனேகுமார பதிப்பதித்தண்டபாணியனே.

நிந்தித்துச்சமர்செய் கொடுங்குணச்சூர னெஞ்சநெக்குருகிட விமையோர், சந்தித்தங்கஞ்சும் விசுவரூபத்தின் றரிசனமளித்தனை தினமும், வந்தித்துப்போற்று மெனைக்கன்மமாயை மலத்தினுண்மூழ்க வைத்தனைநிற், பந்தித்தன்முறையோ வருள்புரிகுமார பதிப்பதித் தண்டபாணியனே. (கo)

சேயனுமாவாய் தூயனுமாவாய் சிவனுக்குச்செகமெலா மளிக்குங்
காயனுமாவா யொன்றுமில்பரமா காயனுமாகுவை நீசெய்
மாயமாமகிமை யுணர்வதென்புன்மை மதிகொலோவருளின்முன் வந்து
பாயநல்குவதுன் பரஞ்சரண்குமார பதிப்பதித்தண்டபாணியனே. (கக)

சிறிதினுஞ்சிறிய பொருளெதென்றகத்துட் டெளிவுறினுன்னை யல்லாது, பிறிதிலையாக முடியுமிவ்வண்ணம் பெரிதினும்பெரியது மறிஞ; ரறிதாகிற்பா யறிவிலேனுன்றே டணைந்திடவிரும்பினே னென்னைப், பறிகொடுத்திடச்செய் தேற்றருள்குமார பதிப்பதித்தண்டபாணி யனே. (கஉ)

தன்னைநேர்சிரவைப் பதியிராமானந் தப்பெயர்த்தேசிக னாகி, யென்னையாண்டன்னிப் பதிச்சிவன்கோயி லெழிற்பணிசெய்கறுப்பண் ணன், றன்னையாண்டிடக்கு மாரபாளையத்திற் றழைவட்டமலைத்தண்ட பாணி, பொன்னைநேர்புயந்தோய் கந்தசாமியன்யான் புகல்கவிபலநலந் தருமே. (கந)

முற்றிற்று.

---

## சந்தக்கவி.

தத்தனதத்தந் தனனதானன தனதானா.

மற்கட மெய்க்கண் காரவு நேரென
முற்படல் பற்றுங் குரூர நீடியன்
மற்சர வர்க்கங் களூடு போயலை கடல்போலே
வட்டணை சுற்றுங் குலால னேவிய
சக்கர மொக்குந் தவாத தீமைசெய்
மட்டிம னத்தின் சுபாவ மாறியு னருளாலே

சொற்கட ருக்கங் களோய மேலமை
மத்திநி லைக்கண் குலாவு ஞானியர்
சுட்டற நிற்குஞ் சுகாநு பூதிமெய் பெறுமாறே

துப்பணி வெற்பின் சமூகம் யாவினு
நிர்த்தமி யற்றுஞ் சரோச தாண்மலர்
துட்டன் முடிக்கண் டயாவி னீபுனை தாவாராய்

கற்கட முற்றங் குலாவும் வேடர்செய்
நற்றவ மொக்குங் குமாரி மேனிகொள்
கட்டழ கைக்கண் டவாவி யாடல்செய் முருகோனே

கற்சிறை வெட்டுஞ் சுரேசன் மாநக
ரிற்குடி புக்கும் பரேவன் மேவிய
கட்கடை வைக்குங் குகாசி காவள மிவர்கோவே

வற்கமு டுக்குந் தபோவி ராகியர்
சித்தநி கர்த்தென் றனாடு மாணவிர்
வத்துவி ளக்கஞ் சொரூப நீர்தரு குருநாதா

மட்டறு மெய்ப்பண் பெலாமெய் தாவல்கொள்
பத்தர்சி றக்குங் குமார பாலைய
வட்ட மலைத்தண் டபாணி யேசுரர் பெருமாளே.

ஆக கவி ருகூ.

---

## வாழி விருத்தம்.

கொங்கவிரன் னிப்பதிமன் னீசர்வாழி
குளிர்கருணை யருந்தவச்செல் வித்தாய்வாழி
துங்கவிநா யகன்சண்முகக் குமரன்வாழி
தோய்ந்தசண்டே சுரன்முதலாந் தொண்டர்வாழி
சங்கணிச்சக் கரவாத ராசன்வாழி
சார்குமர பாலையத்தெம் சாமிவாழி
மங்கலிலாப் புகழ்க்கறுப்ப மகிபன்வாழி
மங்களமுற் றுலகமுற்றும் வாழிவாழி.

குருபாதமேகதி.

---

உ

கணபதி துணை.

# மேல்கிணற்று விநாயகர் தோத்திரப்பதிகம்.

## காப்பு.

### வெண்பா.

கேழ்த்துவர்க்குன் றாமேல்கிணற்றுவிக்கி னேச்சுரன்சீர்
வாழ்த்துதுதிக் கென்றும் வரம்பிலின்பத்—தாழ்த்துமவன்
வேதமுடி மீதில் விளங்குமுடி யானதிருப்
பாதமலர் சிந்தையுள்வைப் பாம்.

### எழுசீர்விருத்தங்கள்.

அம்புலியரவங் கடுக்கையங்கண்ணி யதிரலைக்கங்கையஞ் சடையுஞ்
செம்புகாவிருந் தும்பிமாமுகமுஞ் சித்திபுத்திகளணை மார்புங்
கொம்புமோதகம்பா சத்தொடங்குசமுங் கொள்கரங்களும்பதங்களுமொண்
கிம்புரிக்கோடும் விளங்கவந்தருண்மேற்கிணற்றுவிக்கினேச்சுர மணியே.

உன்னருட்சோதி வடிவுளம்பதித்தள் ளுறவாக்கிசைகொளுன்
ணிசையே, பன்னவானந்த நீரிருவிழிகள் பனித்துடனனைக்கநீ
பணிப்பாய், *பன்னகஞ்சலதி யுடைப்புவிசுமக்கும் பன்னகப்பந்தன
வயிற்றாய், கின்னமுற்றொழித்தன் பரைப்புரந்தருண்மேற் கிணற்று
விக்கினேச்சுர மணியே. (௨)

இல்விடமுற்று மில்விடமென்ன விரணியந்தாணிய மாதி
புல்விடக்குலத்தை விளக்கிடுமிசைச்சற் புத்திரப்பேற்றுடன்பொலிந்து
மல்விடுமாயை கன்மமாதியினால் வாடுறாதுன்னருட் படையாற்
கெல்லிநின்பதத்தெய் துறவருள்வாய்மேற் கிணற்று விக்கினேச்சுர மணியே.

---

* பன்னகம் — பல் நகம் பலமலை.

குஞ்சரமுகத்தெம் வள்ளலுன்கமலக் குளிர்பதத்துணையிராப் பகலும் நெஞ்சகத்தமைத்து வழிபடுமன்பர் நிகரில்பொற்பதம்பொலி பொடியே வஞ்சகப்பிறவி நோய்க்கிடுமருந்தாம் வாய்மைகண்டவர்பணி புரியக் கிஞ்சலுன்னருளேக் கெனக்கமைப்பாய்மேற் கிணற்றுவிக்கினேச்சுர மணியே.

பொற்கலனணியுங் கமலேசெய்தக்கன் பொருவில்வன்பிணியெதிர் பொருந்து, முற்கலமுனிமெய்க் காற்றினுலறவி மோசனம்புரிந்தரு ளுன்சீர், கற்கலனிருதாண் மிசையறுகிட்டுக் கண்கணீர்சொரிந்துனே வலஞ்செய், கிற்கலனெனினு முன்னடைக்கலமேற் கிணற்றுவிக்கி னேச்சுர மணியே. (ரு)

அணிபொலிசந்தி ராங்கதனுருக்கு மாங்கதனுமா சர்கள்போல் திணிபொலியுள்ளக் கற்புமிக்கமைசி தேந்திரியத்தகை யளித்துன் பணிபொலிபூசை யர்ச்சனைதியானம் பயின்றுளங்களித்திட நின்கிண் கிணிபொலிபதமென் சிரத்தமைத்தருள்மேற் கிணற்றுவிக்கினேச்சுர மணியே.

அறுகிலதொருநா ளாற்றுவன்னியிலே யர்ச்சனையமைபயன் கொண்டு, வெறிமலர்க்குழற்கீர்த் தியின்மகனுவி மீண்டுறப்புரிதல்கண் டுவந்து, குறிகுணம்பொல்லே னுன்னையர்ச்சிங்குங் கொற்றமார்பத்தனு யினனெனன், கிறியொழித்தின்ப நெறிபுகுத்தருள்மேற் கிணற்றுவிக்கி னேச்சுர மணியே. (எ)

மருமலர்ச்சோலை நிறையணிக்காசி மாந்தர்யாவருங்களி கூர, வொருதினத்துற்ற மனேதொறுமனந்த முருவமைந்துண்டருள் புரிந் தாய், பருவரலுறுமென் கண்கண்முன்பொருகாற் பார்க்கவந்தாயிலே யென்னே, கிருபைவாரிதிநிற் கெளியனேதுவன்மேற் கிணற்றுவிக்கி னேச்சுர மணியே. (அ)

மேருவின்மிசையைந் தாமறைவியாசன் விளம்பிடக்கோடுகொண் டெழுதிச், சீருறவிரும்புங் கருணையங்கடலாஞ் சிந்தூரமுகப்பெரு மானே, பாருறுமயக்கத் தலேக்குமென்சிரந்தோய் பங்கயனெழுத்தினே கின்பங், கேருகப்பதங்கொண் டழித்தருள்வாய்மேற் கிணற்றுவிக்கி னேச்சுர மணியே. (கூ)

பண்ணியபூசைப் பயன்கள்கைமீதிற் பலிப்புறக்காண்டலிற் பார்மேல், நண்ணியபலரு மகங்கனிந்தினிமை நயந்தநைவேத்தியத் திரளும், புண்ணியதீர்த்த மகிமையிற்பொங்கும் பொங்கலுமிட்டர்ச்சித்தேத்திக், கெண்ணியநலம்பெற் றிடவிளங்கருண்மேற் கிணற்றுவிக்கினேச்சுர மணியே. (க0)

பாவுமன்புடையார்க் கிகபரத்தமையும் பாக்கியம்யாவையு மருளிக், கிரமநன்னெறியிற் புகப்புரிந்தருண்மேற் கிணற்றுவிக்கினேச்சுர மணியைக், காவறுபரமா னந்தவாழ்வமையுங் கணத்துறவருள்செய வேண்டிச், சிரவைவாழ்கந்த சாமியேத்தியதுத் தியஞ்சொல்வார்பயன் கொள்வார் திரமே. (கக)

முற்றிற்று.

---

## வாழி வெண்பா.

பார்வாழி மேல்கிணற்றின் பாலமைவி நாயகன்மெய்ச்
சீர்வாழி யங்கண் தினம்பணிசெய்—வார்வாழி
யந்தணரான் கற்பா ரரிவையர்கண் மாரிமெய்மை
சந்ததமும் வாழி தழைத்து.

## தெய்வமேதுணை.

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்.

உ

சிவமயம்.

# அன்னியூர்ச் சிலாசாசன ஆராய்ச்சி.

இராவ்சாஹிப்
கோவை திரு. ம. இராமச்சந்திர செட்டியார், B. A., B. L., F. R. G. S.,
அமைச்சர், கோவைத் தமிழ்ச்சங்கம்,
தலைவர், கோவை ஜில்லா கல்விச்சங்கம்,

அன்னூர் என்று இப்பொழுது பெயர் வழங்கும் ஊர் முன் அன்னியூர் என்றும், அதற்குமுன் மன்னியூர் என்றும் பெயர் வழங்கி வந்தது. இவ்வூரில் இருக்கும் சிவாலயம் தற்காலக்கொள்கைப்படி பாடல் பெருதது என்றிருந்தபோதிலும், இவ்வாலயத்திலுள்ள சிலாசாசனங்களால் இவ்வாலயம் மிகப் பழைமையானதென்றே சொல்ல வேண்டும். இவ்வூர்ச்சிலாசாசனங்களை முதல் முதலில் நான் கண்டபோது இவைகளைப் பிரதி எடுத்தால் அதிக பலன் உண்டு என்று நினைத்து, அதிகாரிகளுக்கு எழுதினபோது அவர்களும் தயவுகூர்ந்து அவைகளுக்குப் பிரதிகள் எடுத்திருக்கிறார்கள். அவைகள் 1922-ம் வருஷத்து 581 முதல் 636 வரை உள்ள 56 கல்வெட்டுகளாகப் பதிப்பித்திருக்கிறார்கள். இக்கல்வெட்டுகள் 1000 கி. பி. முதல் 3 நூற்றாண்டுகள் வரை பரவியிருக்கின்றன. அவைகள் பெரும்பான்மையாகக் கொங்கு சோழர்கள் காலத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து பார்த்ததில் பல செய்திகள் கிடைத்தன. அவைகளை எல்லாம் திரட்டிப் பல பிரிவுகளாகப்பிரித்து அவற்றின் கருத்துகளை இங்கே எழுதுவோம்.

1. நாடு :—

கொங்குநாடு 24 பிரிவுகளைக்கொண்டது. அவைகளில் மேற்குப் பாகத்தில் உள்ள பிரிவுக்கு ஆறைநாடு என்று பெயர். இதன் விவரத்தைக் "கொங்கு மண்டல சதகம்" "சோழன் பூர்வ பட்டயம்" என்ற நூல்களில் காணலாம். இவ்வாறைநாடு கோயமுத்தூர்

தாலூக்காவில் ஒரு பாகமும் அவிநாசி தாலூக்காவில் ஒரு பாகமும் கொண்டதொரு பிரதேசம். இவ்வாறைநாட்டில் பல பாகங்கள் உண்டு. அவைகளில் நொய்யல் நதிக்கு வடபுறத்தில் உள்ள பாகத்திற்கு வடபரிசாரநாடு என்று பெயர். இந்நாட்டினுடைய வருணனை அவிநாசிப்புராணத்தில் இளையான்கவிராயர் வெகு அழகாகப் பாடியிருக்கின்றார். நமது அன்னியூர் வடபரிசாரநாட்டில் உள்ளது என்று இவ்வூர்க்கல்வெட்டுகள் பல கூறுகின்றன.

## 2. நாட்டின் பரப்பும் உட்பிரிவுகளும் :—

வடபரிசாரநாடு தற்கால அவிநாசித்தாலூக்காவின் கீழைப்பாகம் கொண்டதாகும். அந்நாட்டில் அடங்கியிருந்ததாகக் கூறியிருக்கும் ஊர்களின் அமைப்பைப் பார்க்கும்போது, அந்நாடு நொய்யல் நதிக்கு வடக்கேயும், கோவை மேட்டுப்பாளையம் இருப்புப்பாதைக்குக் கிழக்கேயும், புளியம்பட்டிக்குத் தெற்கேயும், அவிநாசிக்கு மேற்கேயும் உள்ள எல்லைப்பிரதேசத்தைக் கொண்டதென்று கூறலாம். ஆனால் எல்லாக்காலங்களிலும் இதே எல்லைகளை இந்நாடு கொண்டிருந்ததோ என்பதில் சிறிது ஐயம் உண்டு. வடக்கே பவானிக்கரையோரமாக உள்ள நாட்டிற்கு ஒடுவங்கநாடு என்று கொங்குமண்டல சதகத்தாலும் கல்வெட்டுகளாலும் அறிகிறோம். ஆகவே, அப்பிரதேசத்தை விட்டுவிட்டால் மீதியிருக்கும் நிலப்பாகம் அவிநாசித்தாலூக்காவின் கீழ்ப்பாகத்தில் பாதி நிலப்பரப்பு எனலாம். இனி இவ்வடபரிசார நாட்டில் சில உள்நாடுகள் இருந்தன என அறிகிறோம். இவ்வூர்க் கல்வெட்டுகளால் வெள்ளாநாடு என்பதொன்று இருந்ததாகக் காண்கிறோம். மேலும் மற்ற கல்வெட்டுகளால் பழனநாடு என்பதொன்றும், கொங்குமண்டலசதக ஊர்த்தொகையினால் கோவங்கநாடு என்ற மற்றொன்றும் உள்நாடுகளாக இருந்தனவென்றும் அறிகிறோம்.

## 3. ஊர்கள் :—

வடபரிசார நாட்டில் பல ஊர்கள் இருந்தனவென்று கல்வெட்டுகளால் அறியலாம். அவைகளாவன :—

(1) மன்னியூர் (தற்காலம் அண்ணூர்.) (581/22 முதல் 636/22 வரை)

(2) கோவில்பாளையம் என்னும் கவயன்புத்தூர் (639/22)

(3) இடிகரை (5/23)

(4) கள்ளிமடை (640/22)

(5) சேவூர் (613/22)

(6) கங்கைப்பள்ளி (613/22)

(7) வெள்ளைப்பாடி (613/22)

(8) சத்திமங்கலம் (632/22)

(9) கருவலூர் (591/22)

மேலே சொன்ன சத்திமங்கலம் ஒடுவங்க நாட்டில் இருந்ததாக வேறு கல்வெட்டுகளால் அறிகிறோம். அவ்விதமே கருவலூர் வழலையூர் நாட்டில் இருந்ததாகவும் தெரிகிறது. ஆனால் வழலையூர் நாடு வடபரிசார நாட்டின் உட்பாகமாக இருக்கலாம். மேலே கண்ட ஊர்களைத்தவிர வேறு ஆலயச் சாசனங்களால் அடியில்கண்ட ஊர்களும் வடபரிசார நாட்டில் இருந்தன என அறிகிறோம்.

(1) கூடலூர் (34/23)

(2) காரைப்பாடி (647/22)

(3) கொற்றமங்கலம் (13/23)

(4) முதுக்கரை (16/23)

இத்தனைப் பெயர் பெற்ற ஊர்கள் இந்நாட்டில் இருந்தபடியால் இந்நாடு பண்டையக் காலத்திலேயே குடிப்பெருக்கம் வாய்ந்த ஒரு செழுமையான நாடாக இருந்திருக்கவேண்டும்.

4. மன்னியூர் :—

இவ்வடபரிசார நாட்டில் வெகு பண்டைக்காலம் முதல் சிறப்புற்ற ஊர் மன்னியூராகும். இவ்வூரினை "வடபரிசார நாட்டு மன்னியூர்" என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வூரில் ஆலயம் தெருக்கள், பலவகுப்பார்கள் வாழும் ஊர்ப்பாகங்கள், குளங்கள் முதலியவைகள் இருந்தன. குடிமக்களில் சிவப்பிராமணர்கள், வேளாளர்கள், கைக்கோளர்கள், குயவர், நட்டுவர், தேவரடியார், பூலுவர், கொல்லர், முதலிய பல வகுப்பினர் குடியேறியிருந்தார்கள்.

அரசனுடைய பிரதிநிதிகளான காணியாளர்களும், சாமந்தர்களும், முதலிகளும் இருந்தார்கள். நன்செய், புன்செய் நிலங்கள் நிறைந்து இருந்தன. குளங்களிலிருந்து நீர்பாய்ந்து நாடு மிகச் செழிப்படைந்து இருந்தது.

5. ஆலயம் :—

இவ்வூரில் பண்டையச் சிவாலயம் ஒன்று இருக்கின்றது. இதிலுள்ள கல்வெட்டுகள் கி. பி. 1004 முதல் அரசாண்ட கோக்கலி மூர்க்கன் காலம் முதல் இருக்கின்றபடியால் இவ்வாலயம் கி. பி. 1000-த்திற்கு முந்தியே இருந்திருக்கலாம் என்று ஊகிக்கவேண்டும். கோக்கலிமூர்க்கனுக்கு முந்திய சாசனங்கள் நமக்குக் கிடைக்காததினால் அதற்கு முந்தி எவ்வளவு நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வாலயம் ஏற்பட்டதோ என்று நாம் அறிவதற்கு நமக்குக் கல்வெட்டு ஆதாவுகள் இல்லை. ஆனால் "சோழன் பூர்வ பட்டயம்" என்ற ஒரு கையெழுத்துப் பிரதியில் இவ்வூரின் பெயர் சொல்லியிருக்கக் காண்கிறோம். அந்நூலை ஆராய்ச்சிசெய்து பார்க்கும்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம்—அதாவது 825 கி. பி. யில் இவ்வாலயம் இருந்திருக்கவேண்டுமென்று ஒருவாறு கூறலாம்.

6. மூர்த்திகள் :—

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூலஸ்தான மூர்த்திக்கு 'மன்னியூர் ஆளுடையார்,' 'மன்னியூர் பரமேஸ்வரர்,' 'மன்னியூர் ஆழ்வார்,' 'மன்னியூர் ஆண்டார்,' 'மன்னியூர் ஆவுடையார்' முதலான பல பெயர்கள் கல் வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பெயர்களால் மன்னியூரிலுள்ள ஈசுவரன் என்ற ஒரு பொருள் கிடைக்குமேயன்றி, வேறொரு சிறப்புப்பெயரும் நமக்குக்கிடைக்காது. ஆகவே, மூர்த்தியின் பெயர் ஊரைப்பொருத்து இங்கு இருக்கிறது. இனி அம்மன் பெயர் அருந்தவச் செல்வி என்று 598/22, 634/22 என்ற கல்வெட்டுகளில் அறிகிறோம். அக்கல்வெட்டுகளில் ஒன்றில் "திருக்காமக்கோட்டத்து நாச்சிமாரில் அருந்தவச் செல்வி" என்று கண்டிருப்பதால், ஒன்றுக்கு மேல்பட்ட அம்மன்கள் இருந்திருக்கலாமென்று ஊகிக்க முடியும். இனி, இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்த மற்றைய மூர்த்தங்களின் பெயர்களைக் குறிப்போம்.

1. இடங்கை நாயகர் (590/22) இம்மூர்த்தியைக் கைக்கோளர்கள் எழுந்தருளிவித்தார்கள். (இப்பெயர் கொண்ட மூர்த்தி பேரூர் அழகிய சிற்றம்பலத்தில் இருந்ததாகவும் அதன் கல் வெட்டுகளால் அறிகிறோம்.)

2. கூத்தாடு தேவர் (602/22) (பேரூர்ச்சாசனங்களில் இப் பெயர் நடராசர்க்கு உண்டு).

3. வடுகப்பிள்ளையார் (599/22) (வடநாட்டுப் பிராமணர் ஒருவர் வழிபட்டதனால் இப்பெயர் வந்திருக்கலாம்).

7. திருவிழாக்களும் கட்டளைகளும் :—

ஆலயத்தில் எழுந்தருளியிருந்த பல மூர்த்தங்களுக்கும் அவ்வப் போது நித்திய நைமித்தியங்கள் நடைபெற்றுவந்தன. நித்தியங் களில் சந்தியா தீபம் வைத்தல், திருவிளக்குப் பிடித்தல், பூத பலியிடல், பூஜை செய்தல், அமுது படைத்தல், தேசாந்திரிகளுக்கும் ஆண்டிகளுக்கும் அமுது படைத்தல் முதலியவைகள் நடைபெற்று வந்தன. நைமித்தியங்களில் மாதத்திருவிழா, கட்டளைக்காரர்களுடைய திருநாள் பூஜை, கார்த்திகைத் திருவிழா, வைகாசித் திருவிழா, ஞாயிற்றுக்கிழமை பிரதக்ஷணம், ஞாயிற்றுக்கிழமை அன்னதானம், சனிக்கிழமை எண்ணெய் முழுக்கு முதலியவை நடைபெற்றன. இத் திருவிழாக்களும், கட்டளைகளும் குறிக்கப்பட்டிருந்தபோதிலும் மற்ற ஆலயங்களைப்போல் ஏனைய விழாக்களும் இவ்வாலயத்தில் நடைபெற் றிருக்கலாம்.

8. தானங்கள்.

இவ்வாலயத்தில் திருவிழா, திருப்பணி, முதலியவை நடைபெறு வதற்காகப் பல பெரியார்கள் தானங்கள் செய்திருக்கின்றார்கள். அவ் விதம் தானம் செய்தவர்களில் சிலர் தங்கள் பெயர்களைக் குறித்து வைத்திருக்கிறார்கள். சிலர் ஊர்ப்பொதுவாகத் தானஞ்செய்திருக் கிறார்கள். அவற்றின் சாராம்சங்களை மாத்திரம் எழுதுவோம்.

| | அரசன். | ஆண்டு. | தானம் செய்தவர். | தான விவரம். | கல்வெட்டு. |
|---|---|---|---|---|---|
| 1. | கோக்கலி மூர்க்கன் (1004—1045) | 2 | மன்னியூர், கங்கைப்பள்ளி, கருவலூர் ஊரார்கள் | விளக்குப்பிடிக்கவும், தீபம் கொளுத்தவும் தானம் செய்தது | 591/22 |
| 2. | ,, | 2 | புலியூர் | எலகை, உகவை முதலிய வரிகள் தந்தது | 597/22 |
| 3. | ,, | 3 | வானவர்மயன் | அரிசி, பால், தயிர், கறி முதலியன | 596/22 |
| 4. | ,, | 4 | விளத்தூர்ச்சிலமண்டை (வியாபாரி) | சந்தியாவிளக்கு எரிக்கத் தானம் | 593/22 |
| 5. | ,, | 15 | பழையாற்று வியாபாரி | — | 592/22 |
| 6. | ,, | 27 | கவயன்புத்தூர் புள்ளன் | அடியார்களைக்கொடுத்தது தன்போல் ஓர் உருவம் அமைத்தது. பெண்வடிவ விளக்கு தந்தது | 594/22 |
| 7. | ,, | — | நம்பிகள் | ஓலக்கக்கூடம் கட்டினது | 595/22 |
| 1. | குலோத்துங்கச் சோழன் (1149-1182) | 4 | சேரமான் தோழன் | ஆண்டிகளுக்கு 5 ஓடு கொடுத்தல் | 620/22 |

| | அரசன். | ஆண்டு. | தானம் செய்தவர். | தான விவரம். | கல்வெட்டு. |
|---|---|---|---|---|---|
| 2. | குலோத்துங்கச் சோழன் (1149-1182) | 5 | ஆண்டான் கறுத்தன் | சந்தியாதீபம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ கழஞ்சு | 610/22 |
| 3. | ,, | 7-ஐப்பசி | சிவப்பிராமணர் அதுவரை கொண்ட தானங்கள் | 129 விளக்கு | 618/22 |
| 4. | ,, | 7-கார்த்திகை | சிவப்பிராமணர் பொன் கொண்டது | 10 விளக்கு | 619/22 |
| 5. | ,, | 7-மார்கழி | வாணியன், கேசன் இருக்கன் | சந்தியாதீபம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ கழஞ்சு | 608/22 |
| 6. | ,, | 7 | — | ரோட்டு, மாலை இவைகளுக்கு 15 பொன் | 636/22 |
| 7. | ,, | 8 | பெருமாள் சாமந்தர் | சந்தியாதீபம் 1 | 612/22 |
| 8. | ,, | — | வண்டிகொட்டி வீரசோழன் | ஷை | 605/22 |
| 1. | வீரசோழன் (1183—1206) | 19 | அரசர் ஓலை தந்தது | வீரசோழநல்லூர் தேவதானம் | 613/22 |
| 2. | ,, | 23 | மதுராந்தக சதுர்வேதி மங்கலச்சபை | திருப்புதியது, கார்த்திகை, வைகாசிப் பூ. மூ. | 629/22 |
| 1. | வீரராஜேந்திரன் (1206—1252) | 7 | கைக்கோளரில் அவிநாசி | சுவாமிக்கும் அம்மனுக்கும் படித்தரம் | 634/22 |
| 2. | ,, | 13 | கோக்கிழானடிகள் பெண்டு மல்லிகேசி | சந்தியாதீபம் | 601/22 |

| | அரசன். | ஆண்டு. | தானம் செய்தவர். | தான விவரம். | கல்வெட்டு. |
|---|---|---|---|---|---|
| 3. | வீராரஜேந்திரன் (1206—1252) | 13+1 | பாரசிவரில் பெரியான் கத்தி | சந்தியாதீபம் 1 | 582/22 |
| 4. | ,, | 14 | வெள்ளாளன் புல்லி | ஞாயிற்றுக்கிழமை பிரதக்ஷணம் கறியமுது | 622/22 |
| 5. | ,, | 14 | — | சந்தியாதீபம் 1 | 633/22 |
| 6. | ,, | 14+1 | பரமானந்த தேவன் | வடுகப்பிள்ளையாருக்கு அமுதுபடி | 599/22 |
| 7. | ,, | 17+1 | படைவீட்டு வியாபாரி | மாக்கறி முதலியன 9 அச்சு | 606/22 |
| 8. | ,, | 21+1 | பிறைசூடும் பெருமாள் | ஞாயிற்றுக்கிழமைதோறும் அரிசி, பருப்பு, நெய் | 585/22 |
| 9. | ,, | 22 | கைக்கோளர் கேசியகங்கன் | சந்தியாதீபம் | 615/22 |
| 10. | ,, | 23 | கைக்கோளரில் தனபால ராயன் | தீபம் 1 | 614/22 |
| 11. | ,, | 27 | கங்கதேவன் | அச்சு 2½ | 581/22 |
| 12. | ,, | 28 | மாங்காட்டு நாராயணன் | அரிசிக்கு 10 அச்சு | 609/22 |
| 13. | ,, | 29 | ஆனந்தபோசன் | தேசாந்திரிகளுக்கு அன்னம் | 604/22 |
| 14. | ,, | 29+1 | பூளுவவூரார்—கச்சிராயர் தருமம் | எண்ணெய்க் காப்பு | 611/22 |

| | அரசன். | ஆண்டு. | தானம் செய்தவர். | தான விவரம். | கல்வெட்டு. |
|---|---|---|---|---|---|
| 15. | வீரராஜேந்திரன் (1206—1252) | 29+1 | நச்சினார்க்கினியன் | திருப்பள்ளி எழுச்சிக்கு அரிசி வகையரு | 625/22 |
| 16. | ,, | 29+6 | கைக்கோளர் சேனாபதிகள் | இடங்கை நாயகருக்கு அமுதுபடி | 590/22 |
| 17. | ,, | — | — | திருமஞ்சனம் 12 கலம் | 628/22 |
| 1. | விக்கிரம சோழன் (1255-1263) | 3 | மகாதேவபட்டன் | பழஞ்சலாகை 15 விளக்குக்காக | 589/22 |
| 2. | ,, | 4 | இராமன் மருதன் | சந்தியா தீபம் | 623/22 |
| 3. | ,, | 5 | வீராணதேவன் | கூத்தாடுதேவர் சன்னிதியில் தீபம் | 602/22 |
| 4. | ,, | 5 | சேவூர் கைக்கோளன் கரிகாலன் | இரண்டு விளக்குகளுக்கு $2\frac{1}{2}$ கழஞ்சு | 603/22 |
| 5. | ,, | 8 | முனையதரையன் | பழஞ்சலாகை அச்சு 6 | 586/22 |
| 6. | ,, | 9 | மாலன்மனைக்கிழத்தி கௌரி | தீபம் 2 க்கு 2 பணம் | 583/22 |
| 7. | ,, | 9 | தேவன் பொத்தி | சந்தியா தீபம் 1 | 621/22 |
| 8. | ,, | 14 | துளுவநாயகன் அத்தெம்புநாயகன் | தீபம் 1 | 616/22 |
| 9. | ,, | 14 | துளுமுதலி நாராயண தேவன் | தீபம் 1 | 617/22 |
| 1. | கோனேரின்மை கொண்டான் | 2 | பாரசிவன் புண்டரீகன் | மத்தளம், நட்டுவக்காணி | 627/22 |

| | அரசன். | ஆண்டு. | தானம் செய்தவர். | தான விவரம். | கல்வெட்டு. |
|---|---|---|---|---|---|
| 2. | கோனேரின்மை கொண்டான் | 4 | திருவோலை, ராஜேந்திர மூவேந்திர வேளான் | பூஜை திருவறம் திருப்பணி | 598/22 |
| 3. | ,, | 15 | திருவோலை, எல்லாம் வல்ல சோழ மூவேந்த வேளான் | குளமும் நீர்ப்பாய்ச்சலும் | 588/22 |
| 4. | ,, | 15 | சோழகுல மாணிக்க மூவேந்த வேளான் | வரிகள் தானம் உரிமைகள் தந்தது | 631/22 |
| 5. | ,, | 15+7 | வானவராயதேவன் | அச்சு 95 | 584/22 |
| 6. | ,, | 21 | சோழகுல மாணிக்க மூவேந்த வேளான் | வியாழபல சோழநல்லூர் தேவதானம் | 630/22 |
| 7. | ,, | 24 | ,, | சத்திமங்கலம் தேவதானம் | 632/22 |
| 1. | வீரபாக்கிரம சோழன் | — | ஜெயங்கொண்டசோழ பிரம்மாராயன் | விளக்கு எரிக்க | 624/22 |
| 1. | வீரபாண்டியன் | 88 | வெள்ளாநாட்டார் | வெள்ளைப்பாடி தானம் | 635/22 |
| 2. | ,, | — | பூலுவர்குடி | வரிகள் தானம் | 620/22 |
| 1. | வீரவள்ளாளதேவர் | — | — | பணம் 12 | 600/22 |
| 1. | அரசன்பெயர் தெரியாதவை | — | எல்லாம் வல்ல சோழன் | பழஞ்சலாகை 2 அச்சு | 587/22 |
| 2. | ,, | 15 | பழையாற்று மனிதன் | — | 592/22 |
| 3. | ,, | — | கைக்கோளரில் அவனியாராயன் | நாரைக்காளம் 1 தந்தது | 607/22 |

9. வரிகள் :—

தற்காலத்தைப்போலவே முற்காலத்திலும் அரசாங்கத்தார் ஜனங்கள்மீது பலவித வரிகளை ஏற்படுத்தி அவைகளை அரசியல் இறைகளாகப்பெற்றுவந்தார்கள். அவ்வரிகள் பலவிதமாக இருந்தன. அவ்வரிகளைக் கிராமச் சபைகளோ அல்லது கிராமாதிகாரிகளோ வசூல் செய்து அரசியலார்க்கு அனுப்பிவைப்பார்கள். சில சமயங்களில் அவ்வரிகளைத் தேவதாயமாகவோ அல்லது பிரமதாயமாகவோ தானம் கொடுப்பதுண்டு. அப்படிச் செய்யும் பக்ஷத்தில் அவ்வரிகளைத் தேவதாயமானால் ஆலயத்து அதிகாரிகளும் பிரம்மதாயமானால் தானம் பெற்ற பிராமணனும் வசூலித்துக்கொள்வார்கள். அரசாங்கத்தார் இவ்விதத் தானங்களைச் செய்யும்போது இன்னின்ன வரிகளை இன்னின்னார் பெற்றுக்கொள்ளவேண்டியதென்று எழுதிவைப்பதுண்டு. மன்னியூர் உடையார் ஆலயத்தில் இவ்விதமான வரிகளின் பெயர்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை எழுதுவோம், “இறவு, புரவு, சிற்றாயம், எலகை, உகவை, தண்டக்குற்றம், சுமை, சுங்கம், சாரிகை, மன்றுபாடு முதலிய 360 குடிமைப்பன்மை” என்று 632/22ல் கண்டிருக்கிறது. இவைகளில் பல பெயர்களின் பொருள் தெரியவில்லை. சில நிலங்களின் பேரிலும் சில குற்றம் செய்யும் மக்களின் பேரிலும் ஏற்படுத்தப்பட்டன. இவைகளைத் தவிர சில சமயங்களில் சில வகுப்பார்கள் சுயேச்சையாக வரிகள் விதித்துக்கொண்டு அவைகளை ஆலய பரிபாலனத்திற்குத் தருவதுண்டு. முக்கியமாக நெய்பவர்கள், கைத்தொழில் புரிபவர்கள், வியாபாரிகள் முதலிய வகுப்பார்கள் இவ்விதமான சுயவரிகளை ஆலயங்களுக்குக் கொடுப்பதுண்டு. இவ்வரிகளைத் தவிர தனிமனிதர்களும் ஆலயங்களுக்கு ஒப்பந்தப்படி தாங்கள் கோரிக்கொண்ட சாக்குகளைக் குறித்த காலங்களில் தருவதாக ஏற்றுக்கொள்வதுண்டு. அவ்வித ஒப்பந்தங்களுக்காக நிலங்களையும் ஒப்பிக்கொடுப்பதுண்டு.

10. நாணயம் :—

கொங்கு சோழர் காலத்தில் பலவித நாணயங்கள் வழங்கி வந்தன. அவைகள் உருவம் இன்னவிதமென்று இப்போது நமக்குத் தெரியாவிட்டாலும் இவ்வூர்ச் சாசனங்களால் அவைகளின் பெயரும் மதிப்பும் நாம் ஒருவாறு அறியக்கூடும். அக் கல்வெட்டுகளில்கண்ட

பெயர்கள் கழஞ்சு, அச்சு, பழஞ்சலாகை அச்சு, வராகன் பணம் சீயக்கி என்பவைகள். இவைகள் பொன்னால் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், 'பொன் கழஞ்சு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு விளக்கு வைப்பதற்கு $1\frac{1}{4}$ கழஞ்சு கொடுக்கப்பட்டதென்று பத்து கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கின்றது. மற்றொரு கல்வெட்டில் (581/22) இரண்டு விளக்குகளுக்கு $2\frac{1}{2}$ அச்சு கொடுக்கப்பட்டதென்று கண்டிருக்கிறது. வேறிரண்டு கல்வெட்டுகளில் (கோயில்பாளையம்) ஒரு விளக்கிற்கு ஒரு பழஞ்சலாகை அச்சு கொடுக்கப்பட்டதாம். ஆகவே விளக்குகளுக்குக் கொடுக்கப்பட்ட சரக்கு ஒரேவிதமான விலைவாசிகொண்டதாயிருக்கும் பக்ஷத்தில், கழஞ்சும் அச்சும் ஒரே மதிப்புக்கொண்டவை என்று சொல்லலாம். பழஞ்சலாகை அச்சு சிறிது அதிக விலை பொருந்தியது எனலாம். இடிகரைச் சாசனங்களில் வராகன் பணம் சொல்லப்பட்டிருக்கிறது. வராகன் புள்ளிக்குளிகை என்ற பெயரும் காண்கிறோம். மன்னியூர் ஆலயத்து 583/22ல் இரண்டு தீபத்திற்கு 21 பணம் தரப்பட்டது என்று கண்டிருக்கிறது. ஆகவே, ஒரு தீபத்திற்குச் சுமார் 10 வராகன் பணம் பிடிக்கலாம் எனலாம். ஆகவே 8 வராகன் கொண்டது ஒரு கழஞ்சு எனவேண்டும். இவ்வித நாணயங்களைக் கொங்கு சோழர்கள் வழங்கி வந்தார்கள்.

11. அளவைகள் :—

வியாபாரம் செய்வதற்கு முகத்தல் அளவை, எடுத்தல் அளவை எக்காலத்திலும் உண்டு. இவ்வாலயத்துக் கல்வெட்டுகளில் அளவைகளின் பெயர்களை நாம் காண்கிறோம். அரிசி, பருப்பு முதலிய பொருள்களை அளப்பதற்குக் கலம், நாழி, உழக்கு, ஆழாக்கு முதலியவைகளை உபயோகித்து வந்தார்கள். எண்ணெய் அளப்பதற்கும் நாழி, தொட்டி இவைகளை உபயோகித்து வந்தார்கள். 585/22ல் நானாழி அரிசி, உழக்குப் பருப்பு, ஒருபிடி நெய் என்ற சொற்களைக் காண்க. பிடி என்பது திரவப் பதார்த்தங்களுக்கு உபயோகித்து வந்தார்கள் (611/22). மேலும், நிலத்தை அளப்பதற்குக் காணி என்ற அளவை பிரயோகிக்கப்பட்டு வந்தது.

12. வகுப்புகள் :—

அக்காலத்தில் பல வகுப்பார்களின் பெயர்களைக் கல்வெட்டுகளில் பார்க்கின்றோம். ஒவ்வொரு வகுப்பிலும் கோத்திரங்கள் அல்லது

வீட்டுப்பெயர்கள் இருந்தன. பிராமணரானால் கோத்திரம் என்ற பெயரும் மற்றவர்களானால் வீட்டுப் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. சில உதாரணங்கள் கூறுவோம்:—

(1) சிவப்பிராமணர்—வாச்சிய கோத்திரம், காசிப கோத்திரம்.
(2) உத்திரபதி பிராமணர்—விபவ கோத்திரம்.
(3) வேளாளர்—1. புள்ளி. 2. பையர். (இவைகளைத் தவிர கோவில்பாளையம், இடிகரை, ஆலயச் சாசனங்களில் மலையர், மாடை, கருந்தோழி, கொற்றந்தை, சேவாயர், செற்றூர் முதலிய பெயர்களைக் காண்கிறோம். இக்காலத்திலும் அவைகளில் சில பெயர்கள் வழங்கி வருகின்றன.)
(4) பூலுவர்—ஊரவர், மைலர், முட்டை முதலிய பெயர்களும் வருகின்றன.
(5) கைக்கோளர்—ஆமட்டம்கண்டம் தெரிந்த கைக்கோளர் முதலிய உட்பிரிவுகள் இருந்தன.
(6) தச்சர்—
(7) வாணியர்.
(8) குயவர்.
(9) பாரசிவர் முதலிய பெயர்கள்.

## 13. சிவப் பிராமணர்கள்:—

ஆலயங்களில் பூஜை செய்கிற பிராமணர்கள் ஆதி சைவ வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவ் வகுப்பாரைக் கல்வெட்டுகளில் சிவப் பிராமணர்கள் என்று குறித்திருக்கிறார்கள். இவர்களில் முக்கியமானவர்களுக்குக் கோயிலின் மேற்பார்வையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவப்பிராமணர்களில் மேலே குறித்த கோத்திரங்கள் கொண்டவர்கள் மன்னியூர் ஆலயத்தில் வேலைபார்த்து வந்திருக்கிறார்கள். இச் சிவப் பிராமணர்கள் 'பட்டுடை பஞ்சாசாரியர்கள்' என்றும், 'குடங்கொண்டு கோயில் புகுவார்' (610/22) என்றும் கூறப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கோயில் மேல்பார்வை பார்க்கும்போது காணியாளர் என்று சொல்லப்படுவார்கள். கோயில் வருமானங்களை வசூலித்துக் கோயிலுக்குச் செய்யவேண்டிய கட்டளைகளை இவர்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கோயிலுக்கு விடப்பட்ட தானங்களை எல்லாம் இவர்கள் சரியாக இரக்ஷிக்கவேண்டும். பல கல்வெட்டுகளின் இறுதியில் "குடங்கொண்டு கோயில் புகுவார் செய்யவாக.

பன்மகேசுவரர் ரக்ஷை" என்று இவர்கள்மீது ஆணை இடப்பட்டிருக்கிறது. இவ்வாலயத்தில் பணிவிடை செய்துவந்த சில சிவப் பிராமணர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக:—

வீரசோழன். (1183—1206) காலத்தில் வடபரிசார நாட்டுக் கங்கைப்பள்ளிச் சிவப் பிராமணர் வாச்சிய கோத்திரத்து உடையான் பன்றியான விக்கிரமசோழபட்டன், உடையான் சுந்தரன், உடையான் சிறுச்சுந்தரன்.

வீரராஜேந்திரன். (1207—1252) காலத்தில் காசிப கோத்திரம் திருநட்டம் சித்திரமேழிபட்டன், திருச்சிற்றம்பலமுடையான் பன்றி வீரநாராயணன் விக்கிரமசோழபட்டன்.

விக்கிரமசோழன் II. (1255—1263) காலத்தில் கோயில் காணிவாச்சிய கோத்திரத்து வீராணதேவன், காசிப கோத்திரத்துச் சிவலதேவன்.

மேலே சொன்ன பெயர்களில் காசிபகோத்திரத்துச் சித்திரமேழி பட்டன் என்ற பெயர் இடிகரை ஆலயத்திலும் கூறப்பட்டுள்ளது. பல அரசர்கள் காலங்களிலும் இதே பெயர் கூறப்பட்டுள்ளதால் அப் பெயர்கொண்ட சிவப் பிராமணர்கள் இரண்டு மூன்று பேர் இருந்திருக்கலாமென்று ஊகிக்கக்கூடும்.

14. ஏனைய வகுப்புக் காணியாளர்களும் மற்ற பெரியார்களும் :—

சிவப் பிராமணர்களே யன்றி மற்ற வகுப்பார்களிலும் கோயில் காணியாளர்கள் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக, காணியாளர் வீரப்பெருமாள், பெருமாள் ஆண்டார், என்னும் பெயர்களும் (610/22) குறிக்கப்பட்டிருக்கின்றன. குபவர்களில் வெள்ளைப்பாடி திருவையாறுடையான் கோல்கொண்டான் ஆன திருச்சிற்றம்பல வேளான், கைக்கோளரில் ஆமட்டங்கண்டம் தெரிந்தவகையில் ஆண்டான் கறுத்தான், வாணியரில் கேசன் இருக்கன், பாரசிவரில் பெரியான்கத்தி, உத்திராபதி பிராமணரில் விபவகோத்திரத்து அகோர அகோராஸ்த்ரதேவனான பரமானந்த தேவன், ஆமட்டங்கண்ட தெரிந்த கைக்கோளரில் கேசியகங்கன், மேற்படி கைக்கோள சேனாபதிகளில் தனபாலராயன், மலைமண்டலத்துப் பிராமணரில் மாங்காட்டு கண்ட நாராயணன், சிவதவனன் நச்சினார்க்கினியனான செம்பிக்

கண்டிய தேவன், சோழமண்டலத்து பரவையாகத்தப் பிராமணன் மகாதேவபட்டன், வேளாளரில் தேவன்பொத்தி (இவருடைய ஊர் ராஜராஜபுரம்; அதாவது தாராபுரம்) கைக்கோளரில் அவனியாரயன், முதலான முக்கியஸ்தர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. மேலும், அரசர்களிடம் உத்தியோகம் வகிப்பவர்களுக்குப் பெருமாள் முதலி என்று பெயர். அவ்வித முதலிகளில் கடற்றூர் இராமன் மருதன், வல்லங்கிழான் மல்லன் அழகிய சிற்றம்பலமுடையானான முனையதரையன், துளுநாயகரில் அத்தெம்பு நாயகன் வீரசூரியதேவன், துளுமுதலிகளில் கொட்டியான் சோழ நாராயணதேவன், ராஜேந்திர மூவேந்தர வேளான், எல்லாம் வல்ல சோழவேந்த வேளான், சோழ குல மாணிக்க மூவேந்த வேளான், ஜெயங்கொண்ட சோழ பிரம்மா ராயன் முதலிய பெயர்கள் காண்கின்றோம். மேலும், அரசனுடைய சாமந்தரில் ஒருவர் பெயரும் இருக்கின்றது. (605/22) அரசனுடைய மனைக்கிழத்திகள் அதாவது கோக்கிழான் அடிகளின் பெண்டுகளில் மல்லிகேசி என்ற ஒரு பெண்ணின் பெயரும், வடபரிசார நாட்டு சாத்த வியாபாரிகளில் மாலன் என்பவனுடைய மனைக்கிழத்தி கௌரி என்பவள் பெயரும் காண்கின்றோம். மேலேகூறிய பெயர்களில் நச்சினார்க்கினியன் என்ற பெயர் கவனிக்கத்தக்கது. இவனே திருப்பள்ளி எழுச்சிக்குத் தானம் செய்தவன். (திருவாசகம் காண்க.)

15. பண்டாரம் :—

பொக்கிஷம் அல்லது பணம் முதலிய விலை பொருந்திய பொருள்கள் வைக்கும்படியான இடத்திற்கு பண்டாரம் என்று பெயர் வைத்திருந்தார்கள். ஒவ்வொரு ஆலயத்திலும் பண்டாரம் அல்லது பொக்கிஷசாலை உண்டு. இதனைப் பண்டகசாலை எனலாம். ஆலயத்திற்குக் கொடுக்கும்படியான சகல திரவியங்களையும் பண்டாரத்தில் சேர்ப்பது வழக்கம். மன்னியூர்க்கல்வெட்டுகளில் பல தானங்களிலும் கொடுத்த பொருள்களும் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பண்டாரத்தில் ஒடுக்கப்பட்ட பொருளைக் குறித்த காரியங்களுக்குச் செலவு செய்பவர்கள் காணியாளரான சிவப்பிராமணர்களும் குடம் கொண்டு கோயில் புகுவார்களுமே ஆவர். பண்டாரத்தில் எவ்வளவு பொன் சேர்க்கப்பட்டதென்று காணியாளர்கள் கணக்கு வைத்திருக்கவேண்டும். அவ்விதம் அவர்கள் கணக்கு வைக்காமல் போனால் அவைகளைச் சடிதி பார்ப்பதற்காக ஆலயங்

களின் சுவர்களின் மீது கல்லில் அவ்விவரங்களை எழுதி வைப்பது வழக்கம். சில சமயங்களில் முன் கொடுத்த பணத்தையும் பின் கொடுத்த பணத்தையும் கணக்கிட்டுக்கூட்டி மொத்தத்தைக்காட்டி அவ்வரலாற்றை எழுதுவதுண்டு. ஒரு வேளை பழைய கல்வெட்டு மழுங்கிப்போய் இருக்கலாம். அப்போது அதனைப் புதுக்கிக்கணக் கெழுதுவதுண்டு. இவ்விதம் பழைய கணக்கைப் புதுக்கிப் புதிய கணக்கை அவற்றுடன் சேர்த்தி எழுதின வழக்கத்தை 618/22, 619/22, 629/22 என்ற குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகளில் விவரமாகக்காணலாம். பண்டாரக் கணக்குகளைப் பழுது இல்லாமல் பதிவு செய்வதில் முன்னோர்கள் வெகு ஜாக்கிரதையாய் இருந்தார்கள் என்று இக்கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

அரசர்கள் : மன்னியூர் ஆலயக் கல்வெட்டுகளால் பல அரசர் களின் பெயர்களும் அவர்களுடைய செயல்களும் காலமும் நாமறி கிறோம்.

கோக்கலி மூர்க்கன் விக்கிரம சோழன் (1004–1045) இவ்வர சனே கொங்கு சோழர்களில் முதல்வன். இவனே இவ்விராச வம் சத்தைத் தாபித்தவன். இவன் சோழர்களின் பிரதிநிதியாகக் கொங்கு நாட்டிற்கு வந்து மெதுவாகச் சுயேச்சையுற்றுத் தன் பெயராலே அரசியலையும் அரசியல் திட்டங்களையும் ஏற்படுத்தி நடத்தி வந்தான். இவன் காலத்துக் கல்வெட்டுகள் 7 அன்னியூர் ஆலயத்தில் உண்டு. அவைகளில் பெரும்பான்மையானவை பண்டைக்கால எழுத்தாகிய வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வரசன் காலத்தில் கவயன் புத்தூரிலிருந்த (கோவில்பாளையம்) ஒருவன் தன் அடியார் களையும் அவர்கள் மக்களையும் ஆலய வழிபாட்டிற்காக அடிமைகளா கக் கொடுத்ததுமன்றித் தன்னைப்போல ஒரு உருவம் அவ்வாலயத்தில் செய்து வைத்தும் ஒரு பெண் வடிவம் கொண்ட விளக்கை கொடுத் தும் சாசனம் எழுதி வைத்தான். இவ்வரசனுடைய 7-வது ஆண்டில் ஒரு நம்பி என்றவன் திருவோலக்கக் கூடத்தை ஆலயத்தில் கட்டி வைத்தான்.

குலோத்துங்கச் சோழன் : (1169–1183) முன் சொன்ன விக் கிரமனுக்குப் பிறகு சுமார் 100 ஆண்டுகள் வரை கல் வெட்டுகள் காணோம். அவன் பரம்பரையில் வந்த குலோத்துங்கன் காலத்தில்

8 கல் வெட்டுகள் வெட்டப்பட்டன. இவ்வரசனுடைய 4-ம் ஆண்டில் இரவிகேசவனை சேரமான் தோழன் என்பானிடம் ஒரு குயவன் (திருச்சிற்றம்பல வேளான்) பணம் பெற்றுக்கொண்டு அதன் பலிசைக்காக (வட்டி) ஆண்டிகளுக்குத் திங்கள் 5 ஓடு தருவதாக ஒப்புக்கொண்டான். இக்கல்வெட்டில் இரண்டு முக்கிய விஷயங்கள் காணலாம். ஆண்டிகளுக்கு ஓடு கொடுப்பதும் (திருநீலகண்டர் சரிதம் காண்க) அவ்வோடு தானம் தந்த பணத்தின் வட்டியிலிருந்து தருவதும் ஒன்று. முன் காலத்திலும் கடன் கொடுப்பதும் அதற்கு வட்டி தருவதும் வழக்கத்தில் இருந்தது எனலாம். வட்டிக்கு பலிசை என்ற சொல் வழக்கத்தில் இருந்தது. மேலும், தானம் செய்தவர் பெயர் இரவிகேசவன் என்ற சேரமான் தோழன் என்பது. இதனால் இப்பிரபு சோநாட்டவன் என்றும், அவன் சைவாசாரியர் ஆன சேரமான் தோழனான சுந்தர மூர்த்திகள் பெயரைக்கொண்டவன் என்றும் அறியலாம். இவ்வரசனுடைய 7-வது ஆண்டில் ஏற்பட்ட (618/22) கல்வெட்டில் சகரை 1125½ என்று ஆண்டு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது கி. பி. 1203 ஆகும். ஆகவே, இவ்வரசன் 1193 கி. பி-யில் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும். ஆனால் ஏனைய கல்வெட்டுகளின்படி குலோத்துங்கன் 1149-ல் பட்டத்துக்குவந்தான் என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகவே இக்கல்வெட்டில் கிடைத்த வருடம் சரியோ என்பது சந்தேகம். மற்றொரு கல்வெட்டில் குடிகள் சரியாகத் தமது கடமைகளைச் செலுத்தாவிட்டால் பணத்தைப் பண்டாரத்தில் சேர்ப்பிக்கவேண்டும் என்று கண்டிருக்கிறது.

வீரசோழன்: (1183–1206) இவ்வரசன் பிரபலமானவன். இரு கொங்குகளையும் ஆண்டவன். இவ்வரசன் காலத்துக் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்தன. மன்னியூரில் மன்றம் இருந்ததென அவற்றால் அறிகிறோம்.

வீரராஜேந்திரன்: (1207–1252) இவனே கொங்கு சோழர்களில் மிகப்பிரக்யாதி பெற்றவன். இவனுக்கும் 'இரு கொங்கு ஆண்டவன்' என்ற பட்டம் உண்டு. இவன் காலத்துக் கல்வெட்டில் அம்மன் பெயர் அருந்தவச் செல்வி என்று கண்டிருக்கிறது. இவனுடைய அரசியின் வேலைப்பெண் மல்லிகேசி என்பவள் இவ்வூராலயத்தில் சந்தியா தீபம் வைத்துத் தருமம் செய்திருக்கிறாள். இவ்வாலயத்து வடுகப்பிள்ளையாருக்கு வடக்குப் பிராமணர் ஒருவர்

அமுதுபடிக் கட்டளை வைத்தார். மலை நாட்டுப்பிராமணரும் ஒருவர் தானம் செய்திருக்கிறார். ஆகவே வெகு தூர தேசங்களிலிருந்து இந் நாட்டிற்குப் பிரயாணிகள் யாத்திரைக்காகவோ வியாபாரத்திற்காகவோ வந்துகொண்டிருந்தார்கள் எனலாம். இவ்வரசன் 29 ஆண்டில் கச்சிராயர் என்ற ஒரு பிரபு தானம் செய்தார். கச்சிராயர் வம்சம் தென் ஆற்காடு ஜில்லாவில் ஸ்ரீ முஷ்ணத்துக்கருகில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னர் வம்சம். ஆகவே போக்கு வரத்து அக்காலத்தில் அதிகமாக இருந்தது எனலாம். இவன் காலத்தில் ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடப்பட்டது (625/22). அதற்கு உபயமும் இடப்பட்டது. மேலும் படைவீட்டிலிருந்து வந்த ஒரு வியாபாரி அரிசி, மரக்கறி, இலைக்கறி, முறியுரி, உப்பு, மிளகு இவைகளை வாங்குவதற்காக 9 அச்சு தந்து பண்டாரத்தில் ஒடுக்கி, அவைகளைக்கொண்டு திருஞானசம்பந்தநம்பி மடத்தில் அன்னதானம் இடும்படி கட்டளை ஏற்படுத்தினன் (606/22). இக் கல்வெட்டின்படி திருமன்னியூரில் அக்காலத்தில் திருஞான சம்பந்தர் மடம் ஒன்று இருந்ததென்று அறிகிறோம். ஆகவே சைவசமயம் இங்கே மிகவும் பரந்திருக்க வேண்டும். இப்போது அம்மடம் எங்கு போயிற்றோ தெரியவில்லை. முன் குறித்தபடி ஆண்டிகளுக்கேயன்றி தேசாந்திரி (யாத்திரி)களுக்கும் அன்னம் இடுவதற்காக இரண்டுபேர் தானம் செய்திருக்கிறார்கள். 609/22, 604/22. இவ்வூரிலிருந்த பூலுவ வகுப்பாரில் ஊரார் முழுவதும் சேர்ந்து தானம் செய்தது காண்கிறோம்.

விக்கிரமசோழன் II: (1255—63) இவன் காலத்துக் கல்வெட்டுகள் 9 கிடைத்தன. இவைகளில் சிவப்பிராமணர் பெயர்களும் அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் பெயர்களும் குறிக்கப்பட்டன. ஆலயத்தில் கூத்தாடு தேவர் (நடராசர்) சந்நிதி இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கோனேரின்மைகோண்டான்: இப்பெயரால் 7 கல்வெட்டுகள் உண்டு. இப்பெயர் அரசர்கள் வைத்துக்கொண்ட ஒரு பட்டப் பெயர். அனேகமாகப் பெரிய அரசர்கள்தான் இப் பெரும் பட்டம் வகிப்பதுண்டு. குலோத்துங்கன், வீரசோழன், வீரராஜேந்திரன் இம் மூவர்களே இப் பட்டத்தை வகித்து வந்தார்கள். அரசன் நேரில் உத்தரவு செய்தால், அதற்குத் திருஓலை கொடுப்பது என்பார்கள். அவ்வாறு அரசன் நேரில் திருஓலை கொடுத்தால் தன் பெயர்

இட்டுக்கொடுப்பதில்லை. தன் பட்டப் பெயரான கோனேரின்மை கொண்டான் என்று எழுதித்தான் உத்தரவு இடுவதுண்டு. இது அக் காலத்துச் சாம்பிரதாயம். அன்னியூர் ஆலயத்தில் உள்ள 7 கல்வெட்டு களும் ஓலை தந்தவைகளே. அவைகளில் சில முக்கியமானவை. 598/22ல் அம்மன் அருந்தவச்செல்வியின் பூசைக்கும் திருவறத்துக் கும் திருப்பணிக்கும் உதகம் பண்ணிக்கொடுத்தது கண்டிருக்கிறது. மற்றும் கோவன்குளம் என்றும் பிராட்டிக்குளம் என்றும் பேர் கொண்ட ஒரு குளம் இங்கிருந்ததாகக் கண்டிருக்கிறது. இவ்வூர்க் குளத்திற்கு முன்னர் கோவன்குளம் என்ற பெயர் இருந்திருக்க லாம். கோவன் என்ற தலைவன் கோயமுத்தூர் உண்டாக்கினவன் என்றறிய வேண்டும். இனி, ஐந்து கல்வெட்டு உத்தரவுகள் தேவ கன்மிகளுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு நிலம், வரி முத லியவை கொடுத்த விவரம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தேவகன்மிகளில் திருப்பதியம் பாடுவார், (தேவாரப் பதிகம் பாடும் ஓதுவார்) பெயரும் காண்கிறோம். இப்போது இல்லாவிட்டாலும் அக் காலத்தில் தேவாரம் பாடினதும் அதற்கு ஊழியம் ஏற்படுத்தினதும் 630/22ல் காணலாம். மேலும், 632/22ன்படி தேவகன்மிகளுக்கு சத்திமங்கலம் என்ற ஊரைக் கொடுத்து, அதற்கு விக்கிரமசோழ நல்லூர் என்ற புதுப்பெயர் தந்து, அவ்வூரில் வரும் 360 வரிகளையும் ஆலய வழிபாட்டிற்கு அரசன் ஓலை தந்தானும். 630/22ல் தேவதான ஊருக்கு எல்லை கூறும்போது வாநிக்கரைக்குத் தெற்கு என்று வாநி நதியின் பெயரைக் கூறுகிறபடியால் சத்திமங்கலமும் வாநிக்கரைச் சத்தியமங்கலமாக இருக்கலாம். ஆகவே இவ்வூருக்கு 700 ஆண்டு களுக்கு முன் விக்கிரமசோழ நல்லூர் என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் சொல்லுகிறபடி இவ்வூர் 300 வருஷத்துக்கு முன் அவர்களால் ஏற்பட்டதல்ல. இக்கல்வெட்டுகள் ஓலைகளை வெளி யிட்ட மந்திரிகளின் பெயர்களையும் கூறுகின்றன.

வீரபராக்கிரமசோழன்: இவன் இன்னான் என்று தெரியவில்லை. இவன் கல்வெட்டு ஒன்றுதான் இருக்கிறது.

வீரபாண்டியன்: (1265—1285) இவன் கொங்கு பாண்டி யன். சோழவம்சம் க்ஷீணமடையப் பாண்டியக்கிளை ஒன்று இங்கு ஆண்டது. அதில் ஒருவன் இவ்வரசன். இவனுடைய கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன.

வீரவல்லாளன்: இவன் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது.

இனி, அரசன் பெயரில்லாத கல்வெட்டுகள் மூன்றுள்ளன. அவைகளில் ஒன்றில் வெள்ளலூர்க் கைக்கோளன் ஒருவன் நாரைக் காளம் 50 எடையுள்ளதைத்தந்தான் என்று கண்டிருக்கிறது. அது நாரையின் உருவம் கொண்ட ஒரு காளம் (ஊதுகுழல்) ஆக இருக்க வேண்டும். மேலே சொன்ன அரசர்களின் கல்வெட்டுகளைத் தவிர பிற்காலக் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. 3 நூற்றாண்டுக் கல்வெட்டு களைத் தவிர அதற்கு முன்னும் பின்னும் கல்வெட்டுகள் காணோம். காரணம் தெரியவில்லை. இவ்வாலயம் அக்காலத்தில் தான் சிறப் புற்றிருக்கலாம். பின்னர் வந்த மன்னர்கள் நாட்டு மன்னர்களாக இராதபடியினால் இவ்வாலயத்தைப் போற்றாமல் விட்டிருப்பார்கள். வேறு காரணம் கூற இயலவில்லை.

முடிப்புரை: மேலே சொன்ன செய்திகளைத் தவிர இவ்வூரில் ஒரு கிராமச்சபையிருந்ததெனவும் அச்சபையார் கிராம நிர்வாகத்தை யும் ஆலய நிர்வாகத்தையும் கவனித்து வந்தார்கள் எனவும் கல்வெட்டு களால் அறிகிறோம். ஆகவே இவ்வூர் 1000–1300 கி. பி-க்குள்ளாக சிறந்ததொரு ஊராகவும் இவ்வூர் ஆலயம் எல்லாராலும் போற்றப் பட்டதொரு ஆலயமாக இருந்ததாகவும் அறிகிறோம்.

இனி அக்கம்பக்கத்து ஆலயங்களில் உள்ள சாசனங்களை ஆராய்ந்து பார்த்தால், இனியும்பல விவரங்கள் இவ்வூரைப்பற்றிக் கிடைக்கும். அவைகளை இப்போது ஆராய்வதற்குச் சாவகாசம் இல்லாததினால் இத்துடன் இக்கட்டுரை நிறுத்தப்பட்டது.

இவ்வாலயம் முன்போலவே பிரக்கியாதி அடைந்து அக்கம் பக்கத்துச் சிவகோடிகளுக்குச் சமய வழிபாட்டிற்கு ஓர் இலக்காக இருந்துவரவேண்டுமென்ற பிரார்த்தனைக்கு மன்னியூர் ஆண்டவர் அருள் புரிவாராக!

கோவை,
7—6—37.

கோவைக்கிழார்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௧௩ | ௧௨ | ௪ | பும் | யும் |
| ௨௩ | ௬௪ | ௨ | பென்று | யென்று |
| ௩௧ | ௧௫ | ௩ | களுகூ | களுங்கூ |
| ௪௬ | ௧௨ | ௪ | அறைத்தி | அறைந்தி |
| ௪௮ | ௨௭ | ௨ | பாரா | பார |
| ௫௧ | ௪௫ | ௧ | பின் | யின் |
| ௫௪ | ௧௦ | ௩ | திருத் | திருப் |
| ௫௫ | ௧௬ | ௨ | புண | புன |
| ௬௨ | ௩௩ | ௨ | போன்ற | பொன்ற |
| ௬௪ | ௪௯ | ௪ | முனையாடு | முனையடு |
| ௭௮ | ௧௨ | ௧௬ | மாளே | மானே |
| ௭௯ | ௧ | ௪ | ரோன்று | ரோற்று |
| ௯௧ | ௪ | ௪ | மைபபா | மைப்பா. |